பக்கம் 24

# சுடர் ஒளி

விலை 30/-

வாராந்த சஞ்சிகை

மே28-ஜூன் 03/2014







# கொதிக்கும் தமிழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பஞ்சாப்பின் எழுச்சி

இந்த முறை எல்லோரையும் வியப்பால் விழிகளை விரியவைத்த அணியென்றால் அது பஞ்சாப்தான். தன்னோடு மோதிய அணிகளையெல்லாம் பஞ்சாகப் பறக்கச் செய்து வெற்றி மேல் வெற்றியாக அது குவித்தது. முதல் மூன்று வெற்றிகளுக்கு மக்ஸ்வெலும், மில்லரும் காரணமாக இருந்ததால், அவர்களை ஆட்டமிழக்கச் செய்தால் பஞ்சாப்பின் கதையை முடித்துவிடலாம் என்று மற்றைய அணிகள் திட்டம் தீட்டி மக்ஸ்வெல்லையும் மில்லரையும் குறிவைத்து வியூகம் அமைத்தன. ஆயினும் மக்ஸ்வெல் , மில்லர் வீழ்ந்தாலும் பெய்லி, சகா, வாக்ரா என்று எல்லோருமே எதிரணிப்பந்துவீச்சாளர்களைப் பிளந்துகட்டி இந்தமுறை ஐ.பி. எல்லில் அசைக்க முடியாத அணி என்ற பெயரைப் பஞ்சாப்புக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

ஐ.பி.எல் தொடரின் இறுதிக்கட்டம் நெருங்கிவிட்டது. இந்தப்பத்தியை நீங்கள் வாசிக்கும் கணத்தில் இறுதிப்போட்டியில் மோதப்போகும் இரு அணிகளும் எவை யெனத் தெரிய வந்திருக்கும். கிரிக்கெட் உலகில் சர்வதேசப்போட்டிகளை விடவும், ஐ.பி.எல் தொடர் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகி விட்டது. ஏனெனில் தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வரும் இலங்கை-இங்கிலாந்து அணிகள் மோதும் போட்டிகள் பற்றி எவரும் வாய் திறப்பதாகக் காணோம். அந்தளவுக்கு ஐ.பி. எல் மோகம் கிரிக்கெட் உலகைச் சூழ்ந்துவிட்டது. எல்லாம் பணம் செய்யும் மாயம்தான். இந்த முறை ஐ.பி.எல் தொடரில் அதிக கவனத்தை ஈர்த்தவர்கள் ஆஸ்திரேலிய வீரர்கள்தான். மக்ஸ்வெல், பெய்லி, ஜோன்ஸன், வொட்சன், ஸ்ரார்க், மைக் ஹஸி, ஸ்மித் , பால்க்னர், மார்ஷ் போன்றோர் தங்கள் அணிகளை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்ல உயிரைக் கொடுத்து விளையாடினார்கள். ஆசிய மைதானங்களில் ஆஸ்திரேலிய வீரர்கள் சாதிக்க சிரமப்படுவார்கள் என்று இதுவரை சொல்லப்பட்டு வந்த கருத்தை இந்த முறை நடைபெற்ற ஐ.பி.எல் நிராகரித்திருக்கிறது. அதேபோல சொந்த மண்ணில் இந்தியவீரர்கள் பலரும் சாதிக்கத் தவறிவிட்டனர். குறிப்பாக இந்தத் தொடரில் தன் திறமையை நிரூபித்து இந்திய அணியில் இடம்பிடிப்பர் என்று எதிர்பார்க்கப்பட்ட சேவாக், காம்பீர், இஷாந்த் சர்மா, பிரவீன் குமார், பார்த்திவ் பட்டேல் மற்றும் பதான் சகோதரர்கள் எதிர்பார்த்தபடி ஜொலிக்கத் தவறியிருந்தனர். ஓரிரு போட்டிகளில் மட்டுமே இவர்கள் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த முடிந்தது.

## என்ன லாபம்?

முதல் சுற்றுப் பட்டியலில் முதலிரண்டு இடங்களைப் பெறுவதற்கே ஒவ்வொரு அணியும் முயற்சிக்கும். ஏனெனில் வழக்கமான தொடர்களைப் போலல்லாமல் ஐ.பி.எல் தொடரில் 'ப்ளே ஓப்' சுற்று இருக்கிறது. அதாவது புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களையும் பிடிக்கும் அணிகளே அரையிறுதிப்போட்டிக்கு செல்ல முடியும். அதிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகளில் ஒன்று முதலாவது போட்டியில் தோற்றாலும் இறுதிப்போட்டிக்கு செல்ல இன்னொரு வாய்ப்பு உண்டு. மூன்றாம், நான்காம் இடம் பிடித்த அணிகளுக்கிடையிலான போட்டியில் வென்ற அணியுடன் இன்னொரு அரையிறுதியில் அந்த அணி மோதி வென்றால் இறுதிக்கு நுழைய முடியும். எனவேதான் முதலிரண்டு இடங்களைப் பிடிக்க ஐ.பி.எல் தொடரில் அணிகள் போராடுகின்றன.

## ராசியில்லாத பெங்களூர்

சிக்ஸர் மன்னன் யுவராஜ், அதிரடிப் புயல் கெய்ல், ஆக்ரோஷ ஆட்டக்காரர் விராட் கோஹ்லி, எந்தப்பந்தையும் எல்லைக்கு வெளியே அனுப்பக்கூடிய டிவில்லியர்ஸ், துல்லிப்பந்துவீச்சாளர் ஸ்ரார்க் என்று பெரும் நட்சத்திர வீரர்களைக் கொண்டதாக இம்முறை களமிறங்கியிருந்தது பெங்களூர் அணி. அந்த அணியில் உள்ள வீரர்களின் பெயரைக் கேட்டாலே எதிரணிக்கு பேதி போகும். ஒவ்வொரு வீரரும் தனித்து நின்றே வெற்றியைப் பெற்றுக் கொடுக்கும் வல்லமை கொண்டவர்கள். ஆனாலும் அந்த அணி

9 தோல்விகளைச் சந்தித்து , இரண்டாம் சுற்றுக்குள் நுழையும் தகுதியை இழந்தது. சர்வவல்லமை படைத்த வீரர்கள் இருந்தும் பெங்களூர் அணி தோல்வியைச் சந்தித்தமைக்கு பல காரணங்கள் உண்டு.

அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையால் ஆரம்பப்போட்டிகளில் கிறிஸ் கெய்ல் களமிறக்கப்படவில்லை. அத்தோடு எதிரணிகள் மீது அளவுக்கதிமான ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தியதால் அந்த அணிகள் எப்படியும் பெங்களூரை வீழ்த்தியே ஆகவேண்டும் என்ற ஓர்மத்தோடு பதிலடி கொடுத்தன. அத்தோடு விராட் கோஹ்லியின் வியூகங்களும் தவறானவையாகவே அமைந்தன. இவையே அந்த அணியின் வீழ்ச்சிக்கு வித்திட்டன.

## நிருபிக்கத் தவறிய பீற்றர்சன்

மேற்கிந்திய கிரிக்கெட் சபையுடன் முரண்பட்டு அணியில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்றார் கிறிஸ் கெய்ல். கிரிக்கெட் சபையுடன் இருந்த கோபத்தை பந்துகளில் கெய்ல் காட்ட சிக்ஸர்களும், பவுண்டரிகளும் பறக்கத் தொடங்கின. தொடர்ச்சியாக இரண்டு முறை அதிக ஓட்டங்களையும் சிக்ஸர்களையும் குவித்து ஒரேஞ்ச் தொப்பியை தனதாக்கினார் கெய்ல். ஐ.பி. எல் தந்த உற்சாகத்தில் ஏனைய உள்ளூர் மற்றும் கழகப் போட்டிகளில் சூறாவளியாகச் சுழன்றடித்தார். அந்தநேரத்தில் மேற்கிந்திய அணியும் அடிமேல் அடிவாங்க, கெய்லின் திறமை தான் மீண்டும் மேற்கிந்திய வெற்றிக்கு வழிவகுக்கும் என்று உணர வைத்தது. இதனால் அந்த நாட்டுக் கிரிக்கெட் சபை, கெய்லிடம் சமாதானம் பேசியது. அணியில் கெய்ல் மீண்டும் இடம் பிடித்தார்.

கிட்டத்தட்ட இம்முறை கெய்ல் வந்ததைப் போன்று தன் நாட்டு கிரிக்கெட் சபையால் தூக்கி எறியப்பட்ட நிலையில் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்றவர்தான் இங்கிலாந்தின் பீற்றர்சன். மிகத்திறமையான வீரர். ஆனாலும் தன்னுடைய வெளிப்படையான பேச்சால் அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக் கொள்வார். இந்தமுறை ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியாவிடம் தோற்றமைக்காக இங்கிலாந்து அணியால் பலிக்கடாவாக்கப்பட்டு அணியில் இருந்து பீற்றர்சன் நீக்கப்பட்டார். இந்த நிலையில் தான் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டு, டில்லி அணியின் தலைமைப் பொறுப்பும் அவருக்கு வழங்கப்பட்டது.

ஆயினும் அவர் கெய்லைப்போன்று பீனிக்ஸாக மீண்டெழ முடியவில்லை. சராசரியாகவே ஓட்டங்களைக் குவித்தார். எந்தவொரு ஆட்டத்தின் போக்கையும் மாற்றக்கூடிய வகையில் பீற்றர்சன் பிரகாசிக்கவேயில்லை. அதைவிட அதிக போட்டிகளில் தோல்வியடைந்த அணி என்ற பெயரையும் டில்லி அணிக்கு பீற்றர்சனின் தலைமைத்துவம் பெற்றுக் கொடுத்தது. எனவே ஐ.பி. எல்.

தொடரில் சாதிப்பதன் மூலம் மீண்டும் இங்கிலாந்து அணியின் பார்வையைத் தன் பக்கம் திருப்பலாம் என்ற பீற்றர்சனின் கனவு நனவாகாமலே போயிற்று.



## சத்தமில்லாத முன்னேற்றம்

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று சகலவற்றிலும் பலம் பெற்றிருந்த சென்னை சுப்பர் கிங்ஸ் முதல் சுற்று முடிவில் மூன்றாம் இடத்தையே பிடிக்க முடிந்திருக்கிறது. சத்தம் போடாமல் கொல்கத்தா அணி இரண்டாம் இடத்தைப் பிடித்துவிட்டது. முதல் சுற்றுக்கான புள்ளிப்பட்டியலில் பஞ்சாப் அணியும், சென்னை அணியுமே முதலிடத்தைப் பிடிக்க போட்டி போட்டன. இவ்விரண்டு அணிகளும் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றதால் அதிக கவனிப்பைப் பெற்றன. எனவே எல்லோர் பார்வையும் இந்த அணிகளின் மீதே இருக்க, ஆரம்பத்தில் தடுமாறி, அடுத்த சுற்றுக்கு தகுதி பெறுமா என்ற சந்தேகத்தில் இருந்த கொல்கத்தா அணி சென்னையை இறுதிக்கட்டத்தில் பின்தள்ளி இரண்டாமிடத்தையும் தன் வசப்படுத்திவிட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



- அக்கினி குமரன்

# எழுப்பும் கேள்விகள்

தென்னிலங்கை மாத்தறைக் கடற்கரை வீதியில் இந்து மா கடல் அலையோசைகளின் முழக கத்தோடு இந்த வருட போர் வெற்றி விழா கொண்டாடப்பட் டது. காயம்பட்டுத் துடித்த மரண ஓலத்திலும், உயிர் பிரியும் முனகல்களிலும் பெற்ற வெற்றி யின் எக்காளம் அலைகளினு டைய ஆர்ப்பரிப்பில் துள்ளிக் குதித்தது.

பெரும் பொருட் செலவில் இரா ணுவ அணி வகுப்புக்கள் , அலங் காரப் பந்தல்கள் , விசேட போக்கு வரத்து ஒழுங்குகள் ,பல்லாயிரக் கணக்கான பொலிஸாரின் பாதுகாப்பு என கேளிக்கைக ளின் அங்கமாக அந்த விழா மிளிர்ந்தது.

அது போர் வெற்றி விழா!

முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒரு சில நாள்களிலேயே உடல்க ளைப் பிய்த்தெறிந்து. உயிர்க ளைப் பறித்த மனித குலத்துக்கு எதிரான வெற்றி அங்கு பெரு மிதத்துடன் நினைவு கூரப்பட் டது. அது குருதி குடித்துக் கூத் தாடி மகிழ்ந்த ஆனந்தக் களிப்பின் நினைவு. மனிதத்தை ஈவிரக்கமின்றிக் கொன்றவர்க ளின்வெற்றி விழா.

ஆனால் போரில் கொல்லப்பட்ட வர்களுக்கு கண்ணீர் சிந்த வடக்கில் எவரும் அனுமதிக்கப் படவில்லை. இறந்தவர்களை நினைவு கூரக்கூடிய இடங்கள் எனக் கருதப்பட்டவை இழுத்து மூடப்பட்டன. எச்சரிக்கைச் சுவ ரொட்டிகள் சுவர்களை நிறைத்து மிரட்டின. அச்சுறுத்தல் துண்டுப் பிரசுரங்கள் காலடியில் விழுந்து கொடூரமாகச் சிரித்தன. எங் கும் பொலிஸ். இராணுவ ரோந்து நடவடிக்கைகள்.

மே 18 - வடக்கில் மீண்டும் ஒரு போர்க் காலச் சூழலை நிலை நிறுத்தியது.

இத்தனை கட்டுக்காவல்களுக்கிடையிலும், உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் எமது மக்கள் போரில் கொல்லப்பட்ட எமது உறவு களுக்காக உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தவே செய்தனர்.

போரின் நடுவே நின்று காயப்பட்ட எமது மக்களுக்குப் பணியாற்றி உயிர் நீத்த மருத்துவப் பணியாளர்களுக்கு சக மருத்து வப் பணியாளர்கள் முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே சென்று அஞ்சலி செலுத் தினர்.

மாகாண சபை முன்றலில் மாகாணசபை உறுப்பினர்களை சிவாஜிலிங்கமும் , அனந்தி சசிதரனும் , பொது மக்களும் சுட ரேற்றி அஞ்சலி செய்தனர். பொலிஸார் வந்து சுடரை தட்டி விழுத்தி காலால் மிதித்து தமது அநாகரீக நடத்தையைப் பிரகடனம் செய்த போதும் ,அஞ்சலியை மக்கள் நிகழ்த்தி முடித்தனர் .

போரில் இறந்தோருக்கு பிதிர்க்கடன் செய்ய மக்கள் கீரிமலைக்குப் போவது கூட தடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட பிரத்தியேக இடங்களிலும், மக்கள் தேவாலயங்கள்,இந்துக் கோவில்களிலும் வழிபாடு செய்து தங்கள் அஞ்சலிகளையும் செலுத்தினர். பெரும்பாலான வீடுகளில் விளக் கேற்றி அஞ்சலி நடத்தப்பட்டது.

அதே வேளையில் அன்று முழுவதும் ஊட கங்கள் சுற்றி வளைக்கப்பட்டன. உள்ளே வருபவர் போவோர் கடுமையான விசார ணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். மரண அறிவித்தல் விளம்பரம் கொடுக்க வந்த வர்கள் கூட திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஊடகமொன்றின் ஊழியர்கள் இரத்த தானம் செய்ய மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடு கள் கூட தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன. இரத்த வங்கியினரை சில அதிகார பீடங்கள் இரத் தம் சேகரிக்க அனுப்ப மறுத்து விட்டனர். ஆனால் ஊடகப் பணியாளர்கள் அஞ்சலி நிகழ்வை நடத்தத் தவறவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 10 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை இழுத்து மூடப்பட்டதுடன் ,மாணவர்களும் விரிவுரையாளர்களும் படைமுகாமுக்கு அழைக்கப்பட்டு இராணுவத் தளபதியால் அச்சுறுத்தப்பட்டனர். ஆனால் மாண வர்களும் விரிவுரையாளர்களும் பல்க லைக்கழகம் திறந்த அன்றே கைலாசபதி அரங்கில் சுடரேற்றி அஞ்சலி நிகழ்வை நடத்தி, அஞ்சலிப்பைத் தடுக்க முனைந்த வர்களுக்கு செருப்படி கொடுத்தனர்.

ஒட்டுமொத்தத்தில் நீட்டிய துப்பாக்கிகளாலும் , கோலோச்சிய அதிகார வெறியாட்டத் தாலும் எமது மக்களின் உணர்வுகளைத் கட்டுப்படுத்த முடியாது என்பதை பொது மக் கள் பகிரங்கமாகவே பிரகடனம் செய்து விட்டனர். போரில் இழக்கப்பட்ட உயிர்கள் எமது விடுதலைக்கு கொடுக்கப்பட்ட விலைகள்.அது என்றும் அசைக்க முடியாத உறுதி.

அதே வேளையில் மே18 இல் எமது மக்க ளும் மாணவர்களும், நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் சிலரும் காட்டிய துணிகரமான அஞ்சலி முயற்சி கள் எம்மிடையே சில கேள்விகளை எழுப்பு கின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைச் சக்திகளாக தம்மை இணம்காட்டும் சம்பந் தன் , சுமந்திரன்ஷ, விக்னேஸ்வரன் ஆகியோர் இந்த ஏன் இந்த அஞ்சலிப்பு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவில்லை? (மாகாணசபையில் நடைபெற்ற நினை வேந்தலில் கடைசி நேரத்தில் முதலமைச்சர் தலையைக் காட்டியிருந்தார்)

போரில் உயிர் துறந்த அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்துவது கட்சியின் கட்டுப் பாட்டை மீறும் செயல் என நம்புகிறார் களா?. சிவாஜிலிங்கம் , அனந்தி ஆகியோர் மாகாணசபை முன்றலில் அஞ்சலி செலுத்தி யமை தொடர்பாக ஒரு தொலைக்காட்சிக்கு மாகாணசபை அவைத்தலைவர் வழங்கிய கருத்தில் "அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிக் குழப்பம் விளைவிக்கிறார்கள்" எனத் தெரிவித்திருந்தார்.

இப்படி மாகாணசபை உறுப்பினர்களில் பெரும்பாலானோர் இந்த அஞ்சலிப்பு நிகழ்வுகளில் இருந்து எட்ட நின்றது ஏன்? அர்சின் கோபப்பார்வைக்கு ஆளாகி விடுவோமே என்ற அச்சமா?

அதுவுமில்லாவிடில் முள்ளிவாய்க்கால் போரில் எமது உறவுகளைக் கொன்று தள்ளிய இலங்கைப் படைகளுக்கு உறுது ணையாக நின்ற இந்திய அரசின் இலங் கைத் துணைத் தூதுவரின் பிரியா விடை யில் பங்கு கொண்ட காரணத்தால் நேர மில்லாமல் போய் விட்டதா?

இவை மே-18 எழுப்பும் கேள்விகள். இவை சாதாரணக் கேள்விகள் அல்ல! குத்தப்பட்ட குருதியிலும் இழக்கப்பட்ட உயிர்களிலும் தோய்ந்து எழும் கேள்விகள். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமை என்பது தமிழ் மக்களை நேசிக்கும் தமிழ் மக்களின்உரிமைகளுக்குக் அஞ்சாது குரல் கொடுக்கும் தலைமையாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாதவர்களின் மகுடத்துக்கு ஆயுள் மிகக் குறைவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வேல். தர்மா

# சீனாவில் மூண்ட இஸ்லாமிய நெருப்பு

2014 ஆம் ஆண்டு மே மாதம் சீனாவின் உறும்கி நகரில் தீவிரவாதிகள் இரு பார ஊர்திகளை வேகமாகச் செலுத்திக் கொண்டு கைக்குண்டுகளை வீசிக்கொண்டு போய் பொதுமக்கள் நிரம்பிய மரக்கறிச் சந்தையில் மோதி 31 பேரைக் கொன்றனர்.

2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி சீனாவின் மேற்குப் பகுதிப் பிராந்தியமான சின்ஜியாங்கின் தலை நகரான உறும்கியில் "வெள்ளிக்கிழமையில் பள்ளிவாசல்கள் திறக்கக்கூடாது. மக்கள் தமது தொழுகைகளை வீட்டுக்குள் இருந்தே மேற்கொள்ள வேண்டும்" என சீன அரசு உத்தரவிட்டது. ஆனால் அந்த உத்தரவையும் மீறி இரு பள்ளிவாசல்களைத் திறந்து மக்கள் தொழுகையில் ஈடுபட்டனர். உறும்கி நகரில் இதற்கு ஐந்து நாள்களுக்கு முன்னர் நடந்த கலவரத்தில் 156 பேர் கொல்லப்பட்டமைக்கு பள்ளிவாசல்களில் செய்யப்படும் பரப்புரையும், அங்கு வழங்கப்படும் பயிற்சிகளுமே காரணம் என சீன அரசு ஐயப்பட்டே இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

தீபெத்தில் ஒரு இடத்தில் கலவரம் நடந்தால் அந்த இடத்தை வெளித்தொடர்புகளில் இருந்து துண்டித்து ஊடகவியலாளர்கள் உள் நுழைவதைத் தடைசெய்து சீனக் காவல்துறை கடும் நடவடிக்கைகளை எடுக்கும். ஆனால் சின் ஜியாங் பிராந்தியத்தில் சீனாவின் அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் என்றபடியால் மேற்குலக நாடுகளின் ஊடகங்களின் அணுகுமுறை வித்தியாசமாக இருக்கும் என் சீன அரசு கருதியிருக்கலாம். அத்துடன் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் ஹன் சீனர்கள் என்பதால் உண்மை வெளிவந்தால் உய்குர் இனத்தவர்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை நியாயப்படுத்துதல் இலகுவாக இருக்கும் எனவும் சீன அரசு நினைத்திருக்கலாம். அத்துடன் ஜின் ஜியாங் பிராந்தியத்தில் நடப்பவை இரு இனங்களுக்கு இடையிலான மோதல்கள் மட்டுமே. பிரிவினைவாதம் அல்ல என்றும் சீனா வெளியுலகுக்கு காட்ட முயன்றது. இது நடந்தது 2009 ஆம் ஆண்டு. சீனாவின் சின் ஜியாங் பிராந்தியத்தில் உய்குர் என்னும் இஸ்லாமிய இனக் குழுமத்தினர் வசிக்கின்றனர். இவர்களின் பூர்வீகம் துருக்கி எனப்படுகின்றது. இவர்கள் இந்தப்பிராந்தியத்தின் மக்கள் தொகையில் 45 சதவீதத்தினர். ஹன் சீனர்கள் எனப்படும் இனக்குழுமத்தினர் 40 சதவீதம் இருக்கின்றார்கள். இவர்களிடையே அடிக்கடி மோதல்கள் நடக்கும். சீனாவில் உள்ள உய்குர் இனக்குழுமத்தினரின் மொத்த மக்கள் தொகை சுமார் ஒரு கோடியாகும். இவர்களில் பெரும்பாலோனவர்கள் சின் ஜியாங் பிராந்தியத்தில் வசிக்கின்றார்கள். சீன தேசம் எங்கும் இவர்களில் பலர் உணவகங்கள் நடத்துகின்றனர்.

உய்குர் இனத்தின் வரலாறு கிறிஸ்துவுக்குப் பின்னர் ஆறாம் நூற்றாண்டில் ஆரம்பமாகின்றது. சீனாவின் வட மேற்குப் பிராந்தியத்திலும் மங்கோலியாவின் தெற்குப் பிராந்தியத்திலும் இவர்கள் ஆட்சி செய்து வந்தனர். இந்தப்பிராந்தியம் கோபி பாலைவனம் என அழைக்கப்படும். தற்போது அது சின் ஜியாங் பிராந்தியம் என அழைக்கப்படுகின்றது. உய்குர் இனத்தின் அரசு சீனர்களின் யிங் அரசகுலத்தினரால் 13 ஆம் நூற்றாண்டு தோற்கடிக்கப்பட்டது. பின்னர் உய்குர் மக்கள் வாழும் பிராந்தியம் சீனாவின் அரசுக்குக் கப்பம் செலுத்தும் ஒரு பிராந்தியமாக இருந்தது. 1884 ஆம் ஆண்டு சீனாவின் ஒரு மாகாணமாக அது ஆக்கப்பட்டது. 1928 ஆம் ஆண்டு சின் ஜியாங்க் மாகாணத்தின் சீன ஆளுநர் கொல்லப்பட்டார். பின்னர் அங்கு பிரிவினைக் கோரிக்கை வலுத்து 1933 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் துருக்கிஸ்த்தான் என்னும் தனிநாடு பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் அது மூன்று மாதங்கள் மட்டுமே நீடித்தது. பிரிவினைவாத மோதல்கள் 1949 ஆம் ஆண்டு வரை நீடித்தது. பின்னர் மா சே துங்கின் செம்படையிடம் உய்குர் இனத்தவர் சரணடைந்தனர். 1955 ஆம் ஆண்டு சீனப் பொதுவுடமை ஆட்சியாளர்கள் சின் ஜியாங் மாகாணத்தை சீன அரசின் கீழ் ஒரு தன்னாட்சியுள்ள பிராந்தியம் ஆக்கினர். ஆனாலும் உய்குர் இனத்தனவர்களிடையே ஒரு இஸ்லாமியக் குடியரசு என்பது தணியாத தாகமாகவே இருந்தது. 1967 ஆம் ஆண்டு கிழக்கு துருக்கிஸ்த்தான் புரட்சிக் கட்சி உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு வரை அடிக்கடி வன்முறைகள் நடந்தன.

2009 ஆம் ஆண்டின் பின்னர் அமைதியாக இருந்த சின் ஜியாங் பிராந்தியம் 2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து தீவிரவாதத் தாக்குதல்களால் அமைதி இழந்துள்ளது. முதலாவது தாக்குத உறும்கி நகரத் தொடரூந்து நிலையத்தில் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி நடந்தது. இதில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். 79 பேர் காயமடைந்தனர்.

பிரச்சினை மீண்டும் தொடங்கியமைக்கான காரணங்கள்:

1. சின் ஜியாங்க் பிராந்தியத்தில் சீன அரசு திட்டமிட்டு சீனர்களைக் குடியேற்றி வருகின்றது.

2 உய்குர் மொழியை சீனா திட்டமிட்டு அழிக்கின்றது. பல உய்குர் மொழி ஆசிரியர்களை சீனா வேண்டுமென்றே பதவி நீக்கம் செய்துள்ளது.

3. உய்குர் இனப் பெண்கள் முக்காடு அணிவதையும் ஆண்கள் தாடி வளர்ப்பதையும் சீனா தடைசெய்துள்ளது

4. தற்போதைய சீன அதிபர் சீ ஜின்பிங், உய்குர் இன மக்களின் மீதான இரும்புப் பிடியை இறுக்கியுள்ளார். அங்குள்ள தீவிரவாதிகள் எலிகளைப் போல் அடித்துக் கொல்லப்படவேண்டும் என சீனர்கள் நினைக்கிறார்கள்.

இவையே சீனாவில் பிரிவினை நெருப்பினை மூட்டியுள்ளன. ஆனாலும் சீனாவின் பெரும்படைக்கு முன்னால் இஸ்லாமியர்களின் உரிமைக்குரல் எத்தனை நாளைக்குத்தான் தாக்குப்பிடிக்கப் போகிறதோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டியர் சாம்ராஜ்ஜியம்

ஆசாத்





கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். இதில் நான்கு மாணவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். இவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்த பட்ச பலப் பிரயோகமே மேற்கொள்ளப்பட்டதாக [illegible]மன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களின் இந்தக் குறைந்தபட்ச பலப் பிரயோகத்திலேயே 4 மாணவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட வேண்டியளவுக்குப் படுகாயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் நீதிபதி மாணவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் பொலிஸாரின் குறைந்த பட்ச பலப் பிரயோகம் சம்பந்தமாகப் பகிரங்கமாகவே நீதிமன்றத்தில் தன் அதிருப்தியைத் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி நீதிபதி நேரடியாக தேசிய மருத்துவ மனைக்குத் தானே நேரில் சென்று காயமடைந்த மாணவர்களுக்குப் பிணை வழங்கியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் எவ்வாறு சட்டத்தின் பேரால் பொலிஸார் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என்பதையும் அதற்கு ஒருபோதும் நீதித்துறை துணை போகாது என்பதையுமே தெளிவு படுத்துகின்றன. எனினும் பொலிஸாரைப் பொறுத்த வரையில் இவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு தான். அவர்கள் அரசியல் வாதிகளையும், அதிகார பீடங்களையும் திருப்திப்படுத்த எந்தவொரு அநீதியையும் செய்யத் தயங்காத அளவுக்கு தம்மைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

பேராதனை, காலி, ஜெயவர்த்தனபுர ஆகிய பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த துணை சுகாதார விஞ்ஞான மாணவர்களின் கற்கைநெறிக் காலத்தை 4வருடங்களிலிருந்த 3 வருடங்களாக குறைத்தமையை எதிர்த்துப் பல்கலை மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அந்தப்போராட்டத்தின் தொடர்ச்சியாக மாணவர்கள் கொழும்பில் ஒரு ஆர்ப்பாட்டப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் பொலிஸார் பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக் காட்டி நீதிமன்றில் மனுச் செய்ததன் மூலம் குறித்த பகுதிகளில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டது.

ஆனால் பல்கலைக்கழக மாணவர்கள் அந்தத்தடையை மீறிப் கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். அப்போது அதில் பொலிஸார் எவ்விதத் தலையீடும் செய்யவில்லை.

அதற்கும் ஒரு காரணம் உண்டு. அன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் சர்வதேச இளைஞர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. எனவே அன்று பொலிஸார் துப்பாக்கிகளை நீட்டியிருந்தாலோ அல்லது குண்டாந்தடிகளை உயர்த்தியிருந்தாலோ ,கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்திருந்தாலோ இலங்கை ஜனநாயகத்தின் மகத்துவம் உலகமெல்லாம் பரவி விடும் . எனவே பொலிஸார் அன்று கஷ்டப்பட்டு அமைதி காத்தனர்.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி .திஸநாயக்கா வழமையாக தனது சண்டித்தனப்பாணியில் மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டாலே பேச்சுவார்த்தை நடத்த முடியும் எனத் திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்டார். அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த போது வவுனியா மாவட்டத்தில் அவர் சென்ற வாகனத்தின் மீது சிலர் தாக்குதல் நடத்த முனைந்தபோது ,வாகனத்தை நிறுத்தி அதிலிருந்து இறங்கி தனது சண்டித்தனம் மூலம் அவர்களுக்குச் சவால் விட்டவர். ஒலிம்பிக் வீராங்கனை சுசீந்திகா தன்னை அமைச்சர் தன் அறைக்கு அழைத்தார் என முறைப்பாட்டை முன்வைத்த போது ஒரு மிரட்டல் மூலமே அவர் சுசந்திகாவின் வாயை அடக்கிய பெருமை பெற்றவர். இப்போது அவர் உயர் கல்வி அமைச்சராக வந்த பின்பு தனது சண்டித்தனத்தைப் பல முனைகளிலும் விருத்தி செய்துள்ளார். இன்று இலங்கையில் எந்த ஒரு பல்கலைக்கழகமும் அமைதியான முறையில் கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியாத நிலையே உள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் முதற்கொண்டு பல்கலைக்கழக உபவேந்தர் வரை நிர்வாகத்திறமை, அனுபவம் என்பவை புறமொதுக்கப்பட்டு அரசியல் வாதிகளின் ஆதரவாளர்களாகவே விளங்கி வருகின்றனர்.

அவர்களுக்கு மாணவர்களின் கல்வியை விட அரசியல்வாதிகளைத் திருப்திப் படுத்துவதே முக்கிய பணியாக விளங்குகின்றது. மாணவர்கள் நியாயமான போராட்டங்களை மேற்கொள்ளும் போது பொலிஸார் மூலம் அவற்றை அடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன, அல்லது பல்கலைக்கழகங்கள் இழுத்து மூடப்படுகின்றன.

வருங்காலத்தில் இந்த நாட்டை வழி நடத்தும் அறிவு ஜீவிகளாக உருவாக்கப்பட வேண்டியவர்கள் வெறும் அடிமைகளாகப் பார்க்கப்படுகின்றனர்.இளைய தலைமுறையின் நியாயமான தார்மீக உணர்வும், நியாயங்களைப் பெற அஞ்சாது முன்னிற்கும் துணிச்சலும் குற்றங்களாகவே உயர்கல்வி அதிகார பீடங்களினால் நோக்கப்படுகின்றன. இதுதிட்டமிட்ட வகையில் ஒரு."வால்பிடி" சமூகத்தை உருவாக்கும் துர்நோக்கம் கொண்ட முனைப்பாகும்.

" மாணவர்கள் போராட்டம் தொடருமானால் பல்கலைக்கழகங்களை நிரந்தரமாக இழுத்து மூட வேண்டி வரும்" என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 'தெரிவித்திருந்தமையை நாம் மறந்து விட முடியாது.

அதே வேளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விடயங்களில் இராணுவம் நேரடியாகத் தலையீடு செய்யுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள், மாணவர்கள், பேராசிரியர்கள்,இராணுவமுகாமுக்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தல்களை விடுக்கப்படுதல், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் வளாகத்தில் ஒட்டப்படுதல் என்பன போன்ற வெளித் தலையீடுகளால் மாணவர் மீது ஒரு பயங்கர சூழல் திணிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர்கள், மாணவப் பிரதிநிதிகள்ஆகியோரை வடபகுதி இராணுவத் தளபதி மேஜர்ஜெனரல் உதய பெரேரா பலாலி இராணுவ முகாமுக்கு அழைத்து முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகள் தொடர்பாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இப்படி ஒரு சந்திப்பை நடத்த இவர் யார்? பல்கலை நிர்வாகத்தையும் மாணவர்களையும் தன் இருப்பிடத்துக்கு அழைக்க இவருக்கு என்ன அதிகாரம் உண்டு? இவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரா? அல்லது உயர்கல்வி அமைச்சரா? சண்டியர்களின் சாம்ராஜ்ஜியத்தில் மாணவர்கள் தாக்கப்படுவதோ குறை சொல்லப்படுவதோ, மிரட்டப்படுவதோ ஆச்சரியமான விடயமல்ல. ஆனால் சக்கரவர்த்திகளின் சாம்சாராஜ்ஜியங்களே மக்கள் புரட்சியின் முன்னால் சாம்பல் மேடான வரலாறுகளே நீக்கமற உள்ளன.

கால விரிப்பில் இந்தச் சண்டியர்களின் அட்டூழியங்கள் மட்டும் நிலைத்து விட முடியுமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுப்பின் நிறம் கறுப்பு

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி கடந்த 26 ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டார். முதற்கோணலே முற்றும் கோணல் என்பதுபோல தன்னுடைய பதவியேற்பு விழாவுக்கு அயல்நாட்டு அதிபர்களை அழைத்து தேவையற்ற முரண்பாடு ஒன்றுக்கு அச்சாரம் போட்டுவிட்டார். குறிப்பாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப் ஆகியோரை முடிசூடும் விழாவுக்கு மோடி அழைத்ததால் இந்தியாவின் சில பகுதிகள் கொந்தளிக்கவே செய்தன.

பாகிஸ்தான் எப்போதுமே இந்தியாவின் பரம வைரி. அதனால் எல்லையில் கொல்லப்பட்ட இந்தியச் சிப்பாய்களின் உறவுகள் எங்கள் வீரர்களை கொன்ற பாகிஸ்தான் அதிபர் வரக்கூடாது என்று உண்ணா விரதம் இருந்தார்கள்.

நவாஸ் செரீப்பை விடவும் அதிகளவான எதிர்ப்பு பதிவு செய்யப்பட்டது மஹிந்த ராஜபக்ஷவின் வருகைக் குத்தான்.

தமிழினத்தை கொன்றொழித்த போர்க்குற்றவாளி இந்தியாவுக்குள் காலடி வைப்பதா என்று தமிழகம் கொந்தளித்தது. இதில் முக்கியமான அம்சம் என்ன வென்றால் இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்துபோட்டியிட்ட கட்சிகள் தான் மோடியின் பதவியேற் புக்கு மஹிந்தவை அழைத்தது தவறு என்று தம் எதிர்ப்புக் குரலை முதலில் வெளியிட்டன. அதைப்போலவே தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளும் பதவியேற்பு விழாவில் பங்குபற் றாமல் அதனைப் புறக்கணித்தார். இத்தனைக்கும் எதிர் எதிர்க்கட்சிகளில் இருந்தாலும் எப்போதும் மோடிக்கும் ஜெயலலிதாவுக்கும் பிரிக்கமுடியாத நட்பு இருந்தது. ஆனால் அந்த நட்பைக்கூட ராஜபக்ஷவின் வருகையை எதிர்த்து தூக்கி எறிந்துவிட்டார் ஜெயலலிதா.

ஜெயலலிதாவை விட இன்னொருபடி மேலே சென்று ம.தி.மு.க. செயலர் வைகோ டில்லியில் மஹிந்தவுக்கு கறுப்புக்கொடி மூலம் தன்னுடைய எதிர்ப்பைக் காட்டியதால் சிறை சென்றார். இந்தமுறை ஆட்சிபீடம் ஏறிய பாரதியஜனதாக் கட்சியின் பங்காளியாக தேர்தலில் செயற்பட்டவர் வைகோ. விருது நகரில் அவர் வெற்றிபெற்றிருந்தால் குறித்த பதவியேற்பு வைபவத்தில் ஒரு அமைச்சராக பொறுப்பேற்றிருக்கவேண்டியவர். ஆனால் இத்தனை தூரம் ஆளும் தரப்போடு நெருக்கமான வைகோ கூட தனது பங்காளிக்கட்சியின் அழைப்பையும் அதை ஏற்று வரும் ராஜபக்ஷவையும் கண்டித்து இந்தியத் தலைநகரில் கறுப்புக் கொடிகளோடே தன் மறுப்பை வெளிக்காட்டி உலக அரங்கின் கவனத்தை ஈர்த்திருக்கின்றார்.

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021 567 7609
sudarolijaffna@gmail.com

இவற்றைவிட தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர் நலன் சார் கட்சிகள் பலவும் பெருமெடுப்பில் மஹிந்தவின் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடுசெய்திருந்தன. இதன்போது இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களின் புகைப்படங்களை ஏந்திக்கொண்டு இலங்கை ஜனாதிபதியின் உருவப்பொம் மைக்கு தீமூட்டவும் செய்தார்கள். தமிழக மாணவர்களும் களத்தில் குதித்து இலங்கை ஜனாதிபதியின் வருகையை ஒட்டுமொத்த தமிழர்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்தினார்கள்.

ஆனாலும் மஹிந்தவை மோடியின் பதவியேற்புக்கு அழைத்தமைக்கு அந்தக் கட்சி வேறு பல காரணங்களை அடுக்குகின்றது. "மஹிந்தவை மன்மோகன் சிங் அழைத்தபோது அது கொலை வாளுக்கு ஒப்பானதாக இருந்தது. ஆனால் இப்போது மோடி அழைத்திருப்பது சத்திர சிகிச்சை செய்யும் கத்திக்குச் சமனானது" என்று சொல்லியிருக்கிறது பாரதிய ஜனதாக்கட்சி. அதாவது தமிழர் பிரச்சினையை ராஜ தந்திரவழியில் தீர்ப்பதே மஹிந்தவை தன் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு மோடி அழைத்திருக்கின்றார் என் பதே அதன் அர்த்தம்.

இப்படி இந்தியாவை மட்டுமே நம்பி நம்பி ஈழத் தமிழர்கள் தங்கள் வரலாற் றையே ஒட்டுமொத்தமாகவே தொலைத்துவிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் தமிழகம் மட்டும்தான் எமக்காக குரல்கொடுக்கின்றது. மத்திய அரசின் காதுக ளில் எங்களின் ஓலங்கள் ஒருபோதும் கேட்பதில்லை. என்றாலும் அப்படி கேட்கவைக்கும் முயற்சிகளை வைகோபோன்ற இதய சுத்தியுடன் ஈழத் தமிழர் பிரச்சினையை அணுகுபவர்கள் மேற்கொள்ளவே செய்கின்றார்கள். தாங்கள் ஆட்சிக்கு வருவதற்காகவே கூட்டணி அமைப்பவர்கள் அதிகாரம் கிடைத்த பின்னரும் செய்நன்றியை மறக்காமல் தங்கள் கூட்டணிக் கட்சிகளின் கருத்துக் களுக்கும் காதுகொடுப்பதே நல்லது. ஏனெனில் தேர்தல்கள் பருவம் தப்பாமல் வரக்கூடியவை. கறுப்பின் நிறம் மறுப்பென்பதே மறந்து மக்களின் விருப்புக்கு மாறாக கண்டவர்களோடும் கூடிக்குலாவினால் அடுத்தமுறை ஆட்சிக் கட்டில் என்பது எட்டாக்கனியாகவே எல்லோருக்கும் மாறிவிடும்.



# 2009 ஊழிக்குப் பின் தமிழர்கள்

■ ச.சி.யமுனானந்தா

செம்மொழி எனப் போற்றப்படும் தமிழ் மொழியின் சொந்தக்காரர்கள் வரலாற்றுக் காலம் முழுவதும் அந்நியரால் அழிக்கப் பட்டு வந்தனர். ஆனால் தமிழ் மொழியின் செழுமையோ அதன் பண்பாட்டுப் பரிமா ணமோ மாறாது இயற்கை உற்பவம் காத்து வந்தது. அவ்வாறே 2009 இல் ஏற்பட்ட அழிவுகளையும் தமிழ் மக்கள் எதிர் கொள்ளத் தலைப்பட்டனர்.

தமிழர்களின் அடிப்படை உரிமைகளை நசுக்கிய இலங்கை அரசு, அவர்களின் உரிமைப் போராட்டத்தினை பயங்கரவா தமாகச் சித்திரித்து உலக அனுசரணை யினைப் பெற்றது. ஈற்றில் மிகப்பெரும் இனப்படுகொலையினை நிகழ்த்தி விட்டு சுமார் 150000 தமிழ் மக்களை 2 வருட காலத்தில் கொன்று விட்டு, அவர்களை நினைவு கூரத்தடையுடன் அவமதிக்கும் காட்சியினை உலகம் 5 வருடங்களாகக் கண்டும் வாளாவிருக்கின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசத் தின் ஈழத் தமிழர் தமது பாரம்பரிய பூமியில் சுயாட்சியை நிறுவ எடுத்த முயற்சிகளுக்கு சர்வதேச அனுசரணையுடனும் இராணுவ அடக்கு முறையுடனும் தற்காலிக முற்றுப் புள்ளி வைத்துள்ளது அரசு.

தாம் செய்த அட்டூழியங்களினையும் அதர் மத்தினையும் ஏற்று உணராத அரசுடனோ அல்லது அந்த அரசு சார்ந்த இனத்து டனோ நல்லிணக்கம் என்பது மயானத்தில் நிலவும் மௌனத்திற்குச் சமன். இதனையே இலங்கை அரசு கடந்த காலங்களில் போர் வெற்றி விழாவாக கொண்டாடியது. ஆனால் ஐந்தாவது வருடம் சமாதான வெற்றி விழா வாகக் கொண்டாகின்றது.

இன்று இலங்கையில் சிறுபான்மைத் தமிழர்கள் இராணுவ அடக்குமுறை, பௌத்த மேலாதிக்கம், அரசியல் அடக்கு முறை, சிங்கள மயமாக்கல், நிர்வாக அடக்கு முறை என்பனவற்றினால் மிக வும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

வடக்கு- கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் தொடர்ந்தும் அபகரிக்கப்படு கின்றன. கிழக்கு மாகாணத்தின் 50% மேற்பட்ட நிலப்பரப்பு இலங்கை சுதந்திர மடைந்த பின் சிங்களக் குடியேற்றங்களுக் காக அபகரிக்கப்பட்டு விட்டது. இதனைக் கல்லோயாத் திட்டத்தில் இருந்து அண் மைய மேய்ச்சல் நிலக் குடியேற்றங்கள் வரை அவதானிக்கலாம். அதேபோல் வடமாகாணத்திலும் வவுனியா, முல்லைத் தீவு, மன்னார், போன்ற மாவட்டங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற் கொள்ளப் படுகின்றன. மேலும் உயர் பாதுகாப்பு வலயம், இராணுவப் பாதுகாப்புத் தேவை என பல பிரதேசங்கள் தமிழ் மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்டு உள்ளன. இவையாவும் அநீதியானவை.

வடக்கு கிழக்கு பொது நிர்வாக சேவைக ளும் இராணுவ புலானய்வு அதிகாரிக ளால் அதாவது இளைப்பாறிய இராணுவ அதிகாரிகளாலேயே கையாளப்படுகின் றன.

வெளிப்படையான அரசியல் நடத்தக் கூடிய சூழல் வடக்கு,கிழக்கில் இல்லை. ஒன்றில் இலங்கை அரசின் பின்புலத்தில் அரசியல் நடத்த வேண்டும். அன்றேல் இந்திய அரசின் பின்புலத்தில் அரசியல் நடத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினை மக்கள் தமிழ்த் தேசியத்தின் அரசியல் சக்தியாகக் கருதுகின்றார்கள். ஆனால் அதில் உள்ள முக்கிய தலைவர் கள் தமது நம்பிக்கைக்கு எதிராக நடப்ப தும் மக்களுக்கு தெரியும். ஆனால் கால ஓட்டத்தின் திசையில் அவர்களை எதிர் கொள்ள மக்கள் மௌனம் காக்கின்றனர். துப்பாக்கியுடன் உள்ள எதிரியினை விட சுயநல அரசியல்வாதிகளின் நிழல் ஆபத்து அற்றது என்ற நிலையிலேயே தமிழ் மக்கள் உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் தீர்வி னைப் பெற்றுக் கொள்ள தமிழ் மக்களுக்கு இலங்கையில் நடைபெற்றது இனஅழிப்பு என்பதனை இந்திய நாடாளுமன்றமும், ஐ.நா.வும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட சமூக மொன்று , அதன் பின்னான காலத்தில் எவ்வாறு தனது அரசியல் அபிலாசை களை மீட்டெடுக்கலாம் என்பதனை அனைத் துலக மனித நேயச்சட்டங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு யாரையும் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இல்லை. ஆனால் தொடர்ந்து தம்மீது இழைக்கப்படும் அநீதிகளில் இருந்து விடுபட்டு, மானிடமுன்னேற்றத்தில் தமது இருப்பினையும் பங்களிப்பினையும் வழங் குவது மிகவும் அவசியம்.

இன்னமும் தமிழர்களைப் பயங்கரவாதிக ளாகவே நோக்கும் அணுகு முறையினை இந்த உலகம் தவிர்க்க வேண்டும். சிங்கள மக்களும் தமிழின அழிவின் ஆழத்தினை உணர வேண்டும். கடல் கோள் வந்த போது என்னருகில் இருந்த சிங்கள பெண் மருத்துவ நிபுணர் ஒருவர் கூறினார்

ஐயோ யாழ்ப்பாணம் முழுவதும் அழிந் தால் நல்லது. ஒரு பிரச்சினையும் இல்லை என்று. இது 2004 ம் ஆண்டு. அதேபோல் 2014 இல் இன்னொரு சிங்கள மருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர் என்னிடம் கூறினார்
"ஜப்பானில் அணுகுண்டு போட்டுத்தான், அமைதி ஏற்பட்டது. அதேபோல் வன்னியில் எவ்வளவு மக்கள் அழிந்தாலும் பரவாயில்லை.எமக்கு அமைதி ஏற்பட்டு விட்டது ".

கற்றறிந்த, புத்திஜீவிகளான சிங்கள மருத்துவ நிபுணர்களே இவ்வாறான இனத்துவேசமான எண்ணங்களைக் கொண்டிருக்கை யில் சாமானிய சிங்கள மக்களின் மனநிலை எவ்வாறானது என்பதனை ஆராய வேண்டிய தேவை இல்லை.

புலிகளைப் பயங்கரவாதிகளாகப் பார்க்கும் உலகம் சமாதானப் பேச்சு வார்த்தையில் அவர்களை முடக்கியே 2008-2009 இல் தமிழின அழிவினைச் செய்தது. அதன் தொடர்ச்சியாகவே தற்போது சிங்கள மயமாதல்களும் பௌத்த விகாரைகள் அமைப்பும் வரலாற்றுத் திரிபுகளும் நிகழ்கின்றன. மத்திய வங்கிக் குண்டு வெடிப்பினை உலகம் மாபெரும் பயங்கரவாதத் தாக்குதலாக கருதுகின்றது. ஆனால் அன்றைய காலத்தில் யாழ். குடா நாட்டில் மக்கள் மீது இதை விட மோசமான இராணுவ நடவடிக்கைகள் நிகழ்ந்தபோது அதை யாரும் கண்டிக்கவில்லை. அப்போது பொது மக்கள் மருத்துவ வசதிகள், தொடர்பாடல் வசதிகள் இல்லாத சூழலிலேயே இந்தத்தாக்குதல்கள் நடைபெற்றன. முள்ளிவாய்க்கால் அனுபவங்கள், தமிழருக்கு யாழ்.குடா நாட்டில் ஏற்படாது இருக்க, மத்திய வங்கித் தாக்குதல் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அன்றேல் முள்ளிவாய்க்கால் போன்று யாழ்.குடா நாட்டிலும் இலட்சக்கணக்கான மக்கள் அன்று அழிக்கப்பட்டு இருப்பர்.

ஆயுத முனையில் எல்லாவற்றையும் செய்யலாம் என்ற மனோபலம் சிங்கள மக்களிடம் ஏற்பட்டு விட்டது. இவற்றுக்கு எதிராக கருத்துக் கூறுவதற்கு தடையாக இராணுவ அச்சுறுத்தல்கள் உள்ளன.

தமிழ்ப் பிரதேசத்தில் சிப்பாய்கள் செய்யும் அடாவடிகளுக்கு அளவு கணக்கில்லை. ஆனால் அவர்கள் விடுமுறையில் சொந்த ஊர்களுக்கு வந்து, பொலிஸ் மீது கை வைக்கும்போது உடனடி மரண தண்டனை விதிக்கும் வகையில் தான் தற்போதைய சமாதானத்தின் வெற்றி உள்ளது.

பல இராணுவ வீரர்கள், மற்றும் இனவாதத்தினைத் தூண்டும் அரசியல் வாதிகள், பௌத்த பிக்குகள் மனநோயாளிகளாகவும், போதைப் பொருள் உபயோகிப்பவர்களாவும், சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்வர்களாகவும் காணப்படுகின்றனர்.

இதனை இலங்கை மருத்துவ உலகமோ மனித உரிமை மேம்பாட்டாளார்களோ கருத்தில் எடுக்கவில்லை. பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டது என்றும், சமாதானம் ஏற்பட்டு விட்டது என்றும் மார் தட்டுகின்றனர. ஆனால் போதைப் பொருள் பாவனையும், பாதாள உலக நடவடிக்கைளும் உண்மையான பயங்கரவாதமாக உருவெடுத்து உள்ளது. விடுதலைப் புலிகளை அழிக்க ஒற்றைக்காலில் நின்ற பாரத அரசு, இன்று தனது தென்கோடியில்-தமிழகத்தில்-கண்ணுக்கு மையிட்டவாறு பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவலைக் கண்காணிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளது.



தற்போது நடைபெறும் சிங்களக் குடியிருப்புக்கள், நில அபகரிப்புக்கள், இராணுவ ஆதிக்கம் என்பனவற்றை எதிர்கொள்ள இந்திய அரசின் பாதுகாப்பு தமிழ் மக்களுக்கு அவசியமாக உள்ளது. ஏனெனில் பாதுகாப்புக் காரணங்களை கூறியே இலங்கை அரசு சட்டம் முதல் நிர்வாகம் வரை தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்கு பின்னடிக்கிறது.

முட்டாள்களிடம் இருந்து நீதியை எதிர் பார்ப்பது முட்டாள்தனம். அதே போல காலம் கடந்த நீதி என்பது அநீதிக்குச் சமன். இதனை முற்று முழுதாக ஈழத்தமிழர்கள் அறிந்து விட்டனர். தமிழ் மக்கள் மீது இனவழிப்பு நடத்தப்பட்டமைக்கான ஏராளமான ஆதாரங்களை சர்வதேசம் கைவசம் வைத்துள்ளது.

அவற்றில் போர் நிகழ்ந்த முறை, மக்கள் மீது எறிகணை, விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட செய்மதிப் படம், சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் அதிர்வுப் பதிவுகள், தமிழ் மக்களுக்கு எதிராகக் கடனாகவும் அன்பளிப்பாகவும் இலங்கைக்கு கொடுக்கப்பட்ட ஆயுத உபகரணங்கள், அவற்றினை செயற்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகள், இராஜதந்திர உதவிகள், தமிழ் மக்கள் கொல்லப்பட்ட காட்சிகள், கைது, சித்திரவதை, பாலியல் கொடுமை இறந்தவர்களின் உண்மையான புள்ளி விபரங்கள் இவையாவும் இன அழிப்பினையே சுட்டி நிற்கின்றன. இவற்றுக்கு மேலாக மூன்று இலட்சம் மக்களின் சுவாசப் பாதையில் இரசாயன நுண் உலோகப் பதார்த்தங்களின் தாக்கம் நிரந்தர ஆதாரமாகத் தேங்கி உள்ளது. இவர்களின் குருதியில் இந்தப்பதார்த்தங்களால் வாழ்தகவை குறைக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது.

இது இன அழிப்புக்கு ஒரு உயிர் வாழும் ஆதாரம். அடுத்து 2003 தொடக்கம் 2009 வரை பிறந்த குழந்தைகளில், வன்னியல் பெரும் வெடிப்புச் சத்தங்களால் மூளை நரம்புகளின் இயற்கையான பரம்பல் பாதிக்கப்பட்டு நிரந்தர மாற்றத்துக்கு உள்ளாகி உள்ளனர். இதனை நவீன மருத்து ஆய்வுமுறைகளால் நிரூபிக்கலாம். இதுவும் ஓர் உயிர் வாழும் மருத்துவ உதாரணமாகும். அடுத்து உயிர் தப்பியவர்களின் உடலில் உள்ள எறிகணைச் சிதறல்கள், குண்டுவீச்சின் சிதறல்கள் என்பனவும் உயிர்வாழும் ஆதாரங்களாகும். அடுத்து ஏற்பட்ட உளத்தாக்கங்களும் சமூக உள மாற்றங்களும் மிகப் பெரிய மாற்றங்களாகும்.

பெரும்அழிவினைச் சந்தித்த சமூகம் மீண்டும் மீண்டும் அழியாது இருப்பதற்கு அச்சமுகம் கல்வியில் முன்னேற வேண்டும். இதற்கு இன்று நவீன தொழில் நுட்பம் எமக்கு கைகொடுக்கும். கணனிக் கல்வி, சட்டக்கல்வி, இராஜ தந்திரக் கல்வி, தமிழ் மொழிக் கல்வி, அறநெறிக் கல்வி என்பவற்றில் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று உலகில் நடைபெறும் விஞ்ஞான ஆராய்ச்சிகளை ஒரு கணப்பொழுதில் கணனிகள் மூலம் எம்மால் பெற்றுக் கொள்ள முடியும். இது எமது 30 வருட போரில் எமக்கு ஏற்பட்ட வெற்றிடத்தினை விரைவாக நிரப்பும்.

இதனை நாம் கடந்த ஐந்து வருடத்தில் அனுபவரீதியாகக் கண்டு உள்ளோம். எனவே நாம் நம்பிக்கையுடன் நன்னெறிகளுடனும் வாழ்வோம்.

எமது அரசியல் தலைவர்கள் இளம் சந்ததியினருக்கு நேர்மையான அரசியலைக் கற்பிக்க வேண்டும். உணர்ச்சி அரசியலை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டு, அதற்கு எதிர் மாறாக நடைமுறையில் செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் எமக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட்டுவிடாது. ஏனெனில் அது சிங்களப் பெரும்பான்மையினரைக் கொண்டது. தமிழ் மக்களுக்கு உதிரித் தீர்வுகள் தேவையில்லை. மாறாக அமைதியாக எமது கல்வியிலும் தொழில்நுட்ப வளர்ச்சியிலும்,பொருளாதார வளர்ச்சியிலும் கருத்தாக இருப்போம்.

இன்று பூகோளமயமட்ட அரசு மற்றும் இலத்திரனியல் அரசு போன்ற மாற்றங்கள் ஏற்படுவதற்கான சூழலே உள்ளது. அந்தநிலையில் தமிழர்கள் கல்வியறிவிலும் தொழில் நுட்ப அறிவிலும் சிறந்த இடத்தினை பெற முயற்சிக்க வேண்டும்.

இராணுவ அடக்கு முறையின் மூலம்முழு இலங்கையையும் பொருளாதாதர ரீதியிலும் அரசியல் ரீதியிலும் தொடர்ந்து கட்டுப்படுத்த நினைக்கும் அரசுக்கு புலிகளின் மீள் உருவாக்கம் என்ற நாடகம் தேவையாக உள்ளது.

ஏற்கனவே மாபெரும் அழிவுகளை 2009 இல் சந்தித்த தமிழ் மக்களுக்கு மீண்டும் மீண்டும் அழிவுகளை ஏற்படுத்துவற்காக இந்த வக்கிர யுக்தி கையாளப்படுகின்றது. இந்த நிலையில் தமிழ் மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த ஐ.நா. அமைதிப்படையின் மூலம் உதவுமாறு இராஜ தந்திர ரீதியில் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதன் மூலமே இலங்கையில் நீடித்த சமாதானத்தினை உறுதிப்படுத்தலாம்.

ஜனநாயகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பன கடந்த 5 ஆண்டுகளில் கட்டுப்படுத்தபட்டதாகவே உள்ளன. ஊடகங்களும் சில சார்பு நிலைகளை எடுத்து உள்ளன. இவை யாவும் எதிர்மறையான சமாதானப் போக்குகளே. எம்மிடையே உள்ள வேறுபாடுகளை களைவதற்கு எமக்கிடையே உள்ள கருத்து முரண்பாடுகளை ஆக்கபூர்வமாக முன் வைத்தல் அவசியம். அதன் மூலமே மாற்றுக் கருத்துக்களை ஆக்கபூர்வ மாக உருவாக்கலாம். இத்தகைய சிந்தனைகளே நடைமுறையில் மனித மேம்பாட்டுக்கான பலனைத் தரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து!

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் மே 16 ஆம் திகதி காலையிலிருந்தே வெளிவரத் தொடங்கிவிட்டன. எடுத்த எடுப்பிலேயே நரேந்திரமோடி அமோக வெற்றியீட்டி ஆட்சியைப் பிடிப்பது உறுதியாகிவிட்டது. ஆனாலும் உத்தியோகபூர்வ முடிவுகள் மாலைதான் வெளியாகின. அதுவரையிலும் முன்னணி என்ற ரீதியிலேயே முடிவுகள் அவ்வப்போதுவெளிவந்துகொண்டிருந்தன. இப்படி நரேந்திரமோடி முன்னிலை பெற்றிருக்கிறார் என்று தெரியவந்தவுடனேயே அவசர அவசரமாக அவருக்குப் பலர் வாழ்த்துச்செய்தி அனுப்பினர். அவர்களில் இலங்கையின் வடமாகாண முதலமைச்சர் சி.விக்னேஸ்வரனும் ஒருவர். இந்தியத் துணைத் தூதுவராக இருந்த மகாலிங்கம் சொன்ன ஒரு தகவல் இந்த வாழ்த்துக்கு காரணம் என்னவென்பதை விளக்குகின்றது.

“இன்றைக்கு வடமாகாணத்தில் கூட்டமைப்பு தலைமையிலான அரசு அமைந்தமைக்கு இந்தியாவே முழுக்காரணம் ” என்று அவர் சொன்னது சரிதான் போல். தான் ஆட்சிபீடம் ஏறுவதற்கு அனுசரணை புரிந்த நாட்டின் புதிய பிரதமருக்கு விழுந்தடித்துக்கொண்டு வாழ்த்துக்கூறியதன் மூலம் தன்னுடைய இந்திய விசுவாசத்தை வடமாகாண முதலமைச்சர் வெளிப்படையாகக் காட்டியிருக்கின்றார். அத்தோடு இன்னொரு நிகழ்வின் ஊடாகவும் அவருடைய இந்திய விசுவாசம் பட்டவர்த்தனமாகியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதராக கடமையாற்றிய மகாலிங்கம் இடமாற்றம் பெற்றுச் சென்றபோது அவருக்கு மே 20 ஆம் திகதி நட்சத்திர விடுதி ஒன்றில் விருந்துவைத்து வழியனுப்பியது முதலமைச்சர் தலைமையிலான வடக்குமாகாண சபை. அந்த விருந்துக்கு முதல் ஆளாக பிரசன்னமாகிருந்தார் முதலமைச்சர்.

வடமாகாண சபை கட்டாயமாக ஒரு நாட்டின் துணைத் தூதருக்கு பிரியாவிடை செய்யவேண்டும் என்ற அவசியம் எதுவும் இருப்பதில்லை. மாறாக வடக்குமாகாண சபை இத்தகைய வழியனுப்பு வைபவத்தை நடத்தியமைக்கு இந்திய விசுவாசமே காரணம் என்று சொல்லப்படுகின்றது. இலங்கை அரசை நம்புவதை விட இந்தியாவை நம்புவதே தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்பதாலேயே இவ்வாறான நடவடிக்கைகள் என்று சிலர் காரணம் சொல்லக்கூடும். சரி அதுவும் உண்மைதான் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் விருந்துகளுக்கு முதல் நபர்களாக ஓடி வருபவர்கள் ஏன் மக்களுக்கு அஞ்சலிசெலுத்தும் நிகழ்வுகளில் பங்கெடுக்க மட்டும் நொண்டிச் சாட்டுகளை சொல்லி பின்னடித்தார்கள்? என்ற கேள்வி தமிழ் மக்களிடையே விஸ்வரூபமாக எழுந்திருக்கிறது.

மே மாதம் தமிழர்களுக்கு ஒரு கறுப்புமாதம். இறுதிப்போரில் இந்த மாதத்தில்தான் எம்மினத்தின் தலை எழுத்து முள்ளிவாய்க்காலில் மாற்றப்பட்டது. குருதியும் பிணங்களும் நிறைந்த குறுகிய வெளியில் தமிழ் மக்கள் கொன்றுகுவிக்கப்பட்டார்கள். பாலகர்களும் தப்பவில்லை. பெண்கள் வகைதொகையின்றி வன்புணர்வு செய்யப்பட்டார்கள். எங்கும் அதிகாரத்தின் எக்காளத்தொனி. மே 18 போர் முடிவுக்கு வந்தாலும் அதன் பின்வந்த நாட்களும் தமிழ் மக்கள் துயரை ஏந்தவேண்டியே இருந்தது.

புலிகள் என்ற பெயரில் இளைஞர்களும் யுவதிகளும் காணாமல் போனோர் பட்டியலுக்குள் இழுத்துச்செல்லப்பட்டார்கள். நலன்புரி நிலையங்களுக்குள் மக்கள் ஆடுமாடுகளைப்போல அடைத்து வைக்கப்பட்டார்கள். நாளும் பொழுதும் படைத்தரப்பின் விசாரணை வளையத்துக்குள் வாழவேண்டிய கட்டாயம். இவ்வாறெல்லாம் மாபெரும் துயராற்றை உற்பவித்தது மே மாதம்தான். இந்த மாதத்தில் கொன்றொழிக்கப்பட்ட எங்கள் உறவுகளை நினைந்து அஞ்சலிக்க படைத்தரப்பும் அரசும் அனுமதிக்கவில்லை. இந்த அனுமதி மறுப்பை திமிரோடும் பகிரங்கமாகவே தெரிவித்தது இராணுவம். ஆனால் அப்படி இராணுவம் மக்களுக்கான அஞ்சலிப்பை மறுதலித்த பொழுதுகளில் மோடிக்கு வாழ்த்துரை வரைந்துகொண்டிருந்தார் வடக்கு முதல்வர் . ஒரு மறுப்புக்கூட அவர் வெளியிடவே இல்லை.

அதன்பின்னர் இரண்டு மாகாணசபை உறுப்பினர்கள் இன உணர்வால் உந்தப்பட்டு உறவுகளுக்கு அஞ்சலிக்க முனைந்தார்கள். வடக்கு மாகாண சபை அவர்கள் ஏற்றிய தீபங்கள் சுடர் விட்டு பிரகாசிக்கமுன்னரே எட்டி உதையப்பட்டது காக்கிகளின் கால்களால். தீபம் சரிந்தும் எரிந்தது. கீழே வீழ்ந்த தீபத்தின் நெருப்பு தமிழர்களின் மனதில் கொழுந்துவிட்டபோதுகூட வடக்கு மாகாண சபை முதல்வரோ அல்லது தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் கூட்டமைப்பின் தலைவரோ எந்தவித சலனத்தையும் காட்டவில்லை. ஏதோ இருவரின் தனிப்பட்ட செயல் போலவே இதனை அவர்கள் கண்டுகொள்ளாமல் இருந்தார்கள். இதற்கு ஒருபடி மேலே போய் “ சிவாஜிலிங்கமும் அனந்தியும் கட்சியின் கட்டுக்கோப்பை குலைக்கிறார்கள் ” என்று அஞ்சலிப்பு நிகழ்வுக்கு சாணி அடித்தார் மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம். இந்தக் கருத்தை அவர் சொன்னதுகூட அரசுக்கு ஊதுகுழலாக இருக்கும் தொலைக்காட்சி ஒன்றில்தான்.

அதன் பின்னர் வழமைபோல ஊடகமொன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு இரத்ததானத்தை நடத்த இருந்தது. ஆனால் அதுவும் திட்டமிட்ட காரியங்களால் தடுக்கப்பட்டது. அதன்பின்னர் மே 18 அன்று வடக்கில் உள்ள எல்லா ஆலயங்களும் இராணுவத்தின் சுற்றிவளைப்புக்குள் கொண்டுவரப்பட்டது. அப்போதுகூட கூட்டமைப்பின் தலைமைக்கோ வடக்கின் முதல்வருக்கோ ஒரு எதிர்ப்பை பதிவுசெய்யவேண்டும் என்ற எண்ணம் கிஞ்சித்தும் வரவில்லை. சிலவேளை அடுத்து வரும் நாள்களில் இந்தியத் துணைத் தூதருக்கு நடத்தவிருந்த விருந்துபசார ஏற்பாட்டு மும்முரத்தில் மக்களின் அவலத்தை வடக்கு முதல்வர் மறந்திருக்கக்கூடும். எப்போதுமே பந்திக்கு முந்துதலும் படைக்கு பிந்துதலும் பாதுகாப்பானதுதானே.

பல்கலைக்கழக மாணவர்கள் இந்தமுறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்கக்கூடாது என்று திட்டமிட்டு பல்கலைக்கழகம் திடீரென இழுத்து மூடப்பட்டது. அப்போதும் வடக்கு முதல்வர் மௌன விரதம்தான். மே 18 இற்குப் பின்னர் 20 ஆம் திகதி பல்கலை மீண்டும் திறக்கப்பட்டபோது மாணவர்களை எச்சரிக்கைச் சுவரொட்டிகளே வரவேற்றன. அத்தோடு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பலாலிக்கும் நான்காம் மாடிக்கும் அழைத்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். மாணவர்கள் மிரட்டப்பட்டார்கள். அப்போதுகூட நாட்டின் எதிர்காலத் தூண்களான பல்கலைக்கழக மாணவர்களை படைத்தரப்பு மிரட்டுவதைக் கண்டித்து பொங்கியெழாவிட்டாலும் பரவாயில்லை ஒருவரியில் கண்டன அறிக்கையாவது விடக்கூட வடக்கு முதல்வருக்கு நேரமில்லை. ஆனால் நட்சத்திர விடுதியில் இந்தியத் துணைத் தூதுவருக்கு விருந்து வைக்க முதல் ஆளாகச் செல்ல போதுமான அவகாசம் இருந்திருக்கிறது.

கடைசியாக மாகாண சபை அமர்வின்போது முள்ளிவாய்க்காலில் இறந்தோருக்கு அஞ்சலிக்க வேண்டுமென்று சில உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். ஆனால் அதனை ஆரம்பத்தில் முதலமைச்சர், அவைத் தலைவர், சில மாகாண அமைச்சர்கள், உறுப்பினர் சயந்தன் போன்றோர் எதிர்த்தார்கள். எதற்கு அரசோடு வீண் வம்பென்று கூறி தங்கள் கதிரைகளை இறுக்கிப்பிடித்துக்கொண்டார்கள். நீண்டநேர வாக்குவாதத்தின் பின்னர்தான் கறுப்புப் பட்டி அணிவதற்கும் - மெழுகு திரிகளை ஏந்துவதற்கும் வேண்டா வெறுப்பாக ஒத்துக்கொண்டார்கள். அப்படியிருந்தும் கூட சிலர் அவைக்கு வராமலே அரசின் கோபப்பார்வையில் இருந்து தப்பித்தும் கொண்டார்கள். முதலமைச்சர்கூட கடைசி நேரத்தில்தான் கலந்துகொண்டார்.

இப்போது மாகாண சபையின் அதிகாரக் கதிரையில் இருக்கும் உறுப்பினர்கள் அனைவருமே தேர்தல் காலத்தின்போது மீண்டும் தமிழர் தேசத்தை உருவாக்கப்போவதாக மக்களுக்கு உருவேற்றியவர்கள்தான். அவர்களின் பரப்புரையின் உச்சக்கட்டமாக “மீண்டும் மாவீரர் மயானங்களை அமைப்போம்” என்று முழங்கித் தள்ளினார்கள். “ பிரபாகரன் ஒரு மாவீரன்” என்று முதலமைச்சர் கூடக் கோசமிட்டார். இப்போது அதே அரசியல்வாதிகள்தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக்கூட அனுஷ்டிக்க ஆயிரத்தெட்டு காரணங்களைச் சொல்லி பின்பக்கமாக ஓடுகிறார்கள். அரசுக்கு வால்பிடித்து மக்கள் நலனை மிதித்ததால் எப்படி ஈ.பி.டி.பி.யை தூக்கி எறிந்தார்களோ அதே நிலைமையை தமது கட்சிக்கு ஏற்படுத்தத்தான் வடக்கு முதல்வரும் இன்னும் சிலரும் துடிக்கிறார்கள் போலும்.




கூரையேறி கோழிபிடிக்கவும் மனமற்ற இவர்கள்தான் வானம்ஏறி வைகுண்டம்போய் மாவீரர்மயானங்களை அமைக்கப் போகிறார்களாம். மக்களை அஞ்சலிக்கவே மறுதலிக் கும் இவர்களா விடுதலைக்காக போரிட்ட மறவர்களுக்கு மயானங்களை அமைக்கப்போகின்றார்கள். காலக்கிழவி பொல்லாதவள். அவள் எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள். அவள் சொல்தான் மக்களின் காதுகளில் எப்போதும் ஏறும். அடுத்த தேர்தல் வரும்போது மாவீரர்மயானக் கனவுகளையும் வீரக்கோசங்களையும் இதே அரசியல் வாதிகள் மக்கள் முன் வாக்கு விற்பனைக்காக பரப்பும்போது காலக்கிழவியின் சிரிப்பையும் சுயநலவாதிகளின் வீழ்ச்சியையும் யாராலும் தடுக்கமுடியாமல் இருக்கும்.



■ குறுக்காலபோவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் தாண்டி சுடர் விட்ட தீபங்கள்



■ ஊழியான்

பல்கலையிலே கூடித்திரிந்தவர்களும், அவர்களின் உறவுகளும் கொடிய போரில் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட வேதனையை கொஞ்சமேனும் இறக்கி வைக்க, இறந்தோருக்காக ஒன்று கூடி நினைவேந்துவது பல்கலைக்கழக சமூகத்தை பொறுத்த வரை அஞ்சலிக் கூட்டம்தான் . ஆனால் அரசுக்கோஅது பயங்கரவாதத்துக்கு தூபமிடும் கூட்டம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடக்கக்கூடாது என்ற எண்ணத்தில் சொல்லாமல் கொள்ளாமல் திடீர் விடுமுறை யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மட்டும் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான சூழ்நிலையில் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ தலைவர்களின் பெயர்களை தாங்கிய எச்சரிக்கைச் சுவரொட்டிகள் யாழ் . பல்கலைக்கழக சுவர்களை அலங்கரித்திருந்தன. அதில் சிலருக்கு இறுதிநாள் குறிக்கப்பட்டு விட்டதாக மிரட்டல் பல்லிளித்தபடி இருந்தது.

ஆயினும் எந்த இடர் வந்தாலும் போரிலே உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியே தீர வேண்டும் என பல்கலைக்கழக சமூகம் முடிவு செய்து ,அதற்கான நாளினையும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான 19 ஆம் திகதி கடந்து போனதும், 21ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் மீண்டும் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாக இருந்தன.இந்த நிலையில் 21 ஆம் திகதி தமது உறவுகளுக்கு அஞ்சலிக்க மாணவர்கள் ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கினர். ஆயினும் அதற்கு முதல் நாள் காலை யாழ்.பல்கலைக்கழக ஆசிரிய சங்க தலைவரும், மூன்று விரிவுரையாளர்களும் யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்பு தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டனர். 21 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள முள்ளிவாய்க்கல் நினைவேந்தலைக் கைவிடுமாறு கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் விரிவுரையாளர்களோ "நாங்கள் புலிகளை நினைவுகூரவில்லையே. இறுதிப்போரில் உயிரிழந்த எமது உறவுகளைத்தானே நினைவு கூரப் போகின்றோம். எனவே அதனை நிறுத்த முடியாது" எனத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டனர்.

ஆனால் அவர்கள் கூறுவதை இராணுவத் தரப்பால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. "நீங்கள் விடுதலைப் புலிகளைத்தான் நினைவுகூரப்போகிறீர்கள். அவ்வாறு இடம்பெற்றால் இராணுவம் தலையிடும் . விளைவுகள் விபரீதமாகும் எனக் கடுமையான தொனியில் வார்த்தைகள் இராணுவ அதிகாரிகளின் வாய்களில் இருந்து புறப்பட்டன.

ஆனால் அதற்குச் சற்றும் பயப்படாமல் "நாங்கள் பயங்கரவாதத்துக்கு எந்தக் காலத்திலும் துணைபோனவர்கள் இல்லை. நாங்கள் போரில் கொல்லப்பட்ட உறவுக ளைத் தான் நினைவு கூருவோம்" என கூறிவிட்டு வந்தார்கள் விரிவுரையாளர்கள்.

சாம வழியில் தோற்றுப்போன அதிகாரம் அடுத்து தண்ட வழியைக் கையில் எடுத்தது. 20ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவருக்கு அழைப்பு ஒன்று கிடைத்தது. அடுத்தநாள் காலை 10 மணியளவில் கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு பிரிவில் நடைபெறவுள்ள விசாரணையில் அவர் பங்குபெற வேண்டும் என்று அந்த திடீரென வந்த அழைப்பு கண்டிப்பாகச் சொல்லி நின்றது.

உண்மையில் இந்த விசாரணையின் நோக்கம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுப்பதே தவிர வேறு ஒன்றுமில்லை .

21 ஆம் திகதி பல்கலைக்கழகச் சூழலில் வழமைக்கு மாறாக இனம்தெரியாத நபர்களின் நடமாட்டம். ஆனால் அதையெல்லாம் மாணவர்கள் பொருட்படுத்தவில்லை. எல்லாக் கண்காணிப்புக் கழுகுகளுக்கும் முன்னால் துணிச்சலோடு அவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தார்கள்.

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவரை விசாரணைக்காக நான்காம் மாடிக்கு அழைத்ததால், குறிப்பிட்டபடி முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நடைபெறுமா என்று முதலில் மாணவர்களிடையே ஒரு குழப்ப நிலை ஏற்படவே செய்தது. ஆனாலும் அதிகாரம் மிரட்ட மிரட்ட , மாணவர்களின் எழுச்சியும் பேருருக்கொள்ளும் என்பதை இன்னொரு முறை காட்டவேண்டும் என்று திடசங்கற்பம் கொண்டனர்.முடிவெடுத்த பின்னர் ஏற்பாடுகள் மளமளவென்று நடந்தேஷீன. கைலாசபதி கலையரங்கில் (யாழ்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பிரதான அரங்கு) தான் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஏற்பாடாகியிருந்தது. ஆனால் வழக்கம் போலவே இந்தமுறையும் கைலாசபதி கலையரங்கை நிகழ்வுக்கு வழங்க நிர்வாகம் முதலில் மறுத்துவிட்டது. ஆயினும் மாணவர் சக்தியின் ஓர்மக்குரலுக்கு முன்னால் இன்னொரு தடவை நிர்வாகம் அடிபணிந்து, கைலாசபதி கலையரங்கக் கதவுகளைத் திறந்துவிட்டது.

நேரம் 11.20 .

4ம் மாடியில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர்.யாழ். பல்கலையிலோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்.

ஆனால் நினைவேந்தலில் அதிகாரத்தை இன்னும் ஆத்திரப்படுத்தும் வகையில் ஏதாவது நடைபெற்றால், படைகளின் விசாரணைப் பிடியில் உள்ள ஆசிரியர் சங்கத் தலைவருக்கு ஏதேனும் பாரதூரமான நிலையை ஏற்படுத்திவிடும். எனவே நினைவேந்தலில் உரைகள் நிறுத்தப்பட்டன.

மாணவர்களும், விரிவுரையாளர்களும் கைகளில் சுடர்விடும் தீபங்களை ஏந்தி, இறுதிப்போரில் உயிரிழந்தஉறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர். எல்லோர் விழிகளிலும் அருவியாக வழியத் தொடங்கிற்று கண்ணீர். இறந்து போன உறவுகளை நினைந்து தமிழர்களால் இதைவிட வேறெப்படி அஞ்சலிக்க முடியும். இப்படியான துயரங்களுக்கு ஆயுதமுனையில் தமிழர்சேனை பதிலடி கொடுத்த காலத்தைத் தான் காற்றள்ளிப் போய் விட்டதே.

தங்கள் மிரட்டல் உருட்டல்களையும் மீறி பல்கலையில் அஞ்சலிப்பு நடந்ததை இராணுவத்தால் பொறுக்க முடியவில்லை. எல்லாம் நடந்து முடிந்த பிறகு எப்படி தன் தோல்வியை அதனால் சகித்துக் கொள்ள முடியும்? ஆகவே கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற ரீதியில் புனைவுகளை அவிழ்த்து விடத் தொடங்கியது.

பல்கலைக்கழகத்தில் போரில் இறந்த பொதுமக்களுக்குத்தான் அஞ்சலி செலுத்தியுள்ளனர். எனவேதான் அதனை அதனை நாங்கள் தடுக்கவில்லை என்று அறிவித்ததன் மூலம் தங்கள் தயவால் தான் இந்த அஞ்சலிப்பு நடந்தேறியதாகக் காட்ட இராணுவம் முயல்கிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இராணுவம் குழப்ப நினைத்திருந்தால் விளைவுகள் சிலவேளைகளில் வேறு விதமாக அமைந்திருக்கும். மாணவர்கள் வேறு வகையில் அஞ்சலிக்கும் முடிவை எடுத்திருப்பார்கள்.

உண்மையில் மே18 ஆம் திகதி மட்டும் முள்ளிவாக்கால் நினைவேந்தல் அல்ல. அதற்கு பின் வந்த நாள்களும் தமிழினம் சிலுவையைச் சுமக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அதன் பின்னரும் தமிழர் வாழ்வில் நிம்மதி ஏற்படவில்லை.


கடத்தல்களும்,கைதுகளும்,களை எடுப்புக்களும்,விசாரணைகளும் ,அச்சுறுத்தல்களும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. எனவே முள்ளிவாய்க் கால் நினைவேந்தலை மே18 இல் மட்டுமல்ல மே முழுதுமே மனதில் இருத்தி அஞ்சலிக்கிறது தமிழினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் – 15

சீரடி சாயி பாபா கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் வணங்கப்பட்டு வருகிறார். பாபா நிகழ்த்திய அற்புதங்களை ஹேமாட் பந்த் என்பவர் தொகுத்து எழுதிய புத்தகத்திலிருந்து......



### மானிடப் பிறவியின் சிறப்பு

இவ்வியத்தகு பிரபஞ்சத்தில் கடவுள் பல கோடிக்கணக்கான (இந்து சாஸ்த்திர கணக்குப் படி 84இலட்சம் ஜந்துக்கள்) மோட்சம் , நரகம், நிலம், கடல், வானம், இடைப்பகுதிகள் ஆகிய வைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஜந்துக்களை அல்லது ஜீவராசிகளை உற் பத்தி ( மனிதர்கள், மிருகங்கள் ,பூச்சிகள், தேவர்கள், உபதேவதைகள் உட்பட) செய்தி ருக்கிறார். எவருடைய புண்ணியங்கள் மேம்படுகிறதோ அவர்கள் தங்களின் செய் கைகளின் பலன்களை மகிழ்ந்து அனுபவிக் குந் தோறும் மோக்ஷத்திற்குச் சென்று வாழ் கிறார்கள்.அது முடிந்தபிறகு அவர்கள் கீழே யிறங்கி வருகிறார்கள். தீமைகள் , பாவங்கள் அதிகமுள்ள ஆத்மாக்களோ நரகத்திற்குச் சென்று தங்களின் தீவினைகளின் பலன் களை அனுபவித்து நல்வினை, தீவினை இரண்டும் சம அளவாய் இருப்பின் அவர்கள் மீண்டும் இவ்வுலகில் பிறக்கின்றனர். தங்கள் தங்க ளின் சுயமானமுக்திக்கு உழைக்கும் முயற்சிக்கு மீண்டும் ஒரு வாய்ப்புத் தரப்படும். முடிவாகத் தங்கள் நல்வினை ,தீவினை இரண்டுமே முழுமையாக அகற்றப்படும் போது அவர்கள் சுதந்திரமடைந்து விடுவிக் கப்பட்டவர்களாகிறார்கள். இரத்தினச் சுருக்கமாக உரைத் தால், அவரவர்களின் செய்கைகளுக்கும் நுண்ணறிவு மனப் பண்பாட்டிற்கேற்பப் பிறவிகளைப் பெறுகிறார் கள்.

### மானிட உடம்பின் தனிச்சிறப்பு

நாமனைவரும் அறிந்த படியாக சர்வ ஜீவ ராசிகளுக்கும் நான்கு விடயங்கள் பொது வானதாகும். அதாவது உணவு, உறக்கம், பயம், புணர்ச்சி முதலியவை ஆகும். மனித னுடைய விடயத்தில் அவன் ஒரு சிறப்பான சாமர்த்தியத்துடன் இயற்கையாகவே ஆக்கப் பட்டிருக்கிறான்.அதாவது மற்றெல்லாப் பிறப்பாலும் அடையப்பட இயலாத ஞானத் தின் மூலம் அவன் கடவுள் காட்சியைப் பெற லாம். இக்காரணத்திற்காகவே தேவர்கள், மனிதனது உரிமையை (நிலமையைக்) குறித்துப் பொறாமைப்படுகிறார்கள்.தங்கள் முடிவான விடுதலையைப் பெறுவதற்காக, மானுடர்களாய்ப் பிறப்பதற்கு ஆவல்கொள் கிறார்கள்.

கேவலமான அழுக்கு , சளி, கோழை, அசுத் தம் இவைகளால் நிரம்பியதும் தேய்வு, நோய், மரணம் ஆகியவற்றிற்குக் காரணமாய் உள் ளதுமான இம்மனித உடம்பைவிடக் கேவல மானது எதுவும் இல்லை என்று சிலர் கூறு கின்றனர். இது ஓரளவிற்கு உண்மை என்ப தில் ஐயமில்லை. இவ்வாறான குற்றங்குறை கள் இருப்பினும் , இம்மனித உடம்பின் சிறப் பான மதிப்பு யாதெனில்,"ஞானத்தை அடைய மனிதனுக்கு ஆற்றல் இருக்கிறது என்பதேயாம். மனித உடம்பினால் மட்டுமே, அல்லது அதன பொருட்டே அழியக் கூடிய நிலையில்லாத உடம பின் தன்மையைப் பற்றியும், இவ்வுலகத் தைப் பற்றியும் , புலன் இன்பங்களுக்கு ஒரு வெறுப்பையும் , நித்திய ,அநித்திய வஸ்துக் களைப் பகுத்தறியும் விவேகத்தையும் இங் ஙனமான அதன் மூலம் கடவுளின் காட்சியை யும் ஒருவன் எய்த இயலுகிறது.அதன் அசுத் தத் தன்மைக்காக நாம் உடம்பைப் புறக் கணித்தோமானால் கடவுள் காட்சியைப் பெறும் வாய்ப்பை இழக்கிறோம். அதையே சீராட்டிபுலன் இன்பங்களின் பின்னால் ஓடு வோமானால் அது விலை மதிப்பற்றதாகை யால் நாம் நரகிடை வீழ்வோம். எனவே , நாம் பின்பற்ற வேண்டிய ஒழுங்கான நெறிமுறையானது பின்வருமாறு உடம்பைப் புறக்கணிக்கவோ , விரும்பிச் செல்லமாக பரா மரிக்கவோ கூடாது . ஆனால் முறையாகப் பராமரிக்க வேண்டும். குதிரையில் சவாரி செய்யும் ஓர் வழிப் பயணி , தான்போகு மிடத்தை அடைந்து வீடுதிரும்பும் வரைக்கும் தனது குதிரையை எவ்வாறு பராமரிக்கி றானோ , அதையொப்ப இவ்வுடம்பைப் பரா மரிக்க வேண்டும். இவ்வுடம்பு இவ்விதமாக எப்போதும் வாழ்க்கையின் உச்ச உயர் நோக் கமான கடவுள் காட்சி அல்லது ஆத்மானுபூதி அடையவே உபயோகப்படுத்தப்பட வேண்டும். பல்வேறு ஜீவராசிகளையும் கடவுள் படைத் தார். எனினும் , அவைகளில் எதுவும் அவர் தம் வேலையை அறிந்து பாராட்ட இயலாத தனால் அவர் திருப்திஅடையவில்லை.

எனவே அவர் ஒரு சிறப்பான சாமர்த்திய முள்ள ஜந்துவாக மனிதனைப் படைக்க வேண டியதாயிற்று. 'ஞானம்' என்னும் சிறந்த வரத்தையும் அளித்தார். அவரின் லீலை யையும், அற்புதமான வேலையையும் , சாதுர் யத்தையும் மனிதன் பாராட்ட முயன்றபோது அவர் பெரிதும் மகிழ்ந்து திருப்தி அடைந்தார். இம்மானிட தேகம் எடுத்தது உண்மையி லேயே நல்ல அதிர்ஷ்டமாகும். அந்தணர் குலத்தில் உதிப்பது அதைக் காட்டிலும் நற் பேறுடையது. அதைக் காட்டிலும் மிகச் சிறப் பான அதிஷ்டமானது சாயிபாபாவின் பாதங் களில் தஞ்சம் அடைந்து,சரணாகதி அடையும் வாய்ப்பைப் பெற்றதேயாகும்.

### மனிதனின் முயற்சி

மனித வாழ்க்கை எவ்வளவு அருமையான தென்று உணர்ந்து, மரணம் உறுதி என்று அறிந்து, அது எத்தருணத்திலும் நம்மைப் பற்றும் என்று அறிந்து, நமது வாழ்க்கையின் குறிக்கோளை எய்த, நாம் எப்போதும் விழிப் பாய் இருக்க வேண்டும் .சிறிதளவும் காலம் தாழ்த்தக் கூடாது .ஆகையால் நமது குறிக் கோளை அடையக் கூடியவரை விரைவாகச் செயற்பட வேண்டும். அதாவது மனைவியை இழந்தவன் மறுமணம்புரிந்துகொள்ளக் கொண்டுள்ள மிகுதியான அக்கறை போன் றும், காணாமற்போன தன் மகனை, அரசன் சல்லடை போட்டுத் தேடுவதைப் போன்றும் இருக்க வேண்டும் . எனவே நமது இலக்கை எய்த நம்மிடத்திலுள்ள எல்லா ஊக்கத்துட னும், வேகத்துடனும் நாம் பாடுபட வேண் டும். அதாவது 'தன்னைஉணர்தல்' நமது சோம்பேறித்தனத்தைஅகற்றிவிட்டு தூக்கத் தைக் களைந்து அல்லும் பகலும்நாம் ஆத்மத் தியானம் செய்தல் வேண்டும். இதைச் செய்ய நாம் தவறுவோமானால் நம்மை நாமே மிருக நிலைக்குச் தாழ்த்திக் கெண்டவர்களாவோம்.

### எவ்வாறு செல்வது?

கடவுள் காட்சியைக் தாமே எய்திய தகை மையுள்ள ஞானி அல்லது முனிவர், சத்குரு ஆகிய இவர்களை அணுகுவதே, நமது குறிக்கோளை அடைய மிகச் சிறந்த பயனஅளிக் கக் கூடியதும் துரிதமுமான வழியாகும். மதப்பிரசங்கங்களைக் கேட்டும் மதநூல்க ளைக் கற்றும் அடைய முடியாதவைகளை அம்மதிப்புமிக்க ஆத்மாக்களின் கூட் டுறவால் பெறலாம். சூரியன்மட்டுமேகொடுககும் ஒளியை மற்றெல்லா நட்சத்திரங்களும் சேர்ந்தாலும் கொடுக்க இயலாததைப் போன்றே , புனித நூல கள் அனைத்தும் , மதப்பிரசங்கங்கள் அனைத தும் சேர்ந்து கொடுக்க இயலாத , ஆத்ம விவே கத்தை சத்குரு நமக்கு அளிக்கிறார். அவரின் அசைவுகளும் சாதார ணப் பேச்சும் நமக்கு மௌன உபதேசத்தை நல்குகிறது. மன்னித் தல் , அடக்கம் உடைமை, அவாவின்மை , தர்மம்,உதாரகுணம்,மனம், மெய், இவற் றின் கட்டுப்பாடு, அஹங்கார மற்ற தன்மை, முதலிய நற்பண்புகளெல்லாம் அத்தகைய தூய புனிதமான கூட்டுறவால் பயிற்சிக் கப்பட்டதால் அடியவர்களால் அவை கள் அனுசரிக்கப்படுகின்றன. இது அவர்க ளது மனத்தை ஒளிப்படுத்தி அவர்களை ஆத்மீகத் துறையில் உயர்த்துகிறது. சாயி பாபா அத் தகைய 'ஞானி' அல்லது வத்குரு ஆவார். பக் கிரியைப் (இரவலர்) போன்று அவர் நடித்தா லும், எப்போதும் ஆத்மாவி லேயே முற்றி லும்தன்வயப்பட்டிருந்தார். கடவுள் அல்லது தெய்வத் தன்மையை சர்வ ஜீவராசிகளுக குள்ளும் கண்டு அவைகளை அவர் எப்போதும் அன்பு செய்தார். இன்பங்க ளால் அவர் உயர்ந்து போகவும் இல்லை. துரதிர்ஷ்டங்களால் தாழ்ச்சியுறவும் இல்லை. அரசனும் ஆண்டி யும் அவருக்கு ஒன்றே.

(இன்னும் ஞானத்தை தேடுவோம்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 622

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | | 12 | | | ■ | |
| | ■ | 13 | | | ■ | 14 | |
| ■ | 15 | | | ■ | 16 | | ■ |
| 17 | | ■ | 18 | | | ■ | 19 |
| 20 | | | ■ | 21 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

1. உயர்ந்த செயற்பாடு.
2. சாமர்த்தியசாலி.
3. சிக்கவைக்க உதவும்.
4. அடைக்கலம்.
5. சிவ நடனம்.
7. இல்லம்.
9. அணி.
10. ஆட்சியை மேற்கொள்ளும் அமைப்பு.
12. ஓர் இந்திய மாநிலம்.
14. உற்பத்தி பெரியளவில் இடம்பெறும் நிலையம்.
15. மலையிலிருந்து கொட்டுவது.
16. அன்னை.
17. இது வரப் பத்தும் பறந்திடும்.
19. இத்தாலியின் தலைநகரம்.

### இடமிருந்து வலம்

1. குழந்தைப் பேறு.
4. எந்த நேரமும்.
6. மேரு.
7. பாதுகாப்பாக அமைவது.
8. பெண்கள்.
10. விசாலமான.
11. மிடி.
13. விளையா நிலம்.
14. சம்மதச் சொல்.
15. இதுவே இன்ப ஊற்று.
16. இது ஓயாது.
17. முகத்தில் அதிகம் வரும்.
18. இசையுடன் தொடர்புடையது.
20. பல்லக்கு.
21. வானில் பறப்பது.

### சொற்சிலம்பம் போட்டி இல. 622

சொற்சிலம்பம் போட்டி 622ற்கான விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஜீன் 11 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்களை முறையே ஜீன் 18 மற்றும் ஜீன் 25 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ்.அலுவலகம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 620க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

*1.ஒசாமா, 2.பாவித்தல், 3.மாத்தளை, 4.சரி, 5.தகனம், 6.திசை, 8.திறை, 11.கரம், 13.வளம், 14.புலர்தல், 15.நிம்மதி, 16.உடம்பு, 17.கட, 18.ஏந்த,20.குரு,21.மார்*

**இடமிருந்து வலம்**

*1.ஒபாமா, 4.சந்ததி,7.சாவித்திரி,9.கசை,10.மாத்தறை,11.கன, 12.தளை, 13.வரம்பு, 15.நில், 16.உளம், 17.கடம், 18.ஏர், [illegible]*

### போட்டி இல. 619இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | திருமதி. A. வெரோனிக்கா, மாதாகோவில் வீதி, தலைமன்னார். |
| 2 ஆம் பரிசு | நி. சஞ்சீபா, ஒழுவில் வீதி, ஊர்காவற்றுறை. |
| 3 ஆம் பரிசு | தே. சுரேஸ்காந்த், பள்ளக்கமம், முருங்கன். |

### பாராட்டுப் பெறுவோர்

(1) வி. செல்வநாயகம், சிவன் கோவில் வீதி, புத்தூர்.
(2) திருமதி தில்லை புவனா, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(3) ர. நிஷாந்தினி, உப்புமாவெளி, அளம்பில்.
(4) திருமதி ம. வளர்மதி, 3ஆம் வட்டாரம், முள்ளியவளை.
(5) அ.ராதாமணி, கண்டிவீதி, சாவகச்சேரி.
(6) கஜானி பரமேஸ்வரன், 11,கன்னார லேன்,நல்லூர்,யாழ்ப்பாணம்.
(7) த. ஜெனிக்கா டலிமா, தலைமன்னார்.
(8) பா. நிரஞ்சனா, இல:-81 , 2ஆம் பகுதி, அனிஞ்சியன்குளம்.
(9) சி.ம. தில்லைநாதர், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
(10) திருமதி. தி. சைனினி, புனித செபஸ்தியார் வீதி, சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவும் காதலும்

- அசோக மித்திரன்

தமிழ் சினிமா காதல் கதைகளுடன் தொடங்கவில்லை. புராணக் கதைகளில் இரு பாலருக்குள் ஈர்ப்பு இருந்தாலும் அதைக் காதல் என்று கூற முடியாது.

ஆனால் காதலுக்கு எப்படி இலக்கணம் கூறுவது?

'அம்பிகாபதி' திரைப்படத்தில் காதல்தான் ஆதார சுருதி. அரசனிடம் நிறைய அதிகாரம் குவிந்திருந்தாலும் அவன் எளியோரும் அணுகக்கூடியவனாக இருந்திருக்கிறான். காதலன்-காதலியின் வர்க்க பேதம் அவனைச் சங்கடப்படுத்தியிருக்கக்கூடும் என்றாலும் கீழ் வர்க்க அம்பிகாபதி அவனுடைய நூறாவது பாட்டையும் பேரின்பச் சுவை கொண்டதாக இயற்றியிருந்தால் அரசன் தன் மகளை அரசவைக் கவிஞரின் மகனுக்கு மணமுடித்திருப்பான். சாதாரணமாக இருவருக்குள் இருக்கக்கூடிய பிணைப்பைவிட அம்பிகாபதி-அமராவதி பிணைப்பு, கடும் விளைவுகளையும் எதிர்கொள்ள இருவருக்கும் மன உறுதி கொடுத்திருந்தது. இந்த மன உறுதியைக் காதலாகச் சொல்லலாமா? அம்பிகாபதிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பிறகு அமராவதி என்னவானாள்?

தமிழ் சினிமாவில் ஆண்-பெண் இணைப்பை மரபு வழி உறவாகத்தான் கருத வேண்டியிருக்கிறது. 'சாவித்திரி' என்ற படத்தில் சாவித்திரி தன் கணவன் உயிரைத் திரும்பப் பெற எமனைத் தொடருகிறாள். அவளுடைய கணவனின் உயிரைத் திரும்பப் பெறும் நோக்கத்தில் அவள் இயங்கியது காதலாலா? சாவித்திரியும் சத்தியவானும் சேர்ந்து ஓராண்டு வாழ்ந்தாலும் அது சத்தியவானின் முதிய பெற்றோரைக் கவனித்துக்கொள்வதில்தான் கழிகிறது. அதிலும் நடுக் காட்டில் வசதிகளற்ற இடத்தில் அவன் எப்படி அடுப்பை மூட்டினான்? தானியங்கள் எங்கிருந்து கொண்டுவந்தான்? சத்தியவானின் ஒரே பணி விறகு கொண்டுவருவது. இதற்கு நடுவில் காதல் என்பது எப்படியிருந்திருக்கும்?

தமிழ் சினிமாவின் முதல் சமூகக் கதைகளாக 'மேனகா'வையும் 'சதி லீலாவதி'யையும் குறிப்பிடுகிறார்கள். எல்லாமே செவி வழிச் செய்திகள்தான். 'அம்பிகாபதி'யில இருந்த அளவு காதல் இருந்திருக்குமா? சந்தேகந்தான். காதலர்கள் எப்படி இருப்பார்கள்? ஜெமினி கணேசனும் சாவித்திரியும் போல இருப்பார்களா? நானறிந்து தமிழ் சினிமாவில் காதல் சில கணங்களாகத்தான் வெளிப்பட்டு வந்திருக்கிறது. அவை மௌனமான கணங்கள்.

'சிவகவி' என்றொரு படத்தில் ஒரு குருவிடம் பாடம் கற்கும் ஒரு மாணவனுக்கும் மாணவிக்கும் இடையே ஈர்ப்பு இருக்கிறது. மாணவி ஓர் அரசனின் மகள். அவள் அகம்பாவத்தில ஒரு துறவிமீது தண்ணீர் வாரியடிக்க அவள் முகம், உடலெல்லாம் அம்மைக் கொப்பளங்கள் வாரிக் கொட்டிவிடுகின்றன. மாணவனுக்கு அருள் இருக்கிறது. அவன் அவளைக் குணப்படுத்திவிடுகிறான். பின் திருமணம். அவன் பொருள் ஈட்டாமல் இருப்பதை மனைவி குத்திக் குத்திப் பேசுகிறாள். இதெல்லாம் காதலுக்கு நல்ல பெயர் வாங்கித் தருவதல்ல. காதல் என்றவுடனேயே தெய்வீகம் என்றொரு சொல்லையும் கூறிவிடுவார்கள். இந்தத் தெய்வீகத்தையும் எளிதில் இலக்கணப்படுத்திவிட முடியாது.

ஆனால் காதல் என்றால் ஒருவனை ஒருத்தியோ ஒருத்தியை ஒருவனோ எல்லா நேரமும் நினைத்து உருகுவதானால் 'மகா மாயா' என்றொரு தமிழ்ப் படத்தை உதாரணம் காட்டலாம். இது முழுக்க முழுக்கக் கற்பனைக் கதை என்கிறார்கள்.

இதில் ராஜா, ராணி, இன்னொரு ராஜா, ராணி என்று வந்தாலும் சரித்திரச் சான்று கிடையாது. ஓர் அரசன் இன்னொரு நாட்டு அரசியை அடைந்தே தீருவது என்றிருக்கிறான். இதற்காகப் போர், படுகொலை, சிறைச்சாலை, சித்திரவதை என எதற்கும் தயாராக இருக்கிறான். அந்த இன்னொரு ராணி இறந்துவிடுவதில் கதை முடிகிறது. இது 1944இல் வந்தது. இப்படியொரு கதையையும் பாத்திர வார்ப்பையும் உருவாக்கியவர் இளங்கோவன். படம் அன்றைய வெற்றி நடிகர்களாகிய பி.யூ. சின்னப்பா, கண்ணம்மா, என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் பங்குகொண்டது. பாடல்கள் கம்பதாசன். டைரக்ஷன் டி.ஆர். ரகுநாத். அறுபது ஆண்டுகளாக இப்படியொரு துணிச்சலான படம் உருவாக்கப்படவில்லை என்றே கூற வேண்டும். நிஜ வாழ்க்கையில் இப்படி நேர்ந்துவிட்டால் சம்பந்தப்பட்டவர்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும?

காதலுக்கு இலக்கியத்தில் எடுத்துக்காட்டாகக் கூறுவதில் ரோமியோ-ஜூலியட் கதை முக்கியமானது. ஷேக்ஸ்பியரின் இலக்கிய வாழ்க்கையில் இந்தக் கதையின் நாடக வடிவை அவருடைய ஆரம்ப காலப் படைப்புகளில் ஒன்றாகக் கூறுகிறார்கள்.

ரோமியோ, ஜூலியட் இருவருக்கும் பதினாறு வயதுக்கு மேல் ஆகவில்லை. அதாவது இது ஒரு பாலப் பருவ ஈர்ப்புக் கதை. பெரும் சோகத்தில் இது முடிந்தாலும் இது ஒரு பக்குவமான மனிதர்களின் நடவடிக்கை என்று கூற முடியாது. ரோமியோ ஜூலியட் என்ற பெயரியேயே தமிழில் திரைப்படம் தயாரிக்கப்படவில்லை என்றாலும் தியாகராஜ பாகவதரையும் எம்.ஆர். சந்தான லட்சுமியையும் 'அம்பிகாபதி'யின் டைரக்டர் எல்லிஸ் ஆர். டங்கன் 'ரோமியோ ஜூலியட்' என்ற ஹாலிவுட் படம் சென்னையில் ஒரு வாரம் ஓடியபோது தினமும் பார்க்கச் சொன்னதாகக் கூறுவார்கள். 'ரோமியோ ஜூலியட்' நாடகம் (திரைப்படம்) கொண்ட புகழ் பெற்ற 'பால்கனி' காட்சி 'அம்பிகாபதி'யில் உண்டு. மீண்டும் இளங்கோவன். ஷேக்ஸ்பியர் இளங்கோவனின் சொற்களில் முழு நிலாவாக ஒளி வீசினார். ரோமியோவின் சொற்களில் ஜூலியட் கதிரவன்!

ராமாயணம், மகாபாரதம் ஆகிய இலக்கியங்களில் காதல், திருமணம் ஆகியவை ஆண், பெண் இருவருக்கும் ஓரளவு பக்குவம் பெற்ற பிறகே நிகழ்வதாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

(வளரும்)



## காதலர் மட்டும்

இரு நண்பர்கள் உரை
யாடிக் கொண்டிருந்தார்கல்.
அவர்கள் பேச்சு காதல் பற்றி திரும்பியது.
ஒருத்தன் சொன்னான் "மச்சான்! காதல் எண்டு
சைக்கிள் மாதிரி.
ஆனாக் கல்யாணம் கப்பல் மாதிரி"
உடனே மற்றவன் திருப்பிக் கேட்டான்.
"அது எப்பிடி மச்சான்?"
முதலாமவன் விளக்கம் கொடுக்கத்தொடங்கினான்.
ஓடுறவனுக்கு சைக்கிள் பிடிக்காட்டி எங்க வேணு[illegible]லும் இறங்கிட்டு எப்பிடியும் போகலாம். ஆனா நடுக்கடலுக்[illegible] பிறகு கப்பல் பிடிக்கேலை எண்டு சொல்லி இறங்க முடியாதெல்லோ.
அப்பிடித்தான் இதுவும்"
கொஞ்சம யோசித்து விட்டு மற்றவன் சொன்னா.
" எனக்கு காலம் முழுக்க கப்பல் வேண்டாம்
சைக்கிளே காணும்".



## காதலர்களே. கமராவும்.

புராண காலக் காதலுக்கும் இன்றைய டிஜிட்டல் உலகக் காதலுக்கும் நிறைய வித்தியாசங்கள், காதலர்களின் உரையாடல், ஞாபகப் பரிசுகள், வெளிப்பாட்டு முறைகள் என்று எல்லாமே அடியோடு மாறிவிட்டன.

முன்னைய காலங்களில் தங்கள் காதல் வாழ்வின் அடையாளமாக தங்கள் துணையின் ஆபரணம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு, காதலரை அந்த ஆபரணம் வழியே நினைவால் அணைத்து வாழ்ந்தார்கள். அதிலும் மோதிரமே (கணையாழி) முக்கியமான காதல் சின்னமாக இருந்தது. சாகுந்தலம் என்ற காவியத்தில் துஷ்யந்த மன்னன் தன் காதல் பரிசாக சகுந்தலைக்கு மோதிரத்தை வழங்குகிறான். அவள் அதை நீரோடையில் தொலைத்ததாலேயே அவனைப் பிரிய வேண்டிவருகிறது.

இப்படிக் காதல் ஞாபகச் சின்னங்கள் கொடுத்த காலங்கள் டிஜிட்டல் உலகில் தொலைந்து. தங்கள் காதல் கணக்களை ஐ-போனில் படமெடுத்து அதை அவ்வப்போது பார்த்து ரசிப்பதே பழக்கமாகி விட்டது. இதன் மூலம் தங்கள் காதலரோடு மகிழ்வாக இருந்த காலத்தை தொலைத்து விடாமல் மீண்டும் மீண்டும் இரை மீட்டிப் பார்த்து இன்புற முடிகின்றது. ஆனால் இவ்வாறு காதலர்கள் இருவரும் தங்கள் அந்தரங்க விடயங்களைப் பதிவு செய்வதால் ஏற்படும் பின்விளைவுகள் பாரதூரமானவை 2 வருடங்களுக்கு முன்னர் டில்லியைச் சேர்ந்த காதலர்கள் இருவர் தாம் ஒன்றாக இருந்த போது அதனைப் போனில் பதிவு செய்துள்ளனர். ஆனால் எதிர்பாராத விதமாக காதலனின் போனை அவனின் நண்பன் ஒருவன் பார்த்த போது அவன் கண்களில் இவர்களின் காதல் அந்தரங்கக் காட்சி சிக்கிவிட்டது. அவன் உடனே அதனைத் தனது ஏனைய நண்பர்களுக்கு அனுப்பிவிட்டான். அப்படியே அந்தக் காட்சி எல்லா இடமும் பரவி சில விஷமிகளால் இணையத்திலும் பதிவேற்றப்பட்டுவிட்டது. இதை அறிந்த காதலனும் காதலியும் ஒன்றாகத் தற்கொலை செய்துவிட்டனர்.

இப்படிக் காதல் நினைவாக கமராவில் காட்சிகளை சிக்க வைப்பதால் காதலே சிக்கிவிடும் நிலை தோன்றிவிடுகின்றது. எனவே இயன்றவரை காதலர்கள் தங்கள் காதல் சம்பந்தப்பட்ட விடயங்களை போனிலோ அல்லது வீடியோவிலோ பதிவு செய்வதைத் தவிருங்கள்.

காதலர்கள் எல்லோருமே திருமண பந்தத்தில் இணைவது கிடையாது. சில பல காரணங்களுக்காக காதல் பந்தத்தில் இருந்து ஒருவர் பிரிந்து தனக்குப் பொருத்தமாக வாழ்வைத் தேடும் போது முன்னாள் காதலரோடு போனில் பதிவு செய்து வைத்திருக்கும் உரையாடல்கள், புகைப்படங்கள், வீடியோக்கள் என்பவற்றை அவர்களை மிரட்டி அடிபணிய வைக்கும் ஆயுதமாக மற்றவர் பயன்படுத்தக்கூடும். இதனால் உங்கள் வாழ்வு கடைசி வரை நரகமாகவே மாறிவிடவும் கூடும். எனவே காதலர்களே! கமரா, போன் என்பவற்றில் உங்கள் காதல்விடயங்களைப் பதிவேற்றுவதை தவிர்க்க முயலுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரேயா சரண்



## சிவகார்த்திகேயனை நோக்கி படவாய்ப்

சிவகார்த்திகேயனை வைத்து சிறந்த படம் எடுப்பேன் என்ற தன் மெரினா படத்தை எடுத்து அதனை வெற்றிப்படமாக உருவாக்கியவ அதையடுத்து கேடி பில்லா கில்லாடி ரங்காவிலும் விமலுக்கு இணை சிவகார்த்திகேயனை நடிக்க வைத்தார். அந்த படமும் வெற்றி சிவகார்த்திகேயன் பக்கம் காற்று வீசத் தொடங்கியது. அதனால் வே படங்களில் ஒப்பந்தமாகி தற்போது கைவசம் மூன்று படங்க சிவகார்த்திகேயன்.

இந்த நிலையில், தற்போது சிம்புவைக்கொண்டு 'இது நம்ம ஆளு வரும் பாண்டிராஜ்க்கு மீண்டும் சிவகார்த்திகேயனை வைத்து ஒ ஆசை ஏற்பட்டுள்ள தாம். இதுபற்றி அவர் சிவகார்த்தி கேயனிடம் தான் படப்பிடிப்பில் தீவிரமாக இருப்பதாகச் கூறினார். எனினும் செய்யுங்கள். இந்த படங்களில் ஏதாவது தாமதம் என்றால் அந்த நடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறாராம்.

இதனால், ஒருவேளை சிம்பு இன்னும் இழுத்தடித்தால், அதற்குள் சிவ வைத்து படத்தை பாண்டிராஜ் இயக்குவார்.

## 4 ஆண்டுகளின் பின்னர் ஐஸ்வர்யா ரா

கடந்த நான்கு ஆண்டுகளாக எந்தப் படத்திலும் நடிக்கவில்லை ஐ இந்தக் காலகட்டத்தில் ஆரத்யாவை பெற்றெடுத்த அவர் இப்போது குழந்தையைப் பராமரிப்பதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அ ஒரு வருடமாக ஹிந்தி இயக்குநர்கள் சிலர் அவரை அணுகி கதை செ தனக்கு பொருந்தாத கதை என்பதால் மறுத்துவந்த ஐஸ்வர்யாராய், தனது புதிய படத்தில் நடிக்க கேட்டபோதும் மறுத்துவிட்டார். இந் தற்போது அவர் நடிக்கத்தயராகி விட்டதாக மும்பையில் இருந்து வரு தெரிவிக்கின்றன.

சஞ்சய்குப்தா என்பவர் இயக்கும், 'ஜஸ்பா' என்ற படத்தில் ஐ நடிப்பதாக உறுதியான செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தப் படம் படமாக உருவாக இருப்பதாக கூறப்படுகிறது. மேலும் இயக்குநர் ச தனது ருவிட்டரில், தனது படத்தில் வித்தியாசமானதொரு வேடத்தி ஐஸ்வர்யாராய், தற்போது தனது உடல் பருமனை கணிசமா குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறா ஆக, 4 ஆண்டு இடைவெளிக்குப்பிறகு ஒரு த்ரில்லர் படம் மூலம் திரையுலகுக்கு வருகிறார் ஐஸ்வர்யாராய்.

## மீண்டும் கதாநாயகனாக வடிவேலு

சில ஆண்டுகளுக்குப் பின்னர் தெனாலிராமன் மூலம் ரசிகர்களை வடிவேலுவுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. விளைவு படத்தில் நடித்துக்கொண்டிருந்தபோது அடுத்தடுத்து அவரை வைத் இயக்க முன்வந்திருந்த பலர் இப்போது பின்வாங்கி விட்டனர்.

அதனால், இவர்களையெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் படத்தை வெளியிட இன்னும் மூன்று வருடமாகி விடும் என்று நி வடிவேலு, இதுவரை எடுக்காத முயற்சியை எடுக்கத் தயாராகி வி அதாவது இந்த முறை தனது சொந்தப் பணத்திலேயே நடிக்கலாம் முடிவுக்கு வந்திருக்கிறார்.

தற்போது ஒரு முழுநீள நகைச்சுவைப் படத்தை கொடுத்த வேண்டும் என்று தீவிர கதை விவாதத்திலும் இறங்கியிருக்கிற அதுமட்டுமின்றி, இதுவும் சரித்திர காலத்து கதைதானாம். அதேச நூறு சதவிகிதம் நகைச்சுவையுடன் இருக்க வேண்டும் என்ப தனது சொந்தக் கற்பனையில் உதித்த நகைச்சுவைக் காட்சிகளை கதைக்குள் திணித்துக்கொண்டிருக்கிறாராம் வடிவேலு.

## ஹிந்தியில் மாதவன்

ஹிந்தியில் பிரபல குத்துச்சண்டை வீரர் மேரி கோம் வ அடிப்படையாகக்கொண்டு ஒரு படம் தயாராகிறது. அதில், 'பிரியங் வேடத்தில் நடிக்கிறார். அவருக்கு குத்துச்சண்டை பயிற்சி கொ மாதவன் நடிக்கிறாராம். இதற்காக லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் குத்துச்சண்டை பயிற்சியாளரிடம் பயிற்சி எடுத்துள்ளார் மாதவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழில் கமல்ஹாசன் இயக்கிய 'விஸ்வரூபம்' முதல் பாகத்திலேயே கதாநாயகியாக நடிக்க சோனாக்ஷி சின்ஹாவை அழைத்திருந்தார் கமல்ஹாசன். அப்போது அவருக்கு உடல் குறைப்புக்கு 2 மாதம் அவகாசம் தரப்பட்டது. ஆனால் சோனாக்ஷி உடல் குறையவில்லை. மேலும், 'கொழுக் மொழுக் என்று இருப்பதுதான் எனக்கு பிடித்திருக்கிறது' என்றார் அவர். இதற்கிடையில் அவர் கொடுத்த கொடுத்த திகதிகளை கமல்ஹாசன் வீணடித்தார். இதனால் படத்திலிருந்து சோனாக்ஷி விலகினார். இதையடுத்து அவருக்கு பதிலாக பூஜா குமார் ஒப்பந்தம் செய்யப்பட்டார். தமிழில் நடிக்க முதலில் வந்த வாய்ப்பை இழந்த சோனாக் ஷிக்கு மீண்டும் ரஜினியின் 'லிங்கா' இன்னொரு வாய்ப்பை வழங்கியுள்ளது. ஆரம்பத்தில் முரண்டுபிடித்த சோனாக்ஷி பிறகு நடிக்க ஒப்புக்கொண்டார். இதற்காக உடல் குறைய வேண்டும் என்று கூறப்பட்டது. இம்முறை சோனாக்ஷி உடல் குறைந்து பாத்திரத்துக்கு ஏற்றவாறு மாறினார். சமீபத்தில் மைசூரில் நடந்த படப்பிடிப்பில் பங்கேற்றதுடன் 'லிங்கா' முதல்கட்ட படப்பிடிப்பில் பங்கேற்ற அனுபவம் அழகானது. அற்புதமான படக் குழு. படப்பிடிப்பில் இருந்தபோதும் வீட்டில் இருந்ததுபோன்ற ஒரு சூழல் அமைத்து தந்தனர்' என்று பாசமழை பொழிந்திருக்கிறார் சோனாக்ஷி.



...ய்ப்புகள்

...தன்னம்பிக்கையுடன்
...கியவர் பாண்டிராஜ்.
...ணையான வேடத்தில்
...ற்றியாக வர பின்னர்
...் வேகவேகமாக புதிய
...வைத்திருக்கிறார்

...ளு' ...த்தை இயக்கி
...ு ஒரு படம் இயக்கும்
...டம் கூறுகையில்,
...ும் கதையை தயார்
...ந்த இடைவெளியில்

...சிவகார்த்திகேயனை



...ராய்

...ல ஐஸ்வர்யாராய்.
...போதுவரை தனது
...ர். ஆனால், கடந்த
...த சொன்னபோது,
...ாய், மணிரத்னம்
...இந்த நிலையில்,
...ரும் செய்திகள

...ஐஸ்...யாராய்
...டம் ஒரு த்ரில்லர்
...நர் சஞ்சய்குப்தா
...த்தில் நடிக்கும்
...சமான அளவு
...கிறார்.
...லம் மீண்டும்



...ளை சந்தித்த
...ளவு, அந்தப்
...வைத்து படம்
...ர்.
...ால் அடுத்த
...ு நினைத்த
...கி விட்டார்.
...ாம் என்ற

...த்து விட
...கிறார்.
...தசமயம்,
...ன்பதால்,
...ளையும்



...வாழ்க்கை வரலாற்றை
...யங்கா சோப்ரா, மேரி கோம்
...கொடுக்கும் பயிற்சியாளராக
...ம் சென்று அங்குள்ள ஒரு
...வன்.

ஆரம்பம் படத்தை இயக்கிய விஷ்ணுவர்தன் தற்போது தான் இயக்கி வரும் யட்சன் படத்திலும் ஆர்யாவுக்கு ஜோடியாக நயன்தாராவை நடிக்க வைக்க நினைத்தாராம். ஆனால், ஆர்யா அவரை இடைமறித்து, அவர் வேண்டாம், வேறு யாரேனும் புதிய நடிகைகளைச் சேர்க்கலாம் என்று சொல்லி, தீபா சன்னிதி என்ற கன்னட நடிகைக்குச் சிபாரிசு செய்து விட்டாராம். அத்தோடு, தீபா கன்னடப் படங்களில் நயன்தாராவை விடச் சிறந்தவர் என்று தனது நட்பு வட்டாரங்களிலும் தீபாவின் பெருமையைக் கூறி வருகிறார் ஆர்யா.

பிரபுதேவாவைப் பிரிந்து நயன்தாரா சென்னை வந்தபோது தனது வீட்டிலேயே அவரைத் தங்க வைத்து ஆதரவு கொடுத்தவர் ஆர்யா. அத்தோடு, தனது நண்பன் விஷ்ணுவர்தன் அஜித்தை வைத்து இயக்கிய ஆரம்பம் படத்திலும் நயனை நடிக்க வைத்தார். அதன்பிறகு ராஜா ராணியிலும் ஜோடி சேர்த்து நயன்தாராவுக்கு நல்லதொரு மீள் வரவு அமைய காரணகர்த்தாவாக திகழ்ந்தார் ஆர்யா.

இருப்பினும், காலப்போக்கில் அதை நயன்தாரா மறந்துவிட்டார். பாஸ் என்ற பாஸ்கரன் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிக்க அழைத்தபோது, கைவசம் பல படங்கள் இருப்பதாகச் சொல்லி நடிக்க மறுத்து விட்டார்.

இதனால் தற்போது யட்சன் படத்தில் இயக்குநர் விஷ்ணுவர்த்தன், ஜோடியாக நயனைத் தெரிவுசெய்தபோதும் ஆர்யா அவரை மறித்து விட்டாராம்.

## ஆர்யா படத்தில் இருந்து நயன் அவுட்?



## கார்த்தி படத்தில் தெரேசா

இயக்குனர் ரஞ்சித் இயக்கும் புதிய படத்தில் நடித்துகொண்டு இருக்கிறார் கார்த்தி. இதில் கேத்தரின் தெரேசா நாயகியாக நடிக்க, சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். படம் முழுக்க முழுக்க வட சென்னையை மையப்படுத்தி எடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்தைப்பற்றி எந்தவித தகவலும் வெளியிடாமல் நடித்து வருகிறார் கார்த்தி. படத்தின் தலைப்பு விடயத்தில் கூட.

## இறுதிக்கட்ட பணிகளில் ஐ

ஷங்கர்- விக்ரம் இணைந்துள்ள படம் ஐ. எமி ஜாக்சன் நாயகியாக நடித்துள்ள இதன் அனைத்துகட்டப் பணிக ளும் முடிவடைந்துவிட்டன. கடைசியாக. எமி ஜாக்சன் சம்பந்தப்பட்ட ஒரேயொரு பாடல் காட்சி மட்டுமே இருந்தது. அதை யும் சமீபத்தில் அவரை வரவைத்துப் படமாக்கி விட்டனர்.

இப்போது காட்சிகளைச் சீர்திருத்தும் பணிகள் தீவிரமடைந்திருக்கின்றன.

இதுவரை இந்தியன், அந்நியன், எந்திரன் என எத்தனையோ பிரமாண் டமான படங்களை எடுத்த ஷங்கர், அந்தப்படங்களுக்காக அயல் நாடுகளில் முகாமிட்டு தான் எதிர்பார்க்கிற முடிவு வரும்வரை தொடர்ந்து மாற்றங்கள் செய்தபடியே இருப்பார்.கடந்த மாதமே ஐ படத்தின் ஓடியோ விழாவை நடத்த திட்டமிட்டிருந்தனர். இப்போது முழு வேலைகளும் முடிந்த பிறகு மற்ற வேலைகளில் இறங்கலாம் என்று ஓடியோ வெளியீட்டைத் தற்காலிகமாக தள்ளி வைத் திருக்கிறார் ஷங்கர.



படம்: ஐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலம் - 18

மகாலிங்கம் பத்மநாபன்

## 3 கிராமங்களின் கதை

# அது ஒரு அழகிய நிலாக்காலம்

ஆங்கிலேயர் பழமையைப் பேணுபவர்கள். ஒல்லாந்தர், போர்த்துக்கேயரால் வரிகளை வசூலிக்கவும், தமது நிர்வாகத்தைச் சுலபமாக நடத்தவும் நியமிக்கப்பட்ட விதானை (Vidan), உடையார் பதவிகளைத் தொடர்ந்து பேணினார்கள். விதானையின் மகன் விதானை, உடையார் மகன் உடையார் என்ற ரீதியில் நியமனமும் தொடர்ந்தது. பரம்பரையாகப் பதவி வரும் என்ற காரணத்தால் விதானை, உடையார் குடும்பப் பிள்ளைகள் கல்வி கற்பதில் அதிக நாட்டமின்றி இருந்தனர். குஞ்சுப்பரந்தனில் உடையாரும், விதானையும் அண்ணன் தம்பிகள். உடையாருக்கு வயதான போது உடையார் முறை நீக்கப்பட்டு, GA (JP.V) இற்கு அடுத்த நிலையில் இலங்கை நிர்வாக சேவையில் தேர்ச்சி பெற்ற டீ.ஆர்.ஓ க்கள் (DRO) நியமிக்கப்பட்டனர். விதானை என்ற பதத்தை மாற்றி 'கிராமத் தலைமைக்காரர்' (Village Headman) என்று புதிய பெயரால் அழைத்தனர். இவர்கள் நேரடி யாக டீ.ஆர்.ஓ வுக்குக் கீழே பணி ஆற்றுவர். கிராமத் தலைமைக்காரர் என்பது கிராம சேவையாள ராகி இப்போது கிராம சேவை உத்தியோகத்தர் ஆகிவிட்டது.

யாழ்ப்பாணத்துக்கு கடைசியாக அரசாங்க அதிபராக (G.A) இருந்த ஆங்கிலேயர் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். கிராமத் தலைமைக்காரர் (VH) நியமனத்தில் பரம்பரை, கல்வித் தகைமை, மக்கள் ஆதரவு மூன்றையும் பார்க்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

குஞ்சுப்பரந்தனின் பழையபரம்பரை விதானை யாராகிய கைலாய விதானையார் இளைப்பாற, புதிய தெரிவுக்கு அரச அதிபர் நேரடியாக பரந்தன் அ.த.க.பாடசாலைக்கு வருகை தந்தார். பதினேழு பேர் விண்ணப்பித்திருந்தனர். விதானையாக வருப-வர் திருமணம் முடித்தவராக இருக்கவேண்டும் என்பதற்காக பத்துப் பேர் அவசர அவசரமாக மணம் முடித்தனர். மூன்று கிராமத்தில் சொந்தமாக காணி வேண்டும் என்பதற்காக மீசாலையைச் சேர்ந்த சிலர் இந்தப்பகுதியில் காணியும் வாங்கினர்.

பதினாறுபேர் விதானை, உடையார் பரம்பரையைச் சேர்ந்த குஞ்சுப்பரந்தன் வாசிகள். ஒருவர் பெரியபரந்தன் கிராமத்தைச் சேர்ந்த மகாலிங்கன் என்ற சாதாரண விவசாயியின் மகன். எஸ்.எஸ்.சி சித்தியெய்தியவர். ஆங்கில பாடத்திற்குத் தனியே தோற்றித் திறமைச் சித்தி பெற்றவர். சிங்கள மொழி யைச் சிங்களவர் போலப் பேச வல்லவர்.


உடையாரின் மகன் ஜே.எஸ்.சி (8ஆம் வகுப்பு) படித்தவர். விதானையாரின் மகன் 5ஆம் வகுப்புப் படித்தவர். கல்வி முக்கியம் என்றதும் பதினான்கு பேர் ஒதுங்கிக் கொண்டனர்.

பரம்பரைக்கான புள்ளியை விதானை, உடையாரின் மகன்கள் பெற்றனர். மகாலிங்கனுக்குப் பூச்சியம். கல்விக்காக மகாலிங்கன் கூடிய புள்ளியைப் பெற்றார். வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது செருக்கன், பெரியபரந்தன் மக்கள் மகாலிங்கனுக்கே கைஉயர்த்தினர். குஞ்சுப்பரந்தன் வாக்குகள் மூன்றாகப் பிரிந்தது. பாலசுந்தரம் மாஸ்டர் முதலி-யோர் மகாலிங்கனுக்கே வாக்களித்தனர். ரங்கோன் மணியத்தாரும், பிள்ளக்கர் பொன்னம்பலமும் மகாலிங்கனுக்கே வாக்களித்தனர். மகாலிங்கன் என்ற சாதாரண விவசாயி முதன்முறையாக் விதானைப் பதவிக்குத் தெரியப்பட்டதாக அரச அதிபர் அன்றே அறிவித்தார். (நிலம் விரியும்)

## தேசிய விருதும் அச்சு பதிப்பகமும்

அரச இலக்கிய விருது ஆண்டு தோறும் இலக்கிய படைப்புக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இந்த விருதுகளை தங்களது படைப்புகளுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்ற பேராசையில் சில எழுத்தாளர்கள் படைப்புக்களை அழகிய வண்ண மயமான தோற்றத்தில் வெளிக் கொண்டு வருகின்றார்கள். அது மட்டுமின்றி படைப்புக்களை மற்றொரு தேசத்தில் அச்சு பதிப்பு செய்கின்றார்கள் அந்தப் படைப்புக்களை அரச விருதுகளுக்கு விண்ணப்பித்து விருதுகளையும் பெற்றுக் கொள்கின்றார்கள். அரசவிருதுகள் வழங்கப்படும்போது ஒரு அரசகட்டுப்பாட்டுக்குள் (தேசம்) பதிக்கப்படும் படைப்புக்களுக்கு அரச விருதுகள் வழங்க வேண்டும். இன்னொரு (அந்நிய ) தேசத்தில் பதிக்கப்படும் படைப்புக்களுக்கு வழங்குவது எந்தவிதத்தில் நியாயமாகும்.? இவ்வாறு எழுத்தாளர்கள் புத்தங்களை வெளிநாடுகளில் அச்சிட்டு, இங்கே அதற்கு விருது வாங்கிக் கொண்டாடினால் இலங்கையில் உள்ள அச்சு பதிப்பகம் எவ்வாறு வளர்ச்சியடையும், சொந்த நாட்டு பதிப்பகங்களின் படைப்புக்களை தெரிவு செய்யவதற்கு இணக்கம் [illegible] போது தான் நமது அச்சுக்கலை பதிப்பகம் முன்னேற்றம் காணமுடியும். இனி வரும் காலங்களில் இப்படியான தவறுகள் இடம் பெ-றாமல் இருக்குமா ?

கோ.நாதன்




இப்போது இலங்கையில் நாளும் பொழுதும் குறும்படங்கள் வெளிவந்தபடியே உள்ளன. அவற்றில் எத்தனை குறும்படத்துக்கான அம்சங்களைக் கொண்டுள்ளன என்பது கேள்விக்குறியே. ஆயினும் குறும்படங்கள் மீதான ஆர்வம் வெடித்துக் கிளம்பியுள்ளதையே இவ்வாறு குறும்படங்கள் ஏராளமாக வெளிவருவதற்கு காரணம். இத்தகைய ஆர்வம் மெல்ல மெல்ல குறும்படப்படைப்பாளிகளை நமக்கான தரமான குறும்படங்களின் திசைக்கு அழைத்துச் செல்ல உதவும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் 48 மணிநேரத்தில் குறும்படங்களை உருவாக்கும் போட்டியொன்று நடைபெற்றது. இதற்காக உருவாக்கப்பட்ட குறும்படங்களில் " இது" படத்தை அண்மையில் பார்க்க நேர்ந்தது.

வீதி விபத்துக்களை மையமாக வைத்து இந்தப்படம் படைக்கப்பட்டுள்ளது. 6 நிமிடம் 48 செக்கன் நீளமான இது குறும்படத்தை ஆனந்த ரமணன் இயக்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு 25 வருடங்களாக எட்டியும் பார்க்கதிருந்த 'யாழ்தேவி' ரயில் இப்போது மீண்டும் தன் சேவையைத் தொடங்கியுள்ள நிலையில் அதனால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருவை இந்தப்படம் கொண்டுள்ளது. ரயில் ஒன்றில் இரு இளைஞர்கள் ஏறிக்கொள்ள அது விரைகின்றது. ஓரிடத்தில் வீதியைக் குறுக்கறுத்து ரயில்பாதை செல்கிறது. ஆனால் குடித்துவிட்டு வரும் ஒருவர் ரயில் பாதையில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புக் கடவையை அகற்றிவிடுகிறார். சற்று நேரத்தில் அந்தப் பாதையை ஒரே நேரத்தில் கடக்கப்போகும் ரயிலும், பஸ்ஸும் மோதிக்கொள்ளவிருக்கின்றன. ஆனால் கடைசி நிமிடத்தில் கால்களற்ற ஒருவர் அந்தக்கடவையை மூடி விபத்தை தடுத்து விடுகிறார்.

இதுதான் இது படத்தின் கதை.

சொல்லிக்கொள்ளும்படி புதுமையாக ஏதுமில்லை. ஆனால் ஈழத்தில் வெளிவந்த குறும்படங்களில் - அதுவும் யாழ்ப்பாணத்தில்- ரயிலை மையமாகக் கொண்ட படமாக இது இருக்கிறது. ஒளிப்பதிவு சில இடங்களில் 'அட' என்று ஆச்சரியப்பட வைத்தாலும், இரைச்சலான பின்னணி ஒலிப்பதிவு அந்த ஆச்சரியத்தை அமுக்கி விடுகின்றது. படத்தொகுப்பும் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. ஆரம்பக்காட்சியில் ரயிலில் ஏறும் இரு இளைஞர்களில் ஒருவரை ஏன்செயற்கைக் காலோடு வலிந்து காட்டினார்கள் என்பதற்கு காரணங்கள் ஏதுமில்லை. ஒரு கடையிலே நடக்கும் காட்சிகளுக்கும் படத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இன்னும் படத்தொகுப்பை வேகப்படுத்தி, தேவையற்ற காட்சிகளை ஈவிரக்கம் பாராமல் வெட்டி எறிந்திருந்தால், இது படத்தின் ரசனைப்புள்ளியை உயர்த்தியிருக்க முடியும்.

படத்தின் இடையே ரயிலும், பஸ்ஸும் மோதிக்கொள்வது போல கணினி வரைகலைப் படத்தைப் பயன்படுத்தியது நல்லதொரு உத்தி.

படத்தின் காட்சிகளின் தொடர்பைச் சரிவரப்பேணவில்லை. ஒரு சமயத்தில் நீல நிறத்தில் நிறையப் பெட்டிகளுடனும், சில காட்சிகளில் சிவப்பு நிறத்திலும் ரயில் பறக்கிறது. இயக்குநர் இந்த விடயத்தில் கவனயீனமாக இருந்துவிட்டார் போலும். அத்தோடு நடிகர்களின் நடிப்புக்கு களம் அமைக்கும் இடங்களும் படத்தில் இல்லை. கால்களற்றவராக வருபவருக்கு மாத்திரம் சில காட்சிகள் உண்டு.

கிட்டத்தட்ட ஒரு விழிப்புணர்வு விளம்பரப்படத்தைப் படத்தைப் பார்த்த உணர்வையே ஏற்படுத்துகின்றது 'இது' குறும்படம்.

குறும்பட விமர்சனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகத்தைப் பராமரிக்கும் பாட்டி முறை

அந்தக்காலத்தில் பெண்கள் அழகாகவும் இளமையோடு இருந்தமைக்கு காரணம், அவர்களது உடல் மற்றும் சருமப் பராமரிப்புக்கள் தான். அவர்கள் பராமரிப்பதற்குப் பயன்படுத்திய பொருள்களைப் பார்த்தால் சாதாரணமாக வீட்டில் இருக்கும் பொருள்கள் தான்.

அத்தகைய இயற்கையான அழகுக் குறிப்புக்களை நமது வீட்டில் உள்ள பாட்டிகள் சொன்னால் பலர், ஏனோ தானோவென்றுதான் செய்வார்கள். ஏனெனில் தற்போது தான் நிறைய அழகுப் பொருள்கள் கடைகளில் விற்கிறதே, பின் எதற்கு இந்த பொருள்களை பயன்படுத்த வேண்டுமென்றவ் நினைப்புத்தான் அதற்குக் காரணம்.

ஆனால் அத்தகைய இரசாயனப்பதார்த்தங்கள் கலந்த பொருள்களைப் பயன்படுத்தி உடலழகைக் கெடுத்துக் கொண்ட பின்னர் தான் பாட்டி சொன்ன அழகு பராமரிப்புக்களின் அருமை பலருக்கும் புரியும்.

ஏனெனில் இந்த உலகில் சொன்னதைக் கேட்டுக் கொண்டு நடப்பவர்கள் குறைவே. அத்தகையவர்கள் பட்டபின் தான் திருந்துவார்கள் .

ஆயினும்தற்போது பலரும் இரசாயனப்பதார்த்தங்கள் கலந்த பொருள் களைப் பயன்படுத்துவதை தவிர்த்து பாட்டிகள் சொல்லும் குறிப்புக்களையே பின்பற்ற விரும்புகின்றனர்.

ஆனால் சில வீடுகளில் பாட்டிகள் இல்லாததால், அத்தகையவர்களுக்கு அழகைப் பராமரிப்பதற்கு பாட்டிசொன்ன அழகுக் குறிப்புகளை இங்கே தருகின்றோம்.

### வெள்ளரிக்காய்

வெள்ளரிக்காயைக் கண்களில் சிறிது நேரம் வைத்து அமைதியாக உட்கார்ந்தால், கண்களில் இருக்கும் சோர்வும் , கருவளையங்களும் நீங்கிவிடும் என்று பாட்டிகள் சொல்வார்கள்.

எனவே தான் இப்போதும், எந்த ஒரு அழகு நிலையங்களுக்குச் சென்றாலும், முகத்துக்கு 'ஃபேஸ் மாஸ்க்' போட்ட பின், கண்களுக்கு வெள்ளரிக்காய் துண்டுகளை வைக்கின்றனர்.

### முகத்தைக் கழுவுதல்

முகத்தைத் தினமும் மூன்று முதல் நான்கு முறை குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனால் முகத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி, முகம் பொலிவாக இருக்கும்.

### ஆவி பிடித்தல்

இது நீங்கள் நினைப்பது போல பேய் பிடித்தலைக் குறிப்பதல்ல. விக்ஸ் இலை, எலுமிச்சை இலை, வேறும் பல மூலிகைகளை தண்ணீரில் இட்டு கொதிக்க வைத்து அதன் ஆவியில் முகத்தைப் பிடித்தல். ஆரம்ப காலத்தில் முக அழகுக்கு என்று தனியாகச் சிகிச்சைகள் இருக்கவில்லை. ஆகவே அப்போது பெண்கள் ஆவி பிடித்து தான், அழகைப் பராமரித்து வந்தார்கள். முகத்தில் உள்ள பருக்களை போக்குவதற்கு ஆவி பிடித்தால் பருக்கள் வராமல் தடுக்கலாம்.

### பழங்கள்

கடைகளில் விற்கும் ' ஃபேஸ் மாஸ்க்குகளை 'போடுவதற்கு பதிலாக பழங்களை வைத்து 'மாஸ்க்' போட்டால் அதில் உள்ள சத்துக்கள் முகத்தை பளிச்சென்று பொலிவுற வைக்கும்.

அதிலும் மாம்பழம், பப்பாளி, எலுமிச்சை, திராட்சை, ஸ்ட்ரோபெர்ரி போன்றவை முகப்பொலிவைப் பேணுவதில் மிகவும் சிறந்த பழங்கள்.

## மெட்டி ஒலியும் அறிவியலும்

பழங்காலத்தில் மெட்டி அணிவது ஆண்களின் அடையாளமாகவே இருந்து வந்துள்ளது. பின்னாளில் அந்த மெட்டி பெண்களின் சொத்து ஆகிவிட்டது. அதிலும் திருமணமான பெண்கள் தான் மெட்டி அணிய வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. இது வெறும் சம்பிரதாயம் மட்டுமல்ல, அதற்கு பின்னால் அறிவியல் ரீதியான காரணிகளும் உண்டு. பெரும்பாலான திருமணமான தமிழ்ப் பெண்கள் கால்களில் மெட்டி அணிவார்கள். மெட்டி அணிவது திருமணம் ஆனதற்கு அடையாளம் மட்டுமல்ல, அது அறிவியலும் கூட. பெண்கள் இரு கால்களிலும் மெட்டி அணிவதால், அவர்களின் மாதவிடாய் சுழற்சி சீரான முறையில் செயற்படுகின்றது.

மேலும் மெட்டி அணிவது திருமணமான பெண்களுக்கு கருவுறுதலில் நல்ல நோக்கத்தை அளிக்கிறது. அது மட்டுமல்லாமல், பெருவிரலில் இருந்து இரண்டாவது விரலான நடு விரலில் ஓடும் நரம்பானது பெண்களின் கருப்பையுடன் இணைந்து இதயம் வழியாக செல்கிறது




என்று கூறப்படுகிறது.

ஆகவே பெண்கள் மெட்டியை பெருவிரலில் இருந்து இரண்டாவது விரலில் அணிவதன் மூலம் கர்ப்பப்பை ஆரோக்கியமாகவும், கர்ப்பப்பையில் இரத்த ஓட்டம் சீராகவும் பாதுகாக்கப்படுகிறது. வெள்ளி ஒரு நல்ல கடத்தி (Good Conductor) என்பதால், பூமியின் துருவத்தில் இருந்து நிறைய ஆற்றலை உள்வாங்கி, உடல் முழுவதும் புத்துணர்ச்சியைப் பரவச்செய்கிறது.

## ஒரு புள்ளி வெளிச்சம்

என்னுடைய அண்ணனின் மகளுக்குத் திருமணப்பேச்சு நடைபெற்றுக்கொண்டிருந்தது.ஒரு தரப்பினர் பேச்சுக் கள் முடிந்து சாதகம் பொருந்தியதால் பெண்ணை நேரில் பார்க்க வருவதாகவும் கூறியிருந்தனர். அதனால் வீட்டில் அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந் தன.அண்ணன் இறந்த பின்னர் குடும்பத்தை அண்ணி தான் நன்றாகப் பார்த்து வந்தார்.இப்போது பெண் பார்ப்பது கோயிலில் என்று முடிவாகிவிட்டது.

கோயிலுக்கு கிளம்ப எல்லோரும் ஆயத்தமாகின்ற போது அண்ணி வந்து மகளிடம் ஏதோ பேசினார்.அவள் மறுத்துப்பேசுவது எல்லோருக்கும் தெரிந்தது.என்ன விடயம் என்று கிட்டப்போய் கேட்டேன்.

"இங்க பாருங்கோம்மா..அப்பா இல்லை எண்டதால் நீங்க வரக்கூடாதெண்டு யார் சொன்னது..?அப்பா இல்லாத போது நீங்கதான் கஸ்டப்பட்டு இவ்வளவு தூரம் வளத்து ஆளாக்கனீங்கள்.நீங்க இல்ல எண்டா இப்ப நாங்களும் இல்ல இப்ப நீங்க இல்லாம தான் அவையள் என்னைப் பாக்கோணும் எண்டா அது எனக்குத் தேவையில்ல..அம்மாவைப் பாத்தா மகளை புரிஞ்சுகொள்ளுறவயள் வரட்டும்.அது வரைக்கும் வெயிட் பண்ணுவம்.."

பேசியது அண்ணியின் மகள் தான்.இந்தக்கால யுவதி தான். நெஞ்சம் பூரிப்பில் நிறைந்தது.

நினைவில் நிறுத்துங்கள்

இனி பெண்ணுக்கு அவமானம் ஏற்படும் போதெல்லாம்.....
பெண்குலமானது துயரத்தில் மூழ்கும் போதெல்லாம்......
ஒரு ஸ்த்ரியின் அலங்கரித்த கேசம் இழுக்கப்படும் போதெல்லாம்.......
அவள் வடிக்கும் ஒவ்வொரு நீர்த்துளியும்
கடலை விட ஆழம் என்பதை எடுத்துரைக்கும்.
அப்போது ஏதோ ஒரு ரூபத்தில் மகாபாரதம் எனும் போராட்டம்.....
தனது தொடக்கத்தை நிகழ்த்தும்....

விஜய் ரீவியின் 'மகாபாரதம்' தொடரில் கண்ணன் ♣




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபாரதத்தின் அரசியல் என்ன?

■ அருண்மொழிவர்மன்

மகாபாரதக் கதையின் அரசியல் என்ன என்கிற கேள்வியொன்றினை அண்மையில் முகநூலில் எழுத்தாளர் மீராபாரதி எழுப்பி இருந்தார். மகாபாரதம் சிறுவயது முதலே எனக்கு மிகவும் பிடித்த காவியம். இராமாயணத்தை விடவும் கூட. அதிலும் குறிப்பாக நான் யாழ்ப்பாணத்தில் இருந்த 1990 - 96 வரையான காலப்பகுதியில் அநேகமான ஆலயங்களில் திருவிழாக் காலங்களில கம்பராமாயண சொற்பொழிவுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்தன. பெரும்பாலும் கம்பன் கழகத்தைச் சேர்ந்தவர்களாலும், சில தனிப்பட்டவர்களாலும் இந்தச்சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. ஆயினும், மகாபாரதம் போல இராமாயணம் ஒரு போதும் நெருக்கமானதாக இருந்ததில்லை. மகாபாரதம் சொல்லும் அரசியல் அல்லது நீதி என்ன என்று நானும் பலதடவைகள் யோசித்து இருக்கின்றேன். எனது வாசிப்பில், மகாபாரதம் பொது அறத்தை முன்னிறுத்தும் நூல் அல்ல. அது ஆள்வோருக்கான அறத்தை "உயர் குலத்துக்கான" (Aristocrat) அறத்தையும், அந்த அறம் நிலைநாட்டப்படு வதையுமே தன் பிரதான கருத்தாகக் கொண்டிருப்பது. பொதுதர்மம் ஒன்றினை நிலைநாட்டுவதே ஆள்வோரின் கடமை என்று அது சொல்கிறது. அப்படிக் காப்பதற்காக ஆள்வோருக்கு பொது தர்மத்திலிருந்து மகாபாரதத்தில் "சில விலக் குகளும்" வழங்கப்படுகின்றன. ஆள்வோரின் அறமும் மக்களின் அறமும் வெவ்வேறு என்பது திருத்தமாகக் காட்டப்படுகின்றது. ஆள்வோரைக் காப்பதற்காக சாதாரண மக்கள் பலியிடப்படுவதைக் கூட நியாயம் என்று வலியுறுத்துகின்றது. இதை ஒத்த போக்கினை கிட்டத்தட்ட மகாபாரதம் "வியா சரால் எழுதப்பட்டதாகக்" கூறப்படும் கி.மு நான்காம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த கிரேக்க சிந்தனையாளர்கள் தத்துவஆசிரியர்களிடமும் காணலாம். குறிப்பாக அரிஸ்ரோட்டில் "அறம்" குறித்து எழுதும்போது ஆள்வோருக்கான அறமாகக் கூறும் கருத்துக்களில் இதே சாரத்தை அவதானிக்கலாம்.

இன்றைய காலப்பகுதியில் வைத்து மகாபாரதத்தினை மதிப்பிடுவதும், "மனித உரிமைகள்" என்கிற பரந்த அடிப்படையில் மகாபாரதத்தை மதிப்பிடுவதும் முறையாக மாட்டாது. ஒரு இலக்கியமாக, காவியமாக மகாபாரதத்தை அது நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலப்பகுதியுடன் இணைத்துப் பார்ப்பதே பொருத்தமானதாகும். குறிப்பாக காந்தாரி தன் கண்களைத் திருமணம் ஆனதிலிருந்து கட்டிக்கொண்டாள் என்பதை ஆணாதிக்க, பெண்ணியப் பிரச்சினையாக அணுகுவது முறையானதல்ல. அவள் கொண்ட காதலின் வெளிப்பாடாக அவளே அந்த முடிவை எடுத்திருக்கவும் கூடும் அல்லவா? (அதே நேரம் காந்தாரி தான் கண்தெரியாத திருதராஷ்டிரனைத்தான் கல்யாணம் செய்யப்போகின்றேன் என்பது தெரியாமல் பீஷ்மக் கனவுகளுடன் இருந்தவள் என்றும், அதற்கான எதிர்ப்பாகத்தான் தன் கண்களை மறைத்து துணிகட்டி மணமேடை வந்தாள் என்றும் தன் கதாகாலம் நூலில் எழுதியிருக்கின்றார் தேவகாந்தன். "இது பற்றிக் கேட்ட போது திருதராஷ்டிரன் சாம்பிப்போனான். அவள் தன்னையோர் அபாக்கியவதியாகச் சபையில் அடையாளப்படுத்தியதாக அவன் எண்ணிப் புழுங்கினான். ஆனால் சபையோ அவளின் பதிபக்தியாக அதைக் கண்டு மெய் மறந்திருந்தது பக்கம் 21).

அதே நேரம், மகாபாரதத்தை புனித நூலாக, போதனையாக முன்னிறுத்தி, இந்துத்துவப் பரப்புரை செய்யப்படும்போக்கு சற்று மேலோங்கி வருவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக அண்மைக்காலத்தில் இரண்டு முக்கிய தொலைக்காட்சிகளில் தொடராகவும், ஜெயமோகனின் இணையத்தளத்தில் நாளொன்றுக்கு ஒரு அத்தியாயமாகவும் எழுதப்படுவதையும், இந்திய மைய அரசு மத அடிப்படைவாத பா.ஜ.க.வின் வசம் வந்திருப்பதையும் எந்தச் சந்தேகமும் இல்லாமல் பார்க்கமுடியாமல் இருக்கின்றது. ஈழத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் கூட



மக்களால் மகாபாரதம் பற்றிய தொலைக்காட்சித் தொடர்கள் அதிகம் பார்க்கப்படுவதும் ஒரு விதமான கலாசாரப் படையெடுப்பே.

கதாகாலம் என்கிற மகாபாரதத்தின் நல்லதோர் மறுவாசிப்பினை எழுதிய எழுத்தாளர் தேவகாந்தனுடன் இந்த கருத்துக்களைக் குறித்துப் பேசியபோது அவர், வியாச பாரதத்திலேயே அறம் என்பது ஒழுங்குபடுத்தப்பட்டு கூறப்படுகின்றது. ஆனால் கதைசொல்லிகளால் சொல்லப்பட்டுவரும் பாரதக்கதைகளில் இந்த "ஒழுங்குபடுத்தப்பட்ட அறம்" என்பது இல்லை என்று கூறினார். மகாபாரதத்தில் மிகவும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட கீதையில் தான் இந்த அறம் நேரடியாக போதிக்கப்படுகின்றது. ஒரு விதத்தில், பாரதம் என்கிற வழங்கப்பட்ட கதையினை "இந்துத்துவத்திற்கு" ஆதரவு தரும் பிரதான நூல்களின் ஒன்றான மாற்றியது அதில் செருகப்பட்ட கீதையே. இன்று வரை கூத்து போன்ற மக்கள் கலைவடிவின் பாடு பொருளாகவும், அண்மைக்காலம் வரை சுருட்டுச் சுற்றுதல் முதலிய சிறு தொழில்கள் நடைபெறும் இடங்களில் வாசிக்கப்பட்டு வந்ததுமாக இருப்பது பாரதமே. இராமாயணம் போல பாரதம் மக்களை விட்டு விலகி நின்ற தல்ல. அது போலவே மகாபாரதத்தின் கதை மாந்தரும். கீதையைத் தவிர, கிருஷ்ணன் பாரதக் கதையில் வேறெங்கும் அவதாரமாவதில்லை.

■ கலைச்செல்வன் றெக்ஸி

# வீரர்களின் உருச்சிதைவு



கட்டபொம்மன் என்றதுமே நம் மனக்கண்முன் வருவது சிவாஜியின் முகம்தான். இதைப் பலர் பல இடத்தில் கூறியுள்ளார்கள். அது உண்மையும் கூட. .அதற்கான காரணமாகக் கட்டபொம்மனைப்பற்றிய படத்தில் சிவாஜியின் நடிப்பு ஆஹா ஓஹோ என இருந்ததாகக் கூறினாலும் எனக்கென்னமோ கட்டபொம்மனைப்பற்றிய படங்களோ ஆவணங்களோ இல்லாமலிருந்தபோது முதன் முதல் சிவாஜியின் முகத்தைப்பார்த்த மக்களின் மனதில் அது பதிந்துவிட்டது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

கட்டபொம்மன் என்ற மன்னனின் காலம் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரானது. இதனால் அவரைப்பற்றிய வரலாறு பெரும்பாலும் மக்களின் வாய்மொழிமூலமே பரவியிருக்க வாய்ப்புள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினை என்னவென்றால் பலர் கட்டப்பொம்மனை ஒரு வீரனாகவும் , சிறந்த நிர்வாகியாகவும் போற்றும் போது சிலர் கட்ட பொம்மனின் சரித்திரத்தை மாற்றிக் கூறுகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் எதேச்சையாக கட்டபொம்மனைப்பற்றி எங்கோ ஒரு இணையத்தில் படித்தபோது அதில் தெரிவித்திருந்த பல விடயங்களை என்னால் நம்பவும் முடியவில்லை.. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

அதைப்பற்றி அப்போதே விபரமாக ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதலாமா என யோசித்திருந்தேன் ஆனால் ஒருமுறை நண்பர் ஒருவருடனான உரையாடலின் போது தானும் இந்தக் கதைகளைக் கேள்விப்பட்டதாகவும் ஆனால் இது மக்களின் மென்னு ணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயமாதலால் இதனை ஆராய்வது புத்திசாலித்தனமல்ல என்றும் கூறினார். அதனால் அந்த முயற்சியை அப்படியே விட்டு விட்டேன்.

உலகின் பல நாடுகளில் அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் சம்பந்தமான எந்தவொரு அடையாளங்களையும் ஆதிக்க அரசுக்கள் விட்டு வைப்பதில்லை. சில வருடங்களில் சிறிது சிறிதாக அவற்றை அழித்துவிடுகின்றன அதற்கான காரணம் அடையாளங்களும் ஆவணப்படுத்தலும் இல்லாது போனால் மக்களின் உண்மையான தலைவனை திருடனாக்குவதும், கெட்டவனாக்குவதும் கடினமாக இருக்காது. அதையே அடுத்த சந்ததிகளும் நம்பிக்கொள்ளுவார்கள்.

ஒருவர் செய்த சாதனைகள், மாற்றங்கள் என்பவற்றை ஆவணப்படுத்தப்பட வேண்டும். அது இசையாக இருந்தாலென்ன புரட்சியாக இருந்தாலென்ன அவை ஆவணப்படுத்தப் படாவிட்டால் ஒரு காலத்தில் திரிவுபடுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்

ஒரு விடயத்தையோ, அல்லது ஒருவரைப்பற்றியோ விரும்பியதை விரும்பியபடி மாற்றுவதற்கு உலகில் பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கட்டபொம்மன் இறக்கும்போது மன்னனாக இருந்தான் என்பதும் தன் மண்ணுக்காக போராடினான் . வெள்ளையர்களுக்கு வரி கட்ட மறுத்தான் என்பதும் நாங்கள் காலங்காலமாக வாய்மொழியாகக் கேட்டு வளர்ந்தது. ஆனால் அவனின் ஆரம்பகாலம் எப்படியிருந்தது. எப்படி மன்னனானான், அவன் உண்மையான வீரனா அல்லது வீரனாக்கப்பட்டானா.. ? இவற்றைப்பற்றிய சரியான ஆதாரங்கள் பலருக்கும் தெரியாது. அவை யெல்லாம் திட்டமிட்டு வெள்ளையரால் அழிக்கப்பட்டுவிட்டதாக மக்கள் கூறுகின்றனர். கட்டப்பொம்மனின் வீரத்தை பற்றி மக்களிடம் வாய்மொழி மூலமாகப் பகிரப்பட்ட கதைகளே இப்போதும் நம்மிடையே உள்ளன.

ஆயினும் முழுமையான விபரங்கள் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் வெள்ளையர்கள் கட்டப்பொம்மன் பற்றி எழுத்து ரீதியாக புனையப்பட்ட சிலவற்றைக்காட்டி அவை தான் உண்மை என்றால் நாமும் நம்பத்தான் வேண்டும். இப்படித்தான் பல வீரர்கள் வரலாற்றின் பக்கங்களில் பயங்கரவாதிகளாக உருச்சிதைவு செய்யப்பட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனும் ரோபோவும்

"ரோபோ" என்கிற வார்த்தை பிறந்தது 1920 இல் தான். இந்தப்பெயரைச் சூட்டியவர் பிரபல செக் நாட்டுக் கலைஞர் ஜோசெஃப் சாபெக். அவருடைய தமையன் கேரல் சாபெக் நாடகத்தில் முதன் முறையாக இந்த வார்த்தையை உபயோகித்தார்.

கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், காலம் காலமாக மனிதர்கள் ரோபோக்களை உருவாக்கிக் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு, அல் சசாரி என்பவர் நிறைய "ஓட்டோமேட்டன்"களை வடிவமைத்திருக்கிறார். தானாகவே இயங்கக்கூடிய எந்தக் கருவியையும் ஓட்டொமேட்டன் என்று கூறலாம்.

சரி.. ரோபோவுக்கும் இவைகளுக்கும் என்ன வித்தியாசம்?


ஓட்டொமேட்டன்களுக்கு பற்றரி தேவையில்லை, அவைகள் சின்னச் சின்ன இலத்திரனியல் கருவிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டவை. அலிபாபாவின் குகையை (அடியில் அடிமைகள் இல்லையென்று வைத்துக்கொள்வோம்!) யாரேனும் தொட்டவுடன் அது திறந்து கொண்டால் எப்படியிருக்கும்? அதுதான் ஓட்டொ மேட்டன். மின்சார்ந்த ஓட்டொமேட்டன்களை இன்று ரோபோ என்று சொல்ல ஆரம்பித்துவிட்டோம்.

ரோபோ என்றால் என்னவென்று கேட்டதற்கு ஜோசஃப் எங்கெல்பர்கர் இவ்வாறு சொல்கிறார், "ரோபோ என்றால் என்னவென்ற கேள்விக்கு எனக்குப் பதில் தெரியாது. ஆனால், ஒரு ரோபோவை நான் பார்த்தால், இது ஒரு ரோபோ என்று அடையாளம் கண்டுகொள்ளத் தெரியும்!" அவர் சொல்வது சரியே. விதவிதமான வேலைகளைச் செய்வதற்காக ரோபோக்களைப் பிரயோகிப்பதால், அவையனைத்தையும் ஒரு சொல்லில் விளக்குவது சிரமமாகிறது.

மனிதனை ஒத்த உருவத்துடன் இருந்தால்தான் அதற்குப் பெயர் ரோபோ என்பது தவறு. தொழிற்சாலைகளில் நிறைய ரோபோக்களைக் காண முடியும். கார் தயாரிக்கும் இடங்களில் பெரிய பெரிய கைகள் (கைகள் மட்டுமே!) உடைய ரோபோக் களைப் பார்க்கலாம் .

ஐரோபோ என்றொரு நிறுவனம் வீடுகளை சுத்தம் செய்வதற்கு "ரூம்பா" என்றொரு ரோபோவைத் தயாரித்து விற்று வருகிறது. அதன் விலை, கிட்டத்தட்ட பதினாறாயிரம் இந்தியரூபாய். யுத்தங்களில் வேவு பார்ப்பதற்கும், சுடுவதற்கும் கூட ரோபோக்களை உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

நூறு ரோபோக்களில் நாற்பது ஜப்பானில் தான் தயாராகின்றன. மனிதர்களை உரித்து வைத்தாற் போல ரோபோக்களைத் தயாரிக்கிறார்கள். மிட்சுபிஷி என்றொரு பிரபல நிறுவனம் "இனி மனிதர்களும் ரோபோக்களும் ஒருவரோடு ஒருவர் ஒன்று வாழும் காலம் பக்கத்தில்தான்!" என்று சொல்கிறது.






# இரை தேடும் இணைய வலை

■ சுடுதண்ணி

ஆரொனின் மேல் சுமத்தப்பட்டுள்ள அனைத்தும் கணினி வலையமைப்புக் குறித்து அறிந்த, உணர்ச்சி வசப்படும் நபர்கள் அனைவரும் அவ்வப்போது செய்யும் செயல்கள் தான் . ஆனால் சட்டத்தின் படி உங்கள் வலையமைப்பில் உங்கள் அடையாளத்தினை வலையமைப்பு எண் மூலமாகவோ அல்லது இணையச் செயற்படு முகவரி மூலமாகவோ விதிமுறைகளை மீறி தரவிறக்கம் செய்வதை எந்த நாட்டிலும், எவரையும் ஆதாரமிருந்தால் தண்டிக்க முடியும். தினம், தினம் பலரும் இவற்றைச் செய்யும் பொழுது ஏன் ஆரொனை நோக்கி இப்படி கழுகெனப் பாய்ந்தது அமெரிக்க அரசு?. காரணம் விக்கிலீக்ஸ் மற்றும் இணையப்பெயரிலிகள்.

"கூட்டுக் கொலைகள்" என்ற காணொளியினை விக்கிலீக்ஸ் தளத்துக்கு வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேல் சிறையிலிருந்து வழக்கு விசாரணைக் குட்படுத்தப்பட்டு வரும் பிராட்லி மேனிங் விசாரணையின் போதும், சிறையிலும் நடத்தப்படும் விதம் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு செய்திருந்தார் ஆரொன். மேலும் இணையத்தில் கட்டற்ற தகவல் முறையினைத் தடுக்கும் சட்டமான 'சோபா' வினை எதிர்த்து வெற்றி காண்பதில் ஆரொனுக்கு உறுதுணையாக இருந்தது 'அனானிமஸ்' எனும் இணையப் பெயரிலிப் போராளிகள் இயக்கம். இவை இரண்டுமே அமெரிக்க அரசாங்கத்தின் கழுகுப் பார்வையில் ஆரொனைக் கொண்டு வந்து நிறுத்தின.

இணையத்தின் எதிர்காலத்தை ஆழ்ந்த தொழில்நுட்ப அறிவாலும், சமூகப் பார்வையாலும் நிர்ணயிக்கப் போகும் சக்திகளில் ஒன்றாகப் பார்க்கப்பட்ட ஆரொன் திடீரென தற்கொலை செய்த பிறகு, ஆரொன் எங்கள் நீண்ட கால நண்பர் என்றும், தாங்கள் வெளியிட்ட சில தகவல்களை அனுப்பியவர்கள் யார் என்பதற்கான ஆதாரமில்லையென்றா லும் ஆரொன் கொடுத்திருக்கலாம் என்று சேதாரமில்லாமல் தங்கள் தொடர்பினைத் தெரிவித்து விக்கிலீக்ஸ் அஞ்சலி தெரிவித்தது.

2010-2011 காலகட்டத்தில் விக்கிலீக்ஸின் யூலியன் அசான்ஞ்சே உடன் நேரடித் தொடர்பில் ஆரொன் இருந்ததாகவும் சந்தேகிக்கப்படுகிறது. விக்கிலீக்ஸ் தங்கள் நட்பினைக் கூறி அஞ்சலி செலுத்த, அதிரடி ஆட்டக்காரர்க ளான அனானிமஸ் குழு அஞ்சலி செய்த விதம் அமெரிக்க அரசை அலற விட்டது. சட்டத்தினையும், அதன் விளைவா னத் தண்டனைகளையும் காட்டி, நெருக்கடியில் தள்ளி ஆரொனை தற்கொலைக்குத் தூண்டியதாக அமெரிக்க நீதித்துறையினை நேரடியாகக் குற்றம் சாட்டிய அனானிமஸ், அவர்களின் இணையத்தளங்களுள் ஒன்றான www.ussc.gov தளத்தினை 'ஹக்கிங்' செய்து, அதில் ஆரொனுக்கு அஞ்சலி செலுத்தும் வாசகங்களை வலையேற்றினர். அதிர்ந்து போன அமெரிக்க அரசு, உடனே வலைத் தளத்தினை சரி செய்தது. அடுத்த சில நாள்களில் அதே தளத்தினை மீண்டும் 'ஹக்' செய்து தங்கள் வலிமையை உணர்த்திய அனானிமஸ், தளத்துக்கு வருபவர்கள் இன்புறும் வண்ணம் கணினியில் குழந்தைகள் விளையாடும் ஒரு விளையாட்டினையும் வலையேற்றி அமெரிக்க அரசுக்கு வெறியேற்றியது. மேலும் வழங்கியில் இருந்த அனைத்து குறியீடாக்கப் பட்ட ஆவணங்களனைத் தையும் (encrypted files) இணையத்தில் விநியோகித்தது. ஆரொனின் தற்கொலைக்குக் காரணமான இணையக் குற்றங்களுக்கானக் கடும் சட்டங்களை மாற்றியமைக்கா விட்டால் விநியோகிக்கப்பட்ட ஆவணங்களை அனைவரும் படிக்கும் வண்ணம் அவற்றுக்கான குறியீட்டுச் சொற்களை வெளியிடப் போவதாகவும் மிரட்டல் விடுத்தனர்.

அமெரிக்காவின் போர்முறைகளில் ஒன்றாக இணைய யுத்தம் (Cyber warfare) மாறி பலகாலமாகிவிட்ட சமயத்தில், உலக நாடுகளில் தங்கள் வலையமைப்பின் பாதுகாப்புக்காக அதிகம் செலவு செய்யும் நாடான அமெரிக்காவுக்கு அனானிமஸின் வலைத்தளத் தாக்குதல் வரலாற்றில் மறைக்க முடியாத வடு. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் சுமார் 2500க்கும் மேலான வலையமைப்புப் பாதுகாப்பு வல்லுநர்களை வேலைக்கு அமர்த்தப் போவதாக அறிவித்திருப்பதின் மூலம் இணையப் பெயரிலிகளின் தாக்குதல் ஆழத்தினை புரிந்து கொள்ளலாம். அமெரிக்கர்களின் வரிப்பணத்தில் கணிசமான அளவினை விழுங்கும் அளவுக்கு வலையமைப்பின் பாதுகாப்புக்கு எப்படிச் செலவு செய்கிறார்கள், அப்படி என்ன தான் ஒன்றுக்கு பத்தாகப் பூட்டுகள் போட்டாலும் அதனை போகிற போக்கில் போட்டுத்தள்ளும் இந்த இணையப் பெயரிலிகள் குழுவினரின் வலிமையின் ரகசியம் என்ன? அவர்கள் யார்? அவர்களின் வீரதீர சாகசங்கள், சத்த மில்லாமல் திரைமறைவில் நடக்கும் இணைய போர்களின் கறுப்புப் பக்கங்கள், அவற்றுக்குப் பலியான ஆரொன் போன்றவர்கள், இவற்றின் மூலம் இணைய மென்னும் ரத்த பூமியில், பஞ்சு மிட்டாயும், குருவி ரொட்டியும் தேடி மனம் போன போக்கில் பின் விளைவுகள் குறித்து அறியாமல் அலைந்து திரியும் சாமானியர்களாகிய நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை என்ன...?.

(தேடல்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

விடுதலைப்போராட்டம் பற்றிய ஒரு பதிவு

36

உலகம் பூராகவும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் எவ்வளவோ பொதுத்தன்மைகள் இருக்கின்றன. ஆகவே போராட்டங்களில் ஈடுபடும் ஏனைய பெண்களின் அனுபவங்களைத் தமிழ்ப் பெண்களுக்குப் பகிர்ந்து கொள்ள என்றும், அவர்களுடன் இதய பூர்வமாக ஒன்றித்து நிற்க வேண்டும் என்றும் விரும்பினேன். நான் எனது நூலை எழுதத் தொடங்குமுன்னரே தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் தோன்றியதால் , 1983 ஓகஸ்டில் நாம் சென்னைக்குத் திரும்பினோம். எனது ஆய்வுத் தரவுகள் அனைத்தையும் .இலண்டனில் விட்டுவிட்டு ஒரு சில குறிப்புக்களுடனேயே புறப்பட்டேன். இறுதியில் அந்தக் குதிப்புக்களே "பெண்களும் புரட்சியும்" என்ற சிறுநூலாக வடிவெடுத்தன.



## திருப்புமுனை; கறுப்புஜீலை

தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் என்ற வடிவில்,1983 ஜீலையில் இலங்கையிலே வெடித்த வன்செயல் சம்பவங்கள், தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் தலைகீழான மாற்றத்தைக் கொண்டு வந்தது. தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்கள் 1958 இல் இருந்தே காலத்துக்குக் காலம் தலை தூக்கிய போதும், 1983 இல் இடம் பெற்ற இனப் பூகம்பமே இலங்கை வரலாற்றில் மிகக் கறைபடிந்தாகும். குரூரமும், காடைத்தனமும்,காட்டுமிராண்டித்தனமும் ஒன்றையொன்று விஞ்சி நின்றன. தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் நாடு முழுவதையும் உலுக்கியது. சிங்கள மக்களிடம் உறைந்து கிடந்த வரலாற்றுக் குரோதமானது வன்செயல் எரிமலையாக வெடித்துச் சிதறி, முன்னெப்போதும் காணாத அளவுக்கு மரணத்தையும் அழிவையும் ஏற்படுத்தியது. இரத்த வெறி கொண்டு அட்டகாசம் புரிந்த சிங்களக் காடையர்களால் அநாதரவான பல்லாயிரம் தமிழ் மக்கள் கண்ட துண்டமாக வெட்டிச் சரிக்கப்பட்டார்கள். சிங்களவரின் மனிதத்துவம் மறைந்த நிலையும் இனக்கலவரத்தில் காணப்பட்ட இனக் கருவறுப்பு நோக்கமும், இனக் காழ்ப்புடனான வன்செயல் பிரீடலும் நாகரீக உலகின் மனச்சாட்சியை ஒரு கணம் உலுக்கியது. இந்த இனவெறி தெற்காசியாவின் நோயாளியாக , சிங்கள இனம் மீது கறை பூசியது.

வடபுல நகரமான யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு கொரில்லாத் தாக்குதலுக்குச் சிங்கள மக்களின் பதிலடியாகவே இந்த இனக்கலவரம் பொங்கி வழிந்ததாகக் கூறப்பட்டது. விடுதலைப் புலிகளின் கொரில்லா அதிரடிப் பிரிவு ஒன்று, பிரபாகரன் அவர்களின் நேரடித் தலைமையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலே, இராணுவ வண்டித்தொடர் மீது பதுங்கித் தாக்குதல் ஒன்றை நடத்தியது. இது 1983 யூலையில் நடத்தியது. பதின்மூன்று இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டார்கள். விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் இது ஒரு வெற்றிகரமான அதிரடித் தாக்குதலாகும். ஆனால் சிங்கள அரசைப் பொறுத்தவரையிலே இது மானத்தை வாங்கும் படுதோல்வியாகும். சிறீலங்கா இராணுவத்தில் இத்தனை படையினர் கொல்லப்பட்டது இதுவே முதற்தடவை. ஜெயவர்த்தனா அரசு குமுறியது. சிங்கள ஊடகங்களும் இந்தச் சம்பவத்தை பூதாகரப்படுத்தின; உணர்ச்சியூட்டும் அறிக்கைகளால் தீமூட்டின.

(பதிவு தொடரும்)




28.05.2014 -03.06.2014

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

பணிகளை புதிய யுக்தியுடன் தொடங்குவீர்கள். வளர்ச்சிப் பாதைக்கான வழிதிறக்கும். குடும்பச்செலவு திட்டமிட்டதை விடக் கொஞ்சம் அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களின் அக்கறை மிகுந்த கருத்தை விமர்சிக்க வேண்டாம். புத்திரரின் உடல்நலத்திற்கு, பலம் சேர்க்க சத்து நிறைந்த உணவு வழங்குவீர்கள். எதிர்ப்பாளரால் வருகிற தொல்லை விலகும். இல்லறத்துணை உங்களை கண்ணும் கருத்துமாக வழிநடத்துவார். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, பணவரவு இருக்கும். பணியாளர் கால அவகாசத்தில், பணி இலக்கு நிறைவேற்றி நற்பெயரைக் பாதுகாத்திடுவர். பெண்கள், கணவரின் மனம் அறிந்து உதவிகரமாக செயல்படுவர். மாணவர்கள், நண்பரின் குடும்ப சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

மனதில் புதிய உற்சாகத்துடன் நிலுவைப்பணிகளை நினைவுபடுத்தி நிறைவேற்றுவீர்கள். அக்கம் பக்கத்தவர் அன்பு நிறைந்த மனதுடன் பழகுவர். தொலைதூர பயணம் மேற்கொள்வதால், சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். புத்திரரின் பிடிவாதக் குணத்தை, இனிய அணுகுமுறையால் மாற்றுவீர்கள். பணக்கடன் பெருமளவில் குறைந்து, சேமிப்பு உருவாகும். . பணியாளர்கள், பணியிடத்தில் தேவையற்ற விஷயம் [illegible] தவிர்ப்பீர்கள். பெண்கள், ஆடை, அலங்காரப்பொருட்கள் வாங்குகின்ற எண்ணம் நிறைவேறும். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைத்துக் கொள்வது நல்லது.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

குடும்ப உறுப்பினர்களின் அத்தியாவசியத் தேவைகளை, மனமுவந்து நிறைவேற்றுவீர்கள். இளைய சகோதரரின் அதிருப்தி, மனதிற்கு ஆறுதல் தரும் வகையில் உதவுவீர்கள். வீடு, வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். இல்லறத்துணை கருத்து, ஒற்றுமையுடன் அன்பு பாராட்டுவார். தொழிலில் அபிவிருத்தி பணி செய்ய, எதிர்பார்த்த நிதியுதவி பெறலாம். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பு, திருப்திகர பணவரவு பெறுவர். பெண்கள், விதவிதமான உணவு தயாரித்து, குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்குவர். மாணவர்கள், நண்பரிடம் ஞானம் நிறைந்த கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வர்.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

புத்திரர், உங்கள் சொல்படி நடந்து, ஒற்றுமை வளர்ப்பர். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். ஒவ்வாத உணவு வகை தவிர்க்கவும். இல்லறத்துணையின் மனக்குறையை சரி செய்வதில், கூடுதல் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் முழு கண்காணிப்புடன் செயல்படுவதால் உற்பத்தி, விற்பனை சராசரி நிலையை அடையும். பணியாளர்கள் பணம் மற்றும் பொருள் வகையில், எவருக்கும் பொறுப்பேற்கக் கூடாது. பெண்கள், உறவினர் குடும்ப விவகாரம் பற்றி கணவரிடம் அதிகம் விவாதிக்க வேண்டாம். மாணவர்கள் சீரான [illegible] உடல்நல ஆரோக்கியம் பாதுகாக்கலாம்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

நீண்டதூர வாகன பயணத்தில் மித வேகம், உரிய பாதுகாப்பு பின்பற்றவும். புத்திரர் சாத்விக குணத்துடன் செயல்பட்டு, நற்பெயர் பெறுவர். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். தொழில் வளர்ச்சி பெற, தேவையான அரசு உதவி எளிய முயற்சியால் கிடைக்கும். பணியாளர்கள், சிறப்பாக பணி செய்து பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள், கணவரின் நல் அன்பு, தாராள பணவசதி கிடைத்து, மகிழ்ச்சி கர வாழ்வு நடத்துவர். மாணவர்கள், அதிக விலையுள்ள பொருள் கவனமுடன் பயன்படுத்தவும்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

தன்னால் இயலாது என, ஒதுக்கி வைத்த பணியை, சிலரது வற்புறுத்தலினால் செயல்படுத்த முயற்சிக்க வேண்டாம். குடும்பத் தேவை நிறைவேற்ற, அதிக அளவில் பணம் செலவாகும். பொது விவாதங்களில், கருத்து சொல்வதை தவிர்ப்பதால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். நிர்பந்த பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நம்பிக்கை தரும். பெண்கள், குடும்ப பணவரவுக்கேற்ப செலவுகளை சிக்கனமாக மேற்கொள்வர். மாணவர்கள், பெரியவர்களின் நல்ல கருத்துக்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதால் நன்மை உண்டாகும்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

நல்லவர்களின் அறிவுரை, உதவி எதிர்பாராத வகையில் கிடைக்கும். புத்திரர், நண்பருக்கு இணையான மனதுடன், உங்களிடம் பழகுவர். உடல்நலம் ஆரோக்கியம் பெற, சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை மேற்கொள்வீர்கள். இல்லறத்துணை, உங்களின் திறமை வளர தேவையான ஆலோசனை வழங்குவார். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், தகுந்த உழைப்பு என்ற நடைமுறையை பின்பற்றுவீர்கள். அரசியல்வாதிகள், சமரசபேச்சு வார்த்தையில் நல்லதீர்வு உருவாக்கி நற்பெயர் பெறுவர். பெண்கள், தாய்வீட்டு உதவி கிடைத்து மனம் மகிழ்வர். மாணவர்கள், உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ணக்கூடாது.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

எவரிடமும் நிதானித்து பேசுவதால், உங்கள் மீதான நல் அபிப்ராயத்திற்கு குறை வராது. வீடு, வாகனத்தில், உரிய பாதுகாப்பு முறை பின்பற்ற வேண்டும். புத்திரரின் வெகுநாள் விருப்பம் பணவசதிக்கேற்ப நிறைவேற்றுவீர்கள். எதிரி சொந்த சிரமங்களால், உங்களுக்கு எதிராக செயல்படுகிற முயற்சியில் தாமதம் ஏற்படும். இல்லறத் துணையின் கருத்துக்கு, உரிய மதிப்பு தருவதால், குடும்ப ஒற்றுமை சிறப்பாக அமைந்திடும். பணியாளர்கள், உடல்நலம் பாதுகாத்தல் வேண்டும். பெண்கள், குடும்பத்தில் உருவாகிற சிறு பிரச்சனைகளால் மனம் தளர வேண்டாம். மாணவர்கள், புதிய கலைகள் கற்பதில் ஆர்வம் வளரும்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

பழகுபவர்களிடம், உங்கள் மீதான நல்ல எண்ணத்திற்கு குறை வராமல் பார்த்துக் கொள்ளவும். உடன் பிறந்தவர்களின் கஷ்ட சூழ்நிலை விலக உதவுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு பணி நடத்துவதால், பயணம் எளிதாகும். புத்திரர் சுறுசுறுப்பு, அறிவுத் திறன் பயன்படுத்தி, படிப்பு சார்ந்த புதிய விஷயங்களை அறிந்து கொள்வர். இஷ்ட தெய்வ அருள் பலத்தால், துன்பம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள், பணவரவுக்கேற்ப செலவுகளை ஏற்பது சிரமம் தவிர்க்கும். பெண்கள், கணவரின் அனுமதி இன்றி, உறவினர் பிரச்சினையில் சமரசம் பேச வேண்டாம்.

### மகரம்

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

பொது இடங்களில், நிகழ்வுகளை அதிக நேரம் வேடிக்கை பார்க்க வேண்டாம். அலைச்சல் தரும் பயணம் தவிர்ப்பதால் நேரமும், பணமும் மிச்சமாகும். புத்திரரின் கருணை மனம் நிறைந்த செயல்பார்த்து பெருமிதம் அடைவீர்கள். எதிரியின் குணம் உணர்ந்து விலகுவீர்கள். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர், கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழிலில் வருகிற இடையூறு, தாமதமின்ஷீ சரிசெய்வது நல்லது. பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள், சேமிப்பு பணம் குடும்பத்தின் சிறு செலவுக்கு பயன்படுத்துவர். மாணவர்கள், ஆன்மிக கருத்துகளை அஷீவதில் ஆர்வம் கொள்வர்.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களின் உதவி, திருப்திகர அளவில் கிடைக்கும். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்குகிற முயற்சி நிறைவேறும். புத்திரர் விரும்பிய பொருள் கேட்டு வாங்குவதில் அக்கறை கொள்வர். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணையுடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, கூடுதல் மூலதனத்தில் அபிவிருத்தி பணி மேற்கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், குடும்ப பணவசதிக்கேற்ப வீட்டு உபயோகப் பொருள், ஆபரணம் வாங்குவர். மாணவர்கள், நல்ல எண்ணம் மனதில் வளர்த்து நண்பர்களுக்கு உதவுவர்.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

பேசும் வார்த்தை மற்றும் செயல், பிறர் நலத்தில் அக்கறை மிகுந்திருக்கும். வீட்டிற்கு வரும் உறவினரை உபசரிப்பதில், உரிய ஆர்வம் வேண்டும். எதிரியிடம் விலகுவதால், எதிரி மனதிலும் உங்கள் மீது நல்ல எண்ணம் ஏற்படும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன், குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். பணியாளர், பணியிடத்தில் பொறுமைக் குணத்துடன் செயல்படுவர். பெண்கள், சேமிப்பு பணத்தில் குடும்பத்தின் சிறுதேவைகளை பூர்த்தி செய்வர். மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்

1.பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
அடம் ஸ்மித்

2.ஆசியாவில் முதன் முதலில் தொழில் மயமான நாடு எது?
ஜப்பான்

3.ஆசியாவில் கடைசியாகத் தொழில் மயமான ஐரோப்பிய நாடு எது?
ரஷ்யா

4.காளானில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து எது?
பென்சிலின்

5.லட்சத் தீவில் அதிகம் பேசப்படும் மொழி எது?
மலையாளம்

6.சிவப்பு எறும்பின் கொடுக்கில் அமைந்துள்ள அமிலம் எது?
பாரமிக் அமிலம்

7.வெளவால் ஏற்படுத்தும் ஒலி எது?
மீயொலி

8.மனிதன் ஒரு அரசியல் மிருகம் எனக் கூறியவர் யார்?
அரிஸ்டோட்டில்

9.வனவிலங்கு தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு எது?
கி.பி1890

## உங்களுக்குத் தெரியுமா?

■மனிதன் இறக்கும்போது உடலில் இருந்து கடைசியாக விலகும் புலன் கேட்டல் ஆகும்.பார்வையே முதலில் பிரியா விடைபெறும் பகுதியாகும்.

■ ஸ்டோபரி பழங்களில்மட்டுமே விதைகள் பழத்துக்கு வெளியே முளைக்கின்றன.

■ பழங்களில் ஆனைக் கொய்யா விலேயே அதிக கலோரிகள் உள் ளன. ஒவ்வொரு 100கிராமிலும் 167 கலோரிகள் உள்ளன.

■ஆகாயப்பரப்பிலிருந்து விழும் தூசு துணிக்கைகளால் பூமியின் எடை ஆண்டொன்றுக்கு 100 தொன்களால் அதிகரிக்கின்றது.

■ விண்வெளியில் மேலதிகமாக எடுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு கிலோ எடைக்கும் 530கிலோகிராம் மேலதிக எரிபொருள் தேவை.

■ஒவ்வொரு ஆண்டும் சந்திரன் புவியை விட்டு இரண்டு அங்குலம் அப்பால் விலகிச் செல்கின்றது.

## விடுகதையாம் விடுகதை



விடுகதையாம் விடுகதை
விருப்பமான விடுகதை
புதிர்க்கதைகள் சொல்லித் தரும்
புதுமையான விடுகதை
பாட்டி சொல்லும் விடுகதை
பைந்தமிழின் விடுகதை
தாத்தா சொல்லும் விடுகதை
தருமே நமக்குப் புதுக்கதை
விடுகதைகள் கேட்கலாம்
விடைகள் இன்றி முழிக்கலாம்
கண்டு சொன்னால் பெருமையே
கதைகள் என்றும் இனிமையே!

## விடுகதையும் விடையும்

01.ஏற்றி வைத்து அணைத்தால் எரியும் வரை மணக்கும். அது என்ன?
**ஊதுபத்தி**

02.மூன்றெழுத்துப் பெயராகும் முற்றும் வெள்ளை நிறமாகும்?
**பஞ்சு**

03.தொட்டால் மணக்கும். சுவைத்தால் புளிக்கும். அது என்ன?
**எலுமிச்சைப்பழம்**

04.எவர் கையிலும் சிக்காத கல். எங்கும் விற்காத கல். அது என்ன?
**விக்கல்**

05.சுற்றும் போது மட்டும் சுகம் தருவாள். அது என்ன?
**மின்விசிறி**

06.செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?
**தொலைபேசி**

## வாரம் ஒரு திருக்குறள் படிப்போம்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

**விளக்கம்** : அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை அதுபோல உலகில் வாழும் உயிர்களுக்கு இறைவன் முதன்மை.

## பயன்படுவது

■தொழிற்சாலையில் நொதித்தல் நிகழ்ச்சிக்கு - ஈஸ்ட்
■காய்களைப் பழமாக்க பயன்படுவது - எத்திலின்
■விண்வெளியில் உணவாகப் பயன்படுவது- குளோரெல்லா
■முடிச்சாயம் தயாரிக்கப் பயன்படுவது - வெள்ளி நைட்ரேட்
■பட்டாசு தயாரிக்கப் பயன்படுவது - பொட்டாசியம் நைட்ரேட்
■நார் தயாரிக்கப் பயன்படுவது -பாக்டீரியா கிளாஸ்டாரியம்



## சிறுவர் உலகம்

# புறாவும் பூவும்

### சிறுவர்களுக்கான குட்டிக் கதை

**ஒரு** பக்தன் அழகான மண்டபம் ஒன்றைக் கட்டினான். அது எண்கோண வடிவத்தில் இருந் தது. அதன் எட்டுப்பக்கச் சுவர் களிலும் நிலைக் கண்ணாடிகள் பதித்திருந்தான். எந்த உருவமும் எந்தத் திசையில் பார்த்தாலும்தெரியும் படி அமைக்கப்பட்டிருந்தது.

மண்டபத்தின் நடுவே அழ கான மலரைக் கொண்டு வந்து வைத் தான் பக்தன். அழகான ஒரு மலர் எட்டு மலர்களாகத் தோற்றம் அளித்தது. அவன் கதவை மூடும் முன் அந்த மண் டபத்துக்குள் சிறு வெண்புறா ஒன்று நுழைந்து விட்டது. அது கண்ணாடி யில் தனது விம்பத்தைப் பார்த் தது.

கண்ணாடியில் தெரியும் விம்பத்தை உண்மை என்று எண்ணி அதை நோக்கிப் பாய்ந்து பறந் தது. எட்டுத் திசைகளிலும் அது மாறிமாறிப் பறந்தது. கண்ணாடியில் மோதிற்று. ஆனால் அந்தப் பறவையால் வெளியேற முடியவில்லை.

கடைசியில் புறா சோர்ந்து போய்த் தரையில் விழுந்தது. அதன் அருகே இருந்த அழகான மலரை அது அப்போது தான் பார்த்தது. அந்த இடத்தில் அதுவே உண்மை என்பதை உணர்ந்து கொண்டது.

வாழ்க்கையில் அந்தப் பறவை யைப் போலவே நாமும் மாய நிழல் களைத் தேடி அலைகிறோம். நமக்குள்ளேயே இருக்கும் இறை வனை நாம் உணர்வதில்லை. வாழ்க்கையிலே தோல்வி களை அடைந்து மனம் சலித் துப் போய் விழும் வேளையில் நிதர்சனமான உண்மை எது என்பதை உணருகிறோம்"


கதையில் சொன்ன புறா மாதிரிஇருக்காமல் வாழ்க்கையில் எந்த நேரமும் முயற்சித்துக் கொண்டே இருக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறப்புத் திரை விமர்சனம்



# கோச்சடையான்

கோட்டையபட்டினம் நாட்டின் தலைமைத்தளபதி கோச்சடையான். தன் படைவீரர்களைக் காக்க அவர் செய்யும் ஒரு செயலால், தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டுச் கொல்லப்படுகிறார். கோச்சடையானின் மகன் ராணா அவர் மீதான பழியை நீக்கி, பழிவாங்குவதே கதை.

படம் ஆரம்பித்து கொஞ்ச நேரத்துகுகு 'இது ரஜினி தானா? சரத்குமார் தானா? தீபிகா தானா?' என்று நம் மனம் ஆராய்ச்சியில் இறங்குவது உண்மை தான். உயிரோடு இருக்கும் ஆள்களின் தோற்றத்தில் பொம்மைகள் நடமாடும்போது, நாம் ஒப்பிட்டு பார்ப்பது இயல்பு தான். ஆனாலும் கொஞ்சநேரத்தில் பாத்திரங்களோடு நாம் ஒன்றித்துப் போய்விடுகின்றோம்.

சிறுவன் ராணா கோட்டயப்பட்டினம் நாட்டில் இருந்து, அவர்களின் எதிரி நாடான கலிங்கபுரிக்கு போவதில் ஆரம்பிக்கிறது படம். அங்கே வளரும் ராணா, தன் வீரத்தால் படைத்தளபதியாக மாறுகின்றார். மனதுக்குள் ஒரு திட்டத்தோடு காய் நகர்த்தி, அந்த நாட்டின் மன்னன் ஜாக்கிசெராப் இளவரசர் ஆதியை ஏமாற்றி, தான் நினைத்தபடியே கோட்டயப்பட்டினத்துக்கு ஒரு வீரனாகத் திரும்பி வருகிறார்.

கலிங்கபுரியில் மாமா நாகேஷ் கோச்சடையானின் தங்கையை வளர்த்து வருகிறார். கோச்சடையானின் அண்ணன் சிறுவயதிலேயே காணாமல் போய் விட்டதாகச் சொல்கிறார் நாகேஷ். ராணாவின் தங்கையை இளவரசர் சரத் குமார் காதலிக்க, இளவரசி தீபிகா படுகோனே ராணாவைக் காதலிக்கிறார். இந்தப் பண்டமாற்று முறை காதல் அரசர் நாசரைக் கடுப்பேற்றிவிடுகிறது. கூடவே ராணாவின் பழி வாங்கும் கதையும் சேர்ந்துகொள்ள, படம் அதன்பின் 'ஜெட்' வேகத்தில் செல்கிறது.

உண்மையில் இந்தப் படத்தைக் காப்பாற்றுவது கே.எஸ்.ரவிகுமாரின் கதை-திரைக்கதை-வசனம் தான். கதை வலுவாக இருப்பதால், கொஞ்ச நேரத்திலேயே அனிமேசன் படம் என்பதை மறந்து படத்தில் ஒன்றிவிடுகிறோம்.இது அனிமேசன் இல்லை, மோசன் கேப்சரிங் முறைமை என்றெல்லாம் சொல்கிறார்கள். நம் சிற்றறிவுக்கு பெரிதாக வித்தியாசம் தெரியவில்லை. சில இடங்களில் முகத்தில் உணர்ச்சியைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதைத் தான் சொல்கிறார்களோ, என்னவோ. நமக்கு எல்லாமே பொம்மை தான்.

ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசையும் பாடல்களும் காட்சிகளுக்கு உயிர் கொடுக்கின்றன . மெதுவாகத்தான், கண்ணே கனியே, சில்லென்ற என எல்லாமே அட்டகாசமான பாடல்கள். காட்சிப்படுத்திய விதமும் பிண்ணனிக் காட்சிகளும் நன்றாகவே வந்திருக்கின்றன.

அனிமேசன் பாத்திரங்களில் சூப்பர் ஸ்டார், நாசர், சோபனா, ஆதி ஆகியோரின் உருவங்கள் அருமை. சரத் குமார், ஜாக்கி செராஃப் உருவங்கள் பரவாயில்லை. ஆனால் மிகவும் மோசம், தீபிகா படுகோனே மற்றும் தங்கையாக வரும் ருக்மிணி(பொம்மலாட்டம் ஹீரோயின்), சண்முகராஜன் உருவங்கள் தான்.

அதென்னவோ தெரியவில்லை, எல்லாச் சரித்திரப்படங்களிலும் மன்னன் மகளையே நாயகர்கள் காதலிக்கிறார்கள்.அந்தக் காலத்திம் நம் மன்னர்களுக்குப் பெரும் தலைவலியாக இந்தப் பிரச்சினைதான் இருந்திருக்கும் போல.

தமிழ் சினிமா வரலாற்றில் கோச்சடையான் புதிய தொடக்கமாக அமையலாம். அந்த வகையில் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. இதுவரை அனிமேசன் படங்களுக்கென்று, தமிழ் சினிமாவில் பெரிதாக வரவேற்புக் கிடையாது. இனி அது உருவாகலாம். அதே போன்றே மற்ற ரஜினி படங்களை நினைத்துப் பார்த்தாலும் கஷ்டம் தான். இரண்டு மணிநேரத்தில் படம் முடிவது, இன்னொரு ஆறுதல்.

இறுதிக்காட்சியில் ராணா தன் தாயின் சபதத்தை நிறைவேற்றிவிடுகிறார். ஆனால் அதனாலேயே தந்தை கோச்சடையானின் சபதத்தை மீறிவிடுகிறார். படத்தின் இறுதிக்காட்சியில் காணாமல் போன அண்ணன் சோணா (அதுவும் ரஜினி தான்) வந்து நிற்கிறார். தம்பியும் அண்ணனும் மோத வேண்டிய சூழலில் தொடரும் போட்டு விடுகிறார்கள். அப்போ கோச்சடையான் பாகம் இரண்டும் வருமா?

# திறக்கப்போகிறது பிரமாண்டத்தின் கதவு

### அனிமேஷன் தொழிநுட்பக் கலைஞரின் கருத்து

தமிழ் சினிமா ரசிகர்களின் பார்வை ஒட்டுமொத்தமாக கோச்சடையான் மீது குவிந்திருக்கும் நேரம் இது. 'பெர்ஃபோர்மென்ஸ் கப்சரிங்' தொழில்நுட்பத்தின் மூலம் முழுமையாகத் தயாராகியிருக்கும் முதல் இந்தியத் திரைப்படம், இந்தியர்களின் கைவண்ணம் எப்படியிருக்கும், அதையும்தான் பார்த்துவிடலாமே என்ற எதிர்பார்ப்பை உலகம் முழுவதுமே உருவாக்கியிருக்கிறது. இந்த நேரத்தில் கோச்சடையான் படத்தின் தொழில் நுட்பத்தில் பணியாற்றிய லண்டனைச் சேர்ந்த சென்ட்ராய்ட் நிறுவனத்தின் செயல் இயக்குநர் பில் கோச்சடையானின் தொழினுட்ப பிரமாண்டத்தின் ரகசியக்கதவுகளைத் திறக்கும் வகையில் உரையாடினார்.

**கேள்வி: 'பெர்ஃபோர்மென்ஸ் கப்சரிங்' என்றால் என்ன ?**

பதில்: 'பெர்ஃபோர்மென்ஸ் கப்சரிங்' பற்றி சொல்லும் முன்பு உங்களுக்கு இன்றைய டிஜிட்டல் சினிமாவின் அடிப்படையாக இருக்கும் வெர்ச்சுவல் உலகம் பற்றிச் சொல்லியே ஆகவேண்டும்.

'வெர்ச்சுவல் உலகம்' என்பது நவீன காலத் திரைப்படங்களின் முக்கிய அங்கமாகவும், தொழில் நுட்பமாகவும் ஆகியிருக்கிறது. வெர்ச்சுவல் உலகம் என்றதும் இது ஏதோ நமக்குத் தெரியாத உலகமாக இருக்கிறதே என்று நீங்கள் பின்வாங்க வேண்டிய அவசியமில்லை. காரணம் நம்மைவிட நமது குழந்தைகளுக்கு வெர்ச்சுவல் உலகம் என்பது நன்றாகவே பழகியிருக்கிறது. 3டி முறையில் அனிமேஷன் செய்யப்பட்ட, கற்பனையை மிஞ்சும் கதைக் களங்களில் அவர்கள் கம்ப்யூட்டர் மற்றும் மொபைல் கேம்களில் பயணிக்கிறார்கள். அவர்களுக்கு ரோமில் இருக்கும் ' கலோசியமும்', சீனாவில் இருக்கும் பெருஞ் சுவரும், இந்தியாவில் இருக்கும் தாஜ்மஹாலும் மாபெரும் கட்டட அமைப்புகளாகத் தெரியாது. அவர்கள் பார்க்கும் அனிமேஷன் படங்களிலும், அனிமேஷன் விளையாட்டுகளிலும் உருவாக்கப்படும் வெர்ச்சுவல் உலகங்கள் பிரமாண்டமானவை. இவை அனைத்துமே பல நூறு மில்லியன் டொலர்களைக் கொட்டி, கலை இயக்கம் மூலம் உருவாக்கப்பட்ட அரங்குகள் அல்ல. எல்லாமே வெர்ச்சுவல் உலகில் டிஜிட்டல் தொழில் நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட பிரமாண்டங்கள். நீங்கள் வரலாற்றில் இழந்த எந்தவொரு பிரமாண்ட உலகத்தையும் இதில் கொண்டுவரலாம்.

கோச்சடையான் படத்தின் வெர்ச்சுவல் உலகம் உங்களை மிரள வைக்கும். பிரமாண்டமான அரண்மனைகள், ஆடைகள், போர் கருவிகள், யானைகள், குதிரைகள், தேர்கள் என்று எல்லாம் வெர்ச்சுவல் உலகில் தயாரானவைதான்.

என்னதான் பிரமாண்டமான வெர்ச்சுவல் உலகைப் படைத்தாலும் அதில் உயிருள்ள கதாபாத்திரங்கள் தேவையல்லவா? அதற்குத்தான் மனிதர்களை நடிக்க வைத்து, நாம் உருவாக்கும் வெர்ச்சுவல் கதாபாத்திரங்களுக்கான உடல்மொழியை அப்படியே பிரதி செய்துகொள்கிறோம். இப்படி 'பெர்ஃபோர்மென்ஸ் கப்சரிங்' செய்யப் பட்ட பத்துவிதமான கோப்புகளை வெர்ச்சுவல் கதாபாத்திரத்துக்குள் மெல்ல மெல்ல உள்ளீடு செய்து, அந்தக் கதாபாத்திரத்தை உண்மையான படத்தில் நடிக்கும் ரத்தமும் சதையும் கொண்ட மனித நடிகரின் கதாபாத்திரம் போன்ற தோற்றத்தைக் கொண்டு வருகிறோம்.

**கேள்வி : மோஷன் கேப்சரிங் தொழில்நுட் பத்தில் நடிக்கப் பயிற்சி தேவையா?**

பதில்: கண்டிப்பாக வேண்டும். தொழில்முறை நடிகர்கள் முதல்முறையாக மோஷன் கப்சரிங் தொழில்நுட்பத்தில் நடிக்கிறார்கள் என்றால் அவர்களுக்கான முதல் சவால், முகத்தில் காட்ட வேண்டிய உணர்ச்சி மற்றும் கண்ணசைவு, கை, கால்களில் காட்ட வேண்டிய அசைவுகள் ஆகியவற்றைக் கவனத்துடன் ஒரே நேரத்தில் செய்ய வேண்டியிருக்கும். இதற்காக முகத்தில் 16 இடங்களிலும், ஒட்டுமொத்தமாக உடல் முழுவதும் 54 இடங்களிலும் அசைவுகளைத் துல்லியமாகப் பதிவுசெய்ய சென்சார் புள்ளிகளை வயர்கள் மூலம் இணைத்துவிடுவோம். எனவே உடலின் எந்த அசைவும் மோசன் கப்சரிங் செய்யும்போது தப்பிக்காது. தொழில்முறை நடிகர்கள் தவிர, மோஷன் கேப்சரிங் தொழில்நுட்பத்தில் நடிப்பதற்காகவே பயிற்சிபெற்ற நடிகர்கள் தற்போது லண்டன் மற்றும் ஹொலிவுட்டில் பெருகிவருகிறார்கள்.

**கேள்வி : கோச்சடையான் போன்று தொழில்நுட்பம் இணையும் படத்திற்குத் திரைக்கதை எழுதுவதில் தொழில்நுட்ப ரீதியாகச் சிக்கல்கள் உள்ளதா?**

அதைச் சிக்கல் என்று சொல்வதைவிடத் தொழில்நுட்பம் எனும் சிறகுகளை அணிந்து கொண்டு கற்பனை உலகில் பறந்து வருவது என்று நவீன அழகியலாகப் பார்க்கலாம். வெர்ச்சுவல் உலகில் படைக்கப்படும் ஒரு 3டி அனிமேஷன் படத்தில் கதாசிரியருக்குக் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகளுக்கு எல்லையே கிடையாது. இதனால் கதாசிரியன் தனது கற்பனைக் குதிரைக்குக் கடிவாளம் பூட்ட வேண்டிய அவசியமில்லை. வெர்ச்சுவல் உலகின் தேவைகளுக்காகத் திரைக்கதாசிரியர் வெர்ச்சுவல் உலகைப் படைக்கவிருக்கும் தொழில்நுட்பக் குழுவுடன் பயணிக்க வேண்டியது மிக மிக முக்கியமானது.

**கேள்வி : கோச்சடையான் படத்தின் மூலம் இந்தியாவில் குறிப்பாக தமிழில் மோசன் கேப்சரிங் அனிமேஷன் படங்கள் பெருக வாய்ப்பிருக்கிறதா?**


கோச்சடையான் ரசனையில் மட்டுமல்ல, பட உருவாக்கத்திலும் பல புதிய கதவுகளைத் திறந்துவிடுவது உறுதி. முக்கியமாக ஆசியாவின் மிகப்பெரிய நடிகர்களில் ஒருவராக இருக்கும் ரஜினிகாந்த், டிஜிட்டல் தொழில்நுட்பத்தை நம்பி, தனது ரசிகர்களை திருப்திப்படுத்த நினைத்தது, இந்த நவீனத் தொழில்நுட்பத்துக்குக் கிடைத்த வெற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஜே.கே

# கந்தசாமியும் கலக்ஸியும்

## அத்தியம் - 1
## இது ஆரம்பம் அல்ல முடிவு



### அறிவியல் தொடர் கதை

*(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)*

இன்னும் சரியாக மூன்று மணித்தியாலங்களில் பூமி தூள் தூளாக வெடித்து அழியப்போகிறது என்று, காலை ஐந்து மணிக்கு எழும்பி,சுருட்டை பற்றவைத்துக் கொண் டிருக்கும் கந்தசாமிக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. கந்தசாமிக்கென்ன? நம்மட நல்லூர் கந்தசாமிக்கு கூட தெரியாது. அவன் கோயிலுக்கு மேலாக, மெல்ல மெல்ல உதித்துக்கொண்டு இருக்கும் சூரியனுக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

உங்களுக்கும் இன்னமும் மூன்று மணி நேரமே அவகாசம் இருக்கிறது. இந்த அவசரத்திலும் இந்த தொடரை வாசித்தே தீருவேன் என்றுநினைத்தீர்களானால் உங்களுக்கு கந்தசாமி பற்றி முதலில் சொல்லியாக வேண்டும். அப்புறமாக கலக்ஸி பற்றி பார்ப்போம். ஸோ இரத்தினச் சுருக்கம்!

யாழ்ப்பாணம், வைமன் றோட்டு சந்தியில் இருக்கும் பாரதியார் சிலையிலிருந்து கந்தர்மடம் நோக்கி போகும் அரசடி வீதியில், ஒரு ஐந்து ஆறு வீடுகள் தள்ளிப்போனால் ஒரு இராணுவ முகாம் வரும். அந்த முகாமுக்கு பக்கத்து வீட்டில்தான் கந்தசாமி வசிக்கிறார். மூத்த மகன், 87ல் ஈரோஸ் அரசடி கிளை துணைப்பொறுப்பாளர் ஈசனுடைய கன்னத்தைப்பொத்தி அடித்த, மறுநாளே [illegible]டா சென்றுவிட்டான். இரண்டாண்டு இடைவெளியில் ஏனைய பெடியங்களையும் கந்தசாமி கனடாவுக்கும் சுவிஸ°க்குமாக அனுப்பிவிட்டார். மனிசி செல்வராணி மூன்றாவது மருமகளின் பிள்ளைப்பேறு பார்க்கபோன சமயத்தில் கேஸ் போட்டு அங்கேயே செட்டில். கந்தசாமிக்கு வெளிநாடு போகும் எண்ணம் துளியும் இல்லை. என்ன ஆனாலும் இங்கேயேதான். அதுவும், தான் போனால் ஆமி தன்னுடைய காணியை எடுத்துவிடுமோ என்ற பயம். கந்தசாமி கச்சேரியில் காணிப்பதிவு பிரிவிலே கிளார்க்காக இருந்து ஓய்வுபெற்றவர். மாசி கழிந்தால் வயது அறுபது சமாதான நீதவான், இன்றைக்கு கோண்டாவில் பள்ளிக்கூட வருடாந்த விளையாட்டு போட்டிக்கு பிரதமவிருந்தினர். கந்தசாமி விளையாட்டுப்போட்டியில்தான் பேச வேண்டிய உரையை மனசுக்குள் கொஞ்சம் மீட்டிக் கொண்டே, கப்பிக்கிணற்றில் தண்ணி அள்ளி முகம் அலம்பிவிட்டு, முகத்தை துடைத்து கொண்டே நேரே குசினிக்கு போகிறார்.

நிற்க! இந்த இடத்தில் பூமியில் வசிக்காத உயிரனங்களுக்காக சில பின்னணித் தகவல்களை கொடுக்கவேண்டியிருக்கிறது.

எங்கோ ஒரு மூலையில், நவநாகரிகத்தின் சுவடே தெரியாத, பிரபஞ்சத்தின் மேற்கு பகுதியில், அதிகம் கவனிக்கபடாத கலக்ஸி ஒன்று இருக்கிறது. பால்வீதி என்று அதற்கு ஒரு பெயர் இருப்பது கூட உங்களுக்கு தெரிந்திருக்க சாத்தியமில்லை. அதிலே ஒரு குட்டி மஞ்சள் நிற நெருப்புக்கல், தன் பாட்டுக்கு அனிச்சையாக அசைந்து திரிந்தபடி டெலஸ்கோப்பால் பார்க்கும்போது கூட அதிகம் சுவாரசியம்கொடுக்காத, அந்த நெருப்புக்கல்லில் இருந்து சிதறிய குறுணிக்கல் ஒன்று, சுமார் 98மில்லியன் மைல்கள் தூரத்தில் அந்த நெருப்புக்கல்லையே சுற்றி சுற்றி வந்துகொண்டிருக்கிறது. நீலமும் பச்சையுமாக இருந்த கல்லுக்கு ஒரு சரியான பெயரை கூட பிரபஞ்சத்தின் வழிகாட்டி நூலான "பிரகராதி" குறிப்பிடவில்லை. அவ்வளவுக்கு எந்த பிரயோசனமுமற்ற புறக்கணிக்கப்பட்ட இந்த கிரகத்திலும் உயிரினங்கள் இருக்கின்றன. அதிலும் குரங்கில் இருந்து கூர்ப்படைந்த, பிரபஞ்சத்தின் பொதுவான மனிதர்களை ஒத்த சாயல் கொண்ட, வெறும் ஆறறிவு மட்டுமே கொண்ட உயிரினங்கள். தாமே முதன்மையான உயிரிகள் என்று அவற்றுக்கு ஒரு பெருமை. "சிந்திக்கும் விலங்கு" என்றெல்லாம் டாக்லைன் கொடுக்கும் ஆராய்ச்சியாளர்களை கொண்ட இனம் இது. இன்றைய திகதிக்கு ஐபாட்டை(iPad) கூட தங்களின் கண்டுபிடிப்புக்களின் பெருமையாக சொல்லக்கூடிய பின்தங்கிய விலங்கினம். தமக்கு தாமே பெயர், பட்டம் வைத்துக்கொள்ளும் நடிகர்கள் உலக நாயகன், சூப்பர் ஸ்டார் என்றெல்லாம் சொல்லுபவர்களுக்கு, இரண்டு வீடுகள் தள்ளி இருக்கும் இன்னொரு கிரகத்துக்கு போவதற்குள் தாவு தீர்ந்துவிடும். இந்த புத்திஜீவிகள் தம் கிரகத்துக்கு பூமி என்றும், தாம் சுற்றிவரும் நட்சத்திர நெருப்புக்கல்லுக்கு சூரியன் என்றும், தமக்கு தாமே மனிதர்கள் என்று அழைத்துகொள்வார்கள்.

இந்த பூமியில் இரண்டு வகையான புத்திசாலிகள் இருக்கிறார்கள். முதலாமவர் கவிஞர்கள், "வானத்து நிலவெடுத்து வாசலில் வைக்கட்டுமா?"என்று காதலிக்கு அதிகம் செலவில்லாத பரிசுகளே கொடுப்பார்கள். அவர்களில் ஒரு சிலர் விஞ்ஞானிகளும் கூட. வைரமுத்து என்ற ஒரு விஞ்ஞானி கவிஞர், "காலங்கள் எங்கு செல்லும், அதுவரை செல்வோமா? காலங்கள் தீரும் இடத்தில் புது ஜென்மம் கொள்வோமா?" என்ற சிந்தனையை ஒரு முறை கக்க, அதை எப்படியோ "ஓரியன்" சேர்ச் என்ஜினில் கண்டு பிடித்து, அதை அடிப்படையாக கொண்டே காலத்தத்துவத்தை, பிரபஞ்சம் போற்றும் விஞ்ஞானியான துரைராஜா "சொர்க்கம் ஆராய்ச்சி கழகத்தில்" சில வருடங்களுக்கு முன்னர் கண்டுபிடித்தார்.

பூமியில் இருக்கும் இரண்டாவது வகை புத்திசாலிகள் கொஞ்சம் வித்தியாசமானவர்கள். இவர்கள் ஐடியாக்களை கொடுப்பது மட்டுமல்லாமல் பரப்புவதிலும் திறமைசாலிகள். ஒரு இனம் அடிமைப்பட்டு கிடந்தால், "உடனே புறப்படு, பொங்கியெழு, புரட்சி" என்று கோபாவேசத்தோடுமுகநூல் என்னும், பூமியில் குப்பைகள் போடுவதற்காக அமைப்பட்ட தொட்டிலில் எழுதிப் போடுவார்கள். அந்த குப்பையை கிளற வரும் இன்னொரு புத்திசாலிக்கு அதைப்பார்த்தவுடன் கோபம் இன்னமும் தலைக்கேறி அதே குப்பையை தன் தொட்டிலில் திருப்பி போடுவார். இப்படி குப்பை வீட்டுக்கு வீடு பரவி விடும். புரட்சி எல்லா குப்பை தொட்டிகளிலும் வெடிக்க, இன்னொரு புத்திசாலி அது குப்பையே இல்லை.அப்படி போட்டது தவறு என்பான். அவன் குப்பையும் சீக்கிரமே பரவி, குப்பைகளை போட்டவர்கள் குழாயடி சண்டையில் இறங்குவார்கள். ஒரு கட்டத்தில் வேறொரு புத்திசாலி புதிதாக இன்னொரு குப்பையை போட, பழைய குப்பையை எல்லோரும் மறந்துவிடுவார்கள். இப்படி குப்பைகள் எல்லா இடமும் பறந்து, குப்பைகளுக்கு மத்தியிலேயே வாழும் இனமாக பூமியின் மனித இனம் மாறிவிட்டது. ஆக பிரபஞ்சங்களில் ஒரு சில ஆய்வுகளுக்கு ஐடியா கொடுக்கும் அதி புத்திசாலி கவிஞர்களும், புரட்சிகளை நாளாந்தாம் உருவாக்கும் முகநூல் போராளிகளும்இருந்தாலும், இந்த இரண்டையும் பார்த்து "விரும்பும்" பூமி மனிதர்களே இங்கே அதிகம்.

இப்போது புரிகிறதா? பிரபஞ்சத்தின் கவனத்தை ஏன் இந்த பூமி கிரகம் அதிகம் ஈர்க்கவில்லை என்று.

பூமியில் எப்போதுமே ஒரு பிரச்சிசனை இருக்கிறது. யாருமே இங்கே சந்தோஷமாக இருந்ததில்லை. பிறந்ததிலிருந்து இறக்கும் வரை . இறக்கும் வரை என்று சொல்லும் போதுதான் ஞாபகம் வருகிறது. இந்த பூமியில் வாழும் உயிரினங்களுக்கு ஒரு வித "இறப்பு" என்ற வியாதி இருக்கிறது. மண்டையில் படாரென்று ஒன்று போட்டாலோ, அணுகுண்டு ஒன்றை தூக்கி போட்டாலோ தங்கள் சிந்தனை சக்தியை இழந்துநீர்த்துப்போய்விடுவார்கள். பிரபஞ்சம் முழுதும் வசந்த காலங்களில் ஜல தொஷத்தோடு வரும், காதல் என்ற சின்ன வியாதிக்கு கூட இறந்துவிடுபவர்கள் இங்கே இருக்கிறார்கள். அதில் தப்பினாலும், ஒரு எண்பது வயதில் மூப்பு என்ற வியாதி இறப்பை ஏற்படுத்திவிடும். இந்த சின்ன வியாதிக்கு வைத்தியம் கண்டுபிடிக்காமல் இன்னமும் திணறிக்கொண்டு இருப்பதால், எல்லோருக்கும் தாம் எப்படியும் இறந்துவிடுவோம் என்று தெரிந்தாலும் அது எப்போது என்ற பெரும் குழப்பம். எல்லாவற்றையும் அதற்குள் அனுபவிக்கவேண்டுமே என்ற ஏக்கம். விளைவு? அவசரம், தேடல் என சந்தோஷத்தை தேடி தேடி அலைவார்கள். இடைக்காலத் தீர்வாக வெறும் பச்சை தாள்களை இடம்மாற்றி, அதன்மூலம் சந்தோசம் அடையும் விசித்திர ஜந்துகள் இவை. ஆனால் அதிலும் யாருக்கு அதிகம் தாள்கள் கிடைக்கின்றன?என்ற போட்டியில் கிடைக்கின்ற அந்த அற்ப சந்தோஷமும் பறிபோய்விடும். அதனால் இந்த "கவலை" என்ற விஷயம் எப்போதுமே பூமியில் இருக்கும். பூமியின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பான ஐபாட்டை(iPad) வைத்திருப்பவர்களுக்கு கூட அந்த கவலை. சிலர் தாமெல்லாம் மரத்திலேயே தொங்கிக்கொண்டு இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சினை இல்லை என்பார்கள். இன்னும் சிலர், தரைக்கு வராமல் கடலிலேயே இருந்திருக்கலாம் என்பார்கள். ஆ.. இவர்கள் செய்த ஆராய்ச்சியில் தாம் எல்லோருமே ஆரம்பத்தில் கடல் உயிரிகளாகஇருந்து, கூர்ப்படைந்து இப்படி மாறியிருக்கிறார்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் கண்டுபிடித்தவரை கல்லால் அடித்துகொன்றுபோட்டிருந்தார்கள்! கிரேசி பீபிள்ஸ்!

இன்று வியாழக்கிழமை! "ஒரு மாறுதலுக்கு நீ சக மனிதனிடம் நல்லவனாக இருந்து பாரேன். எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்" என்று சொன்னவனை இவர்கள் சிலுவையில் அறைந்து தொங்கவிட்டு சரியாக ரெண்டாயிரம் வருஷம்!ஃ யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு முன்னால் இருக்கும் "அபிராமி விலாஸில்" கிழங்கு ரொட்டி சாப்பிட்டுக்கொண்டு இருக்கும்போது தான் மைதிலிக்கு இந்த விஷயம்உறைத்தது. பதில் கிடைத்துவிட்டது. ஏன் மனிதர்கள் சந்தோசம் இல்லாமல் அலைகிறார்கள் என்ற கேள்விக்கான பதில் உலகை சந்தோஷமாக வைத்திருக்கக்கூடிய சூட்சுமம். ரொட்டியில் முழுசாக கிடந்த பச்சைமிளகாய் . கடிபட்ட தருணத்தில் கிடைத்த ஞானோதயம்."ச்சா .. என்ன ஒரு ஐடியா, இன்றைக்கே முகநூலில் போடவேண்டும்" என்று மைதிலி நினைத்து கையில் இருந்த சாம்சங் கலக்ஸி போனில் முகநூல் அப்ளிகேஷனை ஒன் பண்ணினாள். "பயமில்லாமல் இதை போடலாமா? என்னையும் சிலுவையில் அறையமாட்டார்கள் தானே?கோத்தாவுக்கு பிடிக்குமா? ம்கூம் .. இது தான் சரியான தருணம் .. சந்தோசம் எவ்வளவு ஈசியாக கிடைக்ககூடிய விஷயம் .. அதுக்கேன் இவ்வளவு குத்துப்பாடு?". மைதிலி யோசித்துக்கொண்டே எழுதும்போதுதான்,

எங்கிருந்தோ வந்த ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தி பூமியை தாக்கி பூமி வெடித்து சிதறி சுக்கல் நூறானது! (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை

சிறுகதை

மதி



"அன்றைய நாள் இப்படி நடக்கு மென்று மது கொஞ்சம் கூட நினைத்துப் பார்த்திருக் கவில்லை. கோயிலுக்குச் சென்று வந்த மது சிறிது நேரம் படுத்துறங்கி விட்டு வேலைகளைப் பார்க்கத் தொடங்கி னாள். மாமியார் பக்கவாதம் வந்த தனது கணவனின் அலுவல்களைப் பார்க்கச் சென்று அவருடன் ஊர்த் தொளவாரம் எல்லாம் அளந்து இங்கு வர மதுவும் வீட்டு வேலை களை முடித்திருக்கவும் நேரம் சரியாக இருந்தது"

"பாட்டுப்பாடவா? பார்த்துப் பேச வா?"

நாலு மணிக்கு அலாரம் அடிக்கக் கண் விழித்த மது "கடவுளே இன்றைய நாள் நல்ல நாளாக அமைய எங்களோடு துணையாக இருந்து எங்களை வழிப்படுத்த வேணும்" என்ற மனப்பிரார்த்தனையோடு எழுந்தாள். எழுந்தவள் "இன்று என்ன சாப்பாடு..." என்ற போது தான் அவளுக்கு அன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை என்பது ஞாபகத் துக்கு வந்தது. கிழமையிலே ஆறு நாளும் விடிய விடிய நாலுமணிக்கு எழும்பி சின்னவனுக்கு என்று பால் கலந்து வைத்தவள் அன்றை நாளுக் கான வேலைகளை இயந்திரம் போலச் செய்யத் தொடங்குவாள். சமையல் தொடங்கிய இடையில் ஐந்து மணியள வில் பிள்ளையை எழுப்பி காலைக் கடன் முடிக்கவைத்து சாப்பாடுகொடுத்து பாடசாலை வானில் ஏற்றி விட்டபோது தான்'அப்பாடி' என்றொரு பெருமூச்சு விட முடிந்தது. தானும் வேலைக்குச் செல்ல ஆயத்தமாகி சின்னவனையும் ஆயத்தம் செய்து 'நேசறியில்' கொண்டு போய் விட்ட பின் அலுவலகம் சென்று கைவிரல் இயந்திரத்தில் விரலை வைக்க நேரமும் சரியாக இருந்தது. அங்கிருந்து அடுத்த ஓட்டம் களப்பணிக் காக .களவேலை முடித்து திரும்பி வந்து நாலுநாலரைக்கெல்லாம் கையெழுத் திட்ட பின் அலுவலக வேலைகளை சரிபார்த்து விட்டு வீடு செல்ல இருட்டி விடும். அதன் பின் இரவுச்சாப்பாடு செய்து பிள்ளைகளுக்கு கொடுத்து அவர்களுக் குப் பாடமும் சொல்லிக் கொடுத்து அவர் களை உறங்க வைக்கவே பாதி இரவு கழிந்துவிடும். அதன் பிறகு கணவருக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் உணவு கொடுத்து தானும் பகல் பகலாக வேலை செய்த களைப்பால் சாப்பிட மனமில்லாது தேநீரை அருந்திவிட்டு உறங்கச் செல் வாள். நித்திரையோ அவளுக்கு நரக லோகமாக இருக்கும் .தனது வாழ்க்கைச் சம்பவங்கள் அத்தனையும் போட்டு அலசி அலசியபடியே உறங்கிப் போவாள்.

இந்த திட்டமிட்ட அட்டவணையில் இருந்து இன்றாவது கொஞ்சம் பிந்தி எழும்புவோம் என்றால் அதற்கு உடல் அனுமதித்த போதும் மனம் அனுமதிக்க வில்லை. எழுந்தவள் இன்று தாங்கள் இருக்கின்ற நிலையையும் பல வருடங் களுக்கு முன்னர் இருந்த நிலையையும் எண்ணிஎண்ணி மனம் வருந்திய வாறே அன்றைய தன் கடமை களைச் செய்யத் தொடங்கினாள்.

அன்றைய நாள் இப்படி நடக்கு மென்று மது கொஞ்சம் கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை. கோயிலுக்குச் சென்று வந்த மது சிறிது நேரம் படுத்துறங்கி விட்டு வேலைகளைப் பார்க்கத் தொடங்கினாள். மாமியார் பக்கவாதம் வந்த தனது கண வனின் அலுவல்களைப் பார்க்கச் சென்று அவருடன் ஊர்த் தொளவாரம் எல்லாம் அளந்து இங்கு வர மதுவும் வீட்டு வேலை களை முடித்திருக்கவும் நேரம் சரியாக இருந்தது. அவள் சின்னவன் நித்திரைக்காக அழுது கொண்டிருந்த போது சாப்பாடு கொடுத்து உறங்க வைத்து விட்டு தானும் சிறிது நேரம் கண்ணயர்ந்தவள் திடுக்கிட்டு எழுந்தாள். அப்போது தான் கணவன் வந்திருப்பதைக் கண்டு அவனுக்கு மதியச் சாப்பாடு பரிமாறிவிட்டு குழந்தை களையும் கூட்டிக் கொண்டு தோட்டப்பக்கம் சென்றாள். குழந்தைகளோடு தானும் சேர்ந்து விளையாடி விட்டு இருட்டும்போது வீடு வந்து சேர்ந்தார்கள்.

வந்தவுடன் குழந்தைகள் இருவரும் தங்களுக்குள் சண்டையிடத் தொடங்கினார் கள். அப்போது எங்கிருந்தோ வந்த கணவன் ருத்ர தாண்டவம் ஆடத் தொடங்கினான். "பிள்ளைகள் பசியில கத்துதுகள். எனக்கும் பசிக்குது. எல்லோருக்கும் சாப்பாடு கொடுக்க வேண்டும் என்று உனக்குத் தெரியாதோ. அம்மா தானே இங்கே எல்லா வேலையும் செய்யிற நீயோ சும்மா தானே இருக்கி றாய்" என்று தனது பலம் முழுவதையும் திரட்டிக் கத்தினதோடு மட்டுமல்லாது அவளுக்குப் பக்கத்தில் கிடந்த தும்புத்தடியை எடுத்து அவளுக்கு தாறுமாறாக அடித்தான். அவளோ அடியையும் பொருட்படுத்தாமல் "கொஞ்சம் பொறுங்கோ உடனே உங்களுக்குச் சாப்பாடு தாறன். பிள்ளைகளுக்குக் கொடுத்திட்டன்..." என்றவளை நோக்கி "என்ன் திருப்பியா கதைக்கிறாய்?" என்று கூறிக் கூறி மேலும் மேலும்அடித்தான். வலியால் துடித்துக் கொண்டு "நானும் பிள்ளையளும் எங்கே யாவது போறம்..." என்று கத்தினாள். "எங்கையாவது போய்த் தொலையுங்கோ" என்று இருவரும் கதைக்க சண்டை பெருத்தது. இவற்றைக் கேட்ட மாமன் "நேற்று ஒன்டுமில்லாமல் வந்தனீ என்ன கதைக்கிறாய்" என்று கத்தினார்.

அன்றிலிருந்து பல நாள்கள் வெளியே அடைப்பில்லாத தாழ்வாரத்தினுள் குழந்தை களையும் வைத்துக் கொண்டு தூங்கினாள். தனியே போய் வாழ்வதே தனக்கும் பிள்ளை களுக்கும் நல்லது என்று நினைத்தாள். இந்த நாள்களுக்குள் அவனை யாரும் சமாதா னப் படுத்தவுமில்லை. அவளுக்கு யாரும் உதவி யும் செய்யவில்லை. அவள் தனது தாய்வீட்டுக் கருகில் உள்ள ஓர் வீட்டில் கடவுள் அருள் புரி வார் எனும் தன்னம்பிக்கையோடு குடியேறி னாள். அவளுக்கு யாரும் எந்த உதவியும் செய்யவில்லை. ஆனாலும் அவள் தனது தன்னம்பிக்கையைக் கைவிடவில்லை. தனி வாழ்க்கை முட்டி மோதி போராடத் தொடங்கியது. ஐந்து மாதங்களுக்கு மேலா கியும் அவளுக்கு எந்த வேலையும் கிடைக்க வில்லை. தன்னிடம் இருந்தவற்றைக் கொண்டு தான் அரைவயிறும்,கால் வயிறு முமாக இருந்து கொண்டு தனது பிள்ளை களுக்கு முழுநிறைவான உணவு கொடுத் தாள். பலமுயற்சிகளின் பின் ஒருவாறு அவளுக்கு ஒரு சிறிய வேலை கிடைத்தது.

வருமானம் போதாமல் இருந்தாலும் பிள்ளைகளுக்காக அவற்றை ஏற்கத் தயாரா னாள். சில காலங்கள் சந்தோஷமாக வேலை செய்தவளுக்கு விற்கும் பொருள்களுக் கேற் பவே சம்பளம் தரப்படும் என்று அந்த வியா பார நிறுவனம் அறிவிக்கவே சற்றுத் தடு மாறித்தான் போனாள். ஆனாலும் அவ ளுக்கு சில நாள்களுக்குள் கை நிறையச் சம்பளத்துடன் இன்னொருவேலை கிடைத் தது. இப்போதெல்லாம் பழையதைப் பற்றி யாராவது கதைத்தால் உடனே "தயவுசெய்து அதைப்பற்றி கதைத்து என்னைப் பாழாக்க விரும்பவில்லை. குறைநினைக்க வேண்டாம்" என்றுகூறி அவ்விடங்களைத் தவிர்த்து விடுவாள். இதுகள் "வாழவும் விடாதுகள் சாகவும் விடாதுகள்" என தனக் குள்ளேயே நினைத்துக் கொள்வாள். "முடிந் தது முடிந்து விட்டது இனி எப்படி உன் பிள்ளைகளை நல்லாய் வைச்சிருக்கலாம் என்று யோசி" என்று அடிக்கடி சொல்லும் ஓர் உறவும் தனக்கிருப்பதை எண்ணி பெருமைப்படுவாள்.

பணத்துக்காக உறவு உள்ளவர் களை இணங்கண்டு வேதனை கொண் டாலும், "எங்களுக்கும் காலம் வரும் எல் லோரும் தேடி வருவினம்" என்ற தன்னம் பிக்கை குறையாது வாழ்கிறாள். பிள்ளை அருண்ட சத்தத்திற்கு எழும்பியவள் இனிப் படுத்தாள் சோம்பலாயிடும் என்ற நினை வுடன் பிள்ளைக்குப் பால் கரைத்தாள். பிள்ளையார் கோவில் மணி கேட்கவும் "கடவுளே எல்லாம் நல்லதாக நடக்க எம்முடன் துணையிருக்க வேண்டும்" என்றுகும்பிட்ட படிநாளாந்த கடமையைச் செய்யத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிரிமாருடன் காதலில் மூழ்கிய 26 பெண்கள் பாப்பரசருக்கு கடிதம்

இத்தாலி மற்றும் வேறுசில நாடுகளைச் சேர்ந்த 26 பெண்கள், தாம் பாதிரியார்களுடன் காதல் வயப்பட்டவர்கள் என்றும் இன்னும் காதலில் இருப்பவர்கள் என்றும் பாதிரியார்களுடன் உறவினைத் தொடங்க விரும்புபவர்கள் என்றும் பாப்பரசர் பிரான்சிஸ்"க்கு கடிதம் எழுதியுள்ளனர்.

தமது வாழ்க்கையை முழுமையாக வாழ முடியாதுள்ளமையின் வலி-யைப் பற்றி அவர்கள் இந்தக் கடிதத்தில் கூறியுள்ளனர்.

இதுபற்றி பேசுவதற்காக பாப்பரசரை சந்திக்க வேண்டும் என்றும் அந்தப் பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரம்மச்சாரிய பாரம்பரியத்தை பாப்பரசர் பிரான்சிஸ் முன்னர் ஆதரித்து வந்திருக்கிறார். ஆனால், அவரது நிலைப்பாடு மாறக்கூடியது என்பதை 2010 ஆம் ஆண்டில் எழுத்துமூலம் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் புரிவதற்காக தனது பதவியை துறந்த முன்னாள் ஆயர் ஜெரோமினோ பொடெஸ்டாவின் விதவை-மனைவியை, அவர் கடந்த நவம்பரில் உயிரிழக்கும் வரை பாப்பரசர் சென்று பார்த்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

# தரப்படுத்தலில் கூகிள் முதலிடம்

பிரபல தேடல் இயந்திரமான கூகுள் சர்வதேச தரப்படுத்தலில் முதற்தர நிறுவ னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மில்வர்ட் பிரவுன் என்ற நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட் ஆய்வுகளின் பிரகாரம் பெறுமதியின் அடிப்படையில் அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் கூகுள் முதலிடத்தை பெற்றுள்ளது.

சர்வதேச அளவில் நூறு நிறுவனங்களின் விபரங்களை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில் 158.84 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தக பெறுமதியை கூகுள் கொண்டுள்ளதுடன் 147.88 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியை கொண்டு அப்பிள் நிறுவனம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

ஐபிஎம் நிறுவனம் 107.54 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியையும் மைக்ரசொப்ட் நிறுவனம் 90.19 அமெரிக்க டொலர் பெறுமதியையும் கொண்டு மூன்றாம் நான்காம் இடங்களை பெற்றுள்ளன.

இதேவேளை மெக்டொனல்ஸ் நிறுவனம் 85.71 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஐந்தாம் இடத்திலும் கொக்கா கோலா நிறுவனம் 80.68 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஆறாம் இடத்திலும் உள்ளன.

ஒரு நிறுவனம் பெறுகின்ற வருடாந்த வருமானம், வாடிக்கையாளர்களிடம் உள்ள நன்மதிப்பு, புத்தாக்கம் ஆகியவற்றை கொண்டு வர்த்தக பெறுமதி மதிப்பிடப் படுகிறது.



இந்தியாவில் முதல் முறையாக மும்பையைச் சேர்ந்த ஒரு உணவு நிறுவனம், ஆளில்லா விமானம் மூலம் 'பீட்சா' வை வழங்கிச் சாதனை படைத்துள்ளது.

வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள மும்பையில் குறிப்பிட்ட நேரத்திற்குள் உணவை விநியோகம் செய்வதற்கான மாற்று வழியை சிந்தித்த பிரான்சிஸ்கோஸ் பிட்சாரியா தான் இந்தச் சாதனையை எட்டியுள்ளது.

'ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தும் அமேசான் திட்டங்களை நாங்கள் படித்திருக்கிறோம். அதன்படி, சோதனை முறையில், மும்பையில் உள்ள எங்கள் உணவகத்தில் இருந்து 1.5 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு வாடிக்கையாளருக்கு 11ஆம் திகதி பீட்சாவை வெற்றிகரமாக அனுப்பியுள்ளோம்' என்று உணவகத்தின் தலைமை நிர்வாகி மைக்கேல் ரஜனி கூறினார்.

சில ஆண்டுகளில் இந்த ஆளில்லா விமானங்கள் வழக்கமான பயன்பாட்டுக்கு வரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஆளில்லா விமானமும் 2000 டொலர் விலை கொண்டது என்று குறிப்பிட்ட ரஜனி, தற்போது இந்த விமானங்கள் 400 அடி உயரத்திற்கு மேலே பறக்க அனுமதி இல்லை என்றும், அடுத்த ஆண்டு அமெரிக்காவின் மத்திய விமான போக்குவரத்து அதிகார சபையின் விதிமுறைகள் இதற்கு உதவி செய்யும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

# இது ஜப்பானின் தயாரிப்பு

ஜப்பானிய உடை வடிவமைப்பாளர் தாகயுகி புகுசுவா பிரத்தியேக ரீசேட் உள்ளாடைகளை வடிவமைத்து உள்ளார்.

இவர் விதவிதமான டிசைன்களில் மற்றும் கலர்களில் மார்பக படங்களுடன் கூடிய ரீ-சேட்டுகளைத் தயாரித்துள்ளார்.

பெண்களின் வசதிக்காகவே இத்தகைய டிசைனில் தான் ரீ-சேர்ட்கள் தயாரித்ததாக ஜப்பானிய வடிமைப்பாளர் கூறியுள்ளார்.

15 வருடமாக வடிவமைப்புத்துறையில் இருந்துவரும் தாகயுகி புகுசுவா இந்த வடிவமைப்பைச் செய்துள்ளார்.

ஜப்பானில் தற்போது இந்த புதிய வகை ஆடைகள் மிக வேகமாக பரவி வருகிறது. விதவிதமான கலர்களில் வெளிவந்துள்ள இந்த ஆடை இன்னும் சில நாள்களில் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் என கூறப்படுகிறது.



# நாய்களுக்கான திருமண சேவை

நாய்களுக்கான திருமண சேவை ஒன்று பெரு நாடு, லிமாவில் உள்ள தேவாலயமொன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்தநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தேவாலயத்தில் சுமார் 40 நாய்களுக்கு இதுவரை திருமணம் செய்யப்பட்டுள்ளது. தேவாலயத்திலிருந்து நாய்களின் உரிமையாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக திருமண அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டதன் பின்னரே நாய்கள் திருமணத்திற்காக அங்கரிக்கப்பட்டு அங்கு அழைத்துச் செல்லப்படுகின்றன. திருமணத்தின்போது நாய்கள் அலங்கரிக்கப்பட்ட நிலையில் ஒரு பெட்டியிலிருந்து வெளியில் எட்டிப்பார்த்தவாறு குரைத்த நிலையில் காணப்படுகின்றன. இனிவரும் காலங்களில் திருமணம் முடித்த நாய்கள் இரண்டும் எவ்வித பிரச்சினையும் இன்றி சந்தோஷமாக இருக்க முடியும் என்று அங்கு வந்திருந்த ஒரு நாயின் உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். நாய்களை செல்லப்பிராணியாக வளர்ப்பவர்கள் அதன்மீது பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதற்கே இத்தகைய திருமண வைபவம் செய்யப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். நாங்கள் திருமணத்திற்காக மத அனுஷ்டானங்கள் செய்வதை கேள்வியுற்றுள்ளோம். அத்தகைய அனுஷ்டானங்களில் நாய்களும் பங்கேற்றுள்ளன. ஆனால், நாய்களுக்கான திருமண சேவையை கேள்விப்படுவது இதுவே முதல் தடவை என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



பிரான்ஸ் நாட்டில் உள்ள நைஸ் நகரில், சர்வதேச கேன்ஸ் திரைப்பட விழா நடைபெற்று வருகிறது. இதில் ஹிந்தி நடிகைகள் சோனம் கபூர், மல்லிகா ஷெராவத் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது, அவர்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

சிவப்புக் கம்பள வரவேற்றின் போது, லி ஓரெல் பாரிஸ் அமைப்பின் தூதுவரான நடிகை ஐஸ்வர்யா, விலை உயர்ந்த கை வைக்காத கவுன் மொடல் உடை அணிந்து, சிவப்பு லிப்ஸ்டிக் மேக்கப், கண்களில் புருவத்துக்கு திருத்தமாக ஐ-லைன் செய்து கொண்டு சிவப்புக் கம்பளத்தில் ஒய்யாரமாக நடந்து வந்ததார்.

இது அங்கிருந்த புகைப்படக் கலைஞர்களைப் பரவசப்படுத்தியது. அனைவரையும் கவர்ந்தது. வெளிநாட்டுப் புகைப்படக் கலைஞர்கள் ஐஸ்வர்யா ராய்யின் ஒய்யார நடையை தங்கள் கமராவுக்குள் எடுத்துக் கொண்டனர்.

ஐஸ்வர்யா குழந்தை பெற்றுக் கொண்ட பின்னர் சினிமாவில் நடிக்காமல் ஒதுங்கிக் கொண்டார்.

4 வயது குழந்தைக்கு தாயான ஐஸ்வர்யா முந்தைய நிகழ்சிகளை விட தற்போது புதிய தோற்றத்துடன் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகான தோற்றத்துடன் என்றும் உங்களை வெளிக்காட்டுங்கள்

இளமைப்பருவத்திலிருந்து வாழ்க்கையின் மாறுபட்ட பல நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கும் பெண்ணா னவள் இவ்வனைத்து நிகழ்வுகளிலும் அழகாக இருப்பின் அது அவள் பெற்ற அதிஷ்டமாகும். என்றும் மறையாத அழகினை வாழ்நாள் முழுவதும் பெற்றுத்தரும் Facia உங்கள் அழகினை என்றும் பாதுகாக்கின்றது. Facia சருமச்சுருக்கம், சருமத்தில் நிற மாற்றம் ஏற்படுவதை தடுத்து சருமத்திற்கு பளபளப்பான பொலிவினை சேர்க்கின்றது. Facia தலைமுடி உதர்தலை தடுத்து தலைமுடிக்கு போஷணையை வழங்கி வலுமிக்க அழகான கூந்தலை உங்கள் உரிமையாக்குகின்றது.

Facia உங்களது நகங்களை அழகாக்கின்றது. Facia சருமம், தலைமுடி மற்றும் நகங்களின் அழகிற்கு தேவையான பிரதான போஷணை மூலக்கூறுகள் பலவற்றினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை உற்பத்தியாகும்.

Facia இல் அடங்கியுள்ள இயற்கை மூலக் கூறுகள்

கடல் கொலஜின் (Marine Collagen)- உடலின் அனைத்து பாகங்களினதும் பராமரிப்பிற்கு தேவையாக பிரதான மூலக்கூறாக இதனை வகைப்படுத்த முடியும்.

திராட்சை விதை சாறு (Grape Seed Extract)- சருமச்சுருக்கம், தலைமுடி உதிர்தல் போன்றவற்றை தடுக்கின்றது.

பயோடின்- தலைமுடிக்கு சிறந்த பராமரிப்பினையும் சக்திமிக்க நகங்களையும் பெற்றுத்தரும். இதற்கு மேலதிகமாக பல இயற்கை மூலக் கூறுகள் உள்ளடங்கியுள்ளது. Facia அவுஸ்திரேலியாவின் CMPS தனியார் நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்றது. அவுஸ்திரேலியாவின் TGA தரச் சான்று மற்றும் உலக சுகாதார அமைப்பின் தரச் சான்று (WHO - GMP) Facia உற்பத் திக்கு கிடைத்துள்ளது. இயற்கை மூலக்கூறுகளை மட்டுமே பயன்படுத்தி தயாரிக்கப்படும் உற்பத்தியான Facia இலங்கை ஆயுர்வேத திணைக் களத்தில் பதிவு செய்யப்பட்ட இயற்கை உற்பத்தியாகும்.

TGA பதிவிலக்கம்: 67513










வாழ்க்கையில் எது நிகழ்ந்த போதிலும்,
உங்களை கைவிடாத நாம்
AIA இன்ஷுவரன்ஸ் - நிஜவாழ்க்கையினை அறிந்த, உங்களின் காப்புறுதி நிறுவனம்.

aialife.com.lk

AIA
THE REAL LIFE COMPANY

## நம்பிக்கையும் பொறுப்பும் மிக்க தங்க கடன் சேவை
## செலான் வங்கியில்...



செலான் தங்கநகை அடகுச் சேவை

24 கரட் தங்கப் பவுண் ஒன்றுக்கு ரூ. 31,600/-

தலைமுறைகளை இணைப்பது தங்கம். அந்த தங்கமான உறவைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.
உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக நாங்கள் இருக்கின்றோம். வசதியான நாளொன்றில்
எங்களிடம் வாருங்கள். உங்கள் தங்கமான உறவை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இன்றே வாருங்கள்... நம்பிக்கையும் பொறுப்பும் மிக்க சேவையின் வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளுங்கள்...!

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கிக் கிளைகளில் அல்லது, 011 200 88 88 www.eseylan.com

செலான் வங்கி

## தற்போது சம்பத் வங்கியிடமிருந்து உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிகூடிய அடகுத்தொகை..!

## கெரட் 24 ற்கு 30,000/-
## கெரட் 22 ற்கு 27,500/-

மாதாந்தம் 1.5% குறைந்த வட்டி வீதமே அறவிடப்படும்!

சம்பத் அடகுச் சேவை

நாடு முழுவதிலுமுள்ள சம்பத் வங்கிக் கிளைகளில் தவணை முறையில் செலுத்தமுடியும்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

...ings AA-(lka) 0112 30 30 50 www.sampath.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 மே 28 ஆம் திகதி வெளியிடப்பட்டது.